695 695
30 JAN 1933
MADRAS

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4 | செந்தமிழ் | மாத சஞ்சிகை | இதழ் 2

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1351 ஷவ்வால்மீ 1933 பிப்ரவரிமீ

உள்ளடக்கம். பக்கம்.

1. ஸூரத்துல் புரூஜ் 2. நாயக வாக்கியம் ...41—45
3. காலமாறுபாடும் முஸ்லிம்களின் நிலைமையும் ... 46
4. முஸ்லிம் அரசர்களும், சீரிய உலமாக்களும் ... 48
5. பண்டைய இஸ்லாமியத் தொழில் முறை ... 52
6. தென் அமெரிக்காவில் இஸ்லாத்தின் முன்னேற்றம் ... 56
7. பத்திரிகாத் தொழிலின் இரு அரும் முன்மாதிரிகள் ... 58
8. திருக் குர்ஆன் மொழிபெயர்ப்பு ... 63
9. கான்ஸ்டாண்டிநோபிளின் வெற்றி ... 64
10. செய்தித்திரள் ... 67
11. ஈதுல் பித்ர் 12. பித்ரு ஸதக்கா ...70—71
13. ஈதுப்பெருநாள்தொழுகை 14. நஞ்சிருர்கட்டு! 73—75
15. கலப்பு விவாகப் பிரசாரத்தின் சூழ்ச்சி ... 77
16. புகழுரை 17. ஆசிரியர் குறிப்புகள் ...79—80

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

சந்தா நேயர்கட்கு!

மாண்புமிக்க நண்பீர்!

நமது அரும் மாசிகையைத் தாங்கள் அன்போடு ஆதரித்து வருவது பாராட்டத்தக்கதே யாகும். உங்களிலனேகரின் சந்தா சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்திருக்கிறது.

சிலோனுக்கு வி. பி. செய்வதில் பல கஷ்டங்களிருக்கின்றது. சிங்கப்பூர், பினங், மலாய் எஸ்டேட் முதலிய இடங்களுக்கு வி. பி. - யே கிடையாது. ஆகவே சிலோனிலுள்ள சந்தாதார்களில், 1932-க்குச் சந்தா செலுத்தாமலிருக்கும் ஒரு சிலர், தங்களின் பாக்கியையும், நடைபெறுவதாகவுள்ள 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தாவையும் முன் பணமாக அனுப்பிவைக்கும்படி கோருகிறோம். அவ்வாறே சிலோனிலுள்ள இதர சந்தாதார்களும் 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தா ரூபாயை முன்பணமாக நமக்கு நேரிலாகிலும், நமது கொளும்பு எஜெண்டு ஜனுப் அ. மு. க. ஆலிம் சாஹிப் (220, 2-வது கராஸ் ஸ்டீட்) அவர்களிடமாகிலும் செலுத்திவிடும்படி கோருகிறோம்.

மலாய் எஸ்டேட்டிலுள்ளவர்கள் கிள்ளான் ஜனுப் K. A. பகீர் முஹம்மது சாஹிப் அவர்களிடமும் சிங்கபூர் வாசிகள் ஜனுப் M. முஹம்மது ஷரீப் சாஹிப் (439, நார்த் பிரிட்ஜ் ரோடு) அவர்களிடமும், செலுத்திவிடுவோர்களென எதிர்பார்க்கின்றோம்.

தவிர, நம் நாட்டிலுள்ள இதர சந்தாதார்களும் தங்கள் சந்தாவை முன்பணமாக அனுப்பிவைத்து மாசிகையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

மானேஜர்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 JAN 1933
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1351 ஷவ்வால்மீ 1933 ளூ பிப்ரவரி மீ	இதழ் 2

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (நாம் இதனை ஆரம்பிக்கின்றோம்.)

ஸூரத்துல் புரூஜ்.

1. நக்ஷத்திரங்களையுடைய வானத்தின் மீது பிரமாணமாக,

2. மேலும் (கூலி கொடுப்பதற்காக) வாக்களிக்கப்பட்ட நாளின்மீது, (பிரமாணமாக)

3. மேலும் சமுகம் கொடுப்பதன்மீதும், சமுகம் கொடுக்கப்படுவதன் மீதும் (பிரமாணமாக)

4. கிடங்குகளையுடையவர்கள் நாசமாய் விட்டார்கள்

5. விறகுகளைப்போட்டு எரிக்கப்பெறும்படியான நெருப்பையுடையவர்கள்

6. அவர்கள் அவற்றில் (அருகாமையில்) உட்கார்ந்திருக்கும்போது,

7. அவர்கள், நன்னம்பிக்கை கொண்டவர் (மூமினீன்)களுக்கு விளைவித்தவற்றை தங்கள் முகருபிலேயே செய்துகொண்டிருந்தார்கள்

8. மேலும் அவர்கள் (மூமின்கள்) புகழுக்குரியவனும் சங்கைவானுமாகிய அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டதற்காகத்தான் அவர்கள் (எதிரிகள்) அவர்களிடம் (மூமின்களிடம்) பழிவாங்கினார்கள்

9. வானங்களுடையவும் பூமியுடையவும் அதிகாரம் அவனிடமிருக்கிறது ; மேலும் அல்லாஹ் சகல வஸ்த்துக்களையும் அறிந்திருக்கிறான்

10. திட்டமாக எவர்கள் நன்னம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் துன்பத்தை விளைவித்துவிட்டுப் பிறகு அதை விட்டு மன்னிப்புத் தேடாமலிருந்து விடுகிறார்களோ, அவர்களுக்கு நரகவேதனை யுண்டு, மேலும் அவர்களுக்குப் பொசுக்கும் வேதனை யுண்டு.

11. நிச்சயமாக எவர்கள் (ஈமான்) நன்னம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்தார்களோ, அவர்களுக்கு அதற்குத் தாளால் நதிகள் ஓடிக்கொண்டிருக்கும் (சுவர்க்கம்)

உத்தியாவனங்கள் உண்டு. அது பெரிய ஜய மாகும்.

12. நிச்சயமாக உம்முடைய நாயனின் பிடியானது கடிசானதாக யிருக்கும்

13. நிச்சயமாக அவனே ஆரம்பத்தில் சிருஷ்டிக்கிறான் (மரணித்தபின்னும்) மீள வைக்கிறான்

14. மேலும் அவன் (பாவங்களை) மன்னிக் கிறவனாகவும் நேசிக்கிறவனாகவும் இருக்கி றான்.

15 அர்ஷை உடையவன், தலைமைத் தனமுள்ளவன்.

16. தான் நாடியதைச் செய்தே முடிப் பவன்

17. (முஹம்மதே) உம்மிடம் படையின் செய்தி வந்ததா ?

18. பிர்அவ்ன், தமூத் (இவர்களின் செய்தி கள்)

19. என்றாலும் (காபிர்களோ) நிராகரிப் பவர்களோ, பொய்யாக்கி வைப்பதிலீடுபட் டிருக்கிறார்கள்

20. மேலும் அல்லாஹ் அவர்களை நாநா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டிருக்கின்றான்

21. என்றாலும் அது பெரும் வலுப்பத்தை யுடைய குர்ஆனாக யிருக்கும்

22. பாதுகாக்கப்பட்ட பலகையில் (எழு தப்பட்டு) இருக்கிறது.

[அதாவது, நக்ஷத்திரங்களையுடைய வான த்தின்மீதும், நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுப்பதற்காக வாக்குச் சொல்லப்பட்ட நாளின்மீதும், சமுகங் கொடுப்பது சமுகங் கொடுக்கப்படுவது இவைகளின்மீதும் பிர மாணமாக உம்முடைய நாயனின் பிடியா னது கடிசானதாக யிருக்கும். அவன் எவ னைப் பிடிக்கிறானோ அன்னோன் எவ்வகை யிலும் தப்பித்துக்கொள்ள முடியாது. உல கின்கண்ணும் அவனைத் தாழ்மையாக ஆக்கி விடுகின்றான்; மறுமையிலும் பலவிதமான வேதனையில் சிக்குண்டுழலும்படிசெய்கிறான். அதுபொழுது அவனுடைய எவ்வகையான தந்திரங்களும் பலிக்கமாட்டாது எனவே பெரும் பெரும் பள்ளங்களை வெட்டி அதில் நெருப்புகளை எரித்து ஈமானுடையவர்களை அதில்போட்டு வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தவர்கள் நாசமாய் விட்டார்கள். அவை களையெல்லாம் அல்லாஹ் தஆலா நன்கு அறிந்தே யிருக்கின்றான். ஆகவே எவர்கள் ஈமானையுடைய ஆண்பெண்களுக்குத் துன்பத் தைவிளைவித்து அதற்காகப்பாபமன்னிப்புத் தேடிக்கொள்ளாமலிருக்கின்றார்களோ அவர் களுக்கு மறுமைநாளில் கடிஸான வே தனையும் உலகின்கண் பலவாறான கஷ்ட சங்கடமும் ஏற்பட்டிருக்கின்றது. எவர் கள் ஈமான்கொண்டு அதன்பின் நற்கருமங் கள் புரிகின்றார்களோ அவர்களுக்குமேலான சுவர்க்கானந்தம் அளிக்கப்படும் அது அவர்களுக்கு பெரிய ஜயமாக விளங்கும். அல்லாஹுத ஆலா தான் ஆரம்பத்தில் சகல வஸ்துக்களையும் சிருஷ்டிக்கின்றான் மரணமானபிறகும் அவன் யாவற்றையும் மீளவைப்பான். அவன் பாவங்களை மன்னிக் கிறவனாகவும் நேசிக்கிறவனாகவு மிருக்கிறான். மேலும் சிம்மாஸனத்தின்மீது வீற்று தான் நாடியதைச் செய்கிறவனாகவு மிருக்கிறான். ஏ முஹம்மதே! பிர்அவ்ன், தமூத் இவர்க ளது படையாதாகும்? அவர்களது கதி என்னவாயிற்றென்பது உமக்குத் தெரி யாதா? தெரிந்தேயிருக்கும் ஆனால் பொய் யாக்கிவைக்கும்படியான காபிர்கள் இதனைப் பொய்யாக்கிவைப்பதி லீடுபட்டிருக்கின்றார் கள் அவர்கள் பலவகையிலும் அல்லாஹு தஆலாவின் சக்திக்குத் தாளாலிருக்கின் றார்கள். இது செய்தி கார்மானமாக்கப் பட்ட பலகையில் வெகுகாலத்திற்கு முன்ன மேயே எழுதிவைக்கப்பட்டிருக்கிறது என் பதே.]

இத்திரு அத்தியாயம் மக்கியாம். இது இறக்கிவைக்கப்பட்டதின் காரணமாவது, மக்காவின்கண் நுபுவ்வத்தென்னும் சந்தி ரன் பிரகாசிக்க ஆரம்பித்து அனியாய மென்னும் இருள்நீங்கி வருவதைக்கண்ணுற்ற குரைஷிக்காபிர்கள் மனம் சகியாதவர்களாய் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அள வற்ற கஷ்டத்தைக் கொடுத்ததுமன்றி இஸ் லாம் மதத்தைத் தழுவிவரும் ஏழை முஸ்லிம் களுக்கும் மட்டில்லா தொந்திரை கொடுக்க முற்பட்டார்கள். ஏழை முஸ்லிம்கள் இத னைச் சகியாதவர்களாய் எம்பெருமானார் தயாளகுணசீலர் நபிகள்திலகம் (ஸல்) அவர் களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். அதற்கு எம்பெருமானார் (ஸல்) அவர்கள்,

குப்பார்கள் புரிந்துவரும் கஷ்டசங்கடங்களை சிலநாளைக்குச் சகித்துக்கொண்டிருங்கள்; கூடியசீக்கிரம் ஒருகாலம் வரும் அதில் குறைஷிக்காபிர்கள் உங்கள் முன்னிலையிலேயே தாழ்மை அடைந்தவர்களாகக் காண்பீர்கள் என்க் கூறினார்கள். இதனைக் குப்பார்கள் கேட்டு பரிகாசஞ்செய்ய முற்பட்டார்கள் இதற்காக முஸ்லிம்களுக்குத் தேருதல் சொல்வதற்காகவும், குரும்புத்தனத்தை மேற்கொண்டு பரிகாசஞ்செய்ய முற்பட்டிருக்கும் காபிர்களுக்கு உணர்ச்சிவர்த்தி வைப்பதற்காகவும் வேண்டியே யாம்.

இதன் முந்திய வாக்கியத்தில் நக்ஷத்திரங்களையுடைய வானங்களெனக் கூறி அதைக் கொண்டு சத்தியஞ் செய்திருப்பதில், உலகத்தில் ஏற்படும் பலவாறான மாறுதல்களெல்லாம் ஆண்டவனது வசமிருக்கிறதென்றும், காலமாறுதல்களெல்லாம் அல்லாஹ்தஆலாவின் கட்டளைப்பிரகாரந்தான் உண்டாகிறதென்றும், குப்பார்கள் இவ்வுலகின் அற்பவாழ்க்கையைப் பார்த்து ஏமாந்து போகவேண்டாமென்றும், ஈமானுடையவர்களுக்கு ஏற்படும் பலவாறான கஷ்டசங்கடங்களை அவர்கள் கிறிதுகாலம் சகித்துக்கொண்டிருக்கும்படியும், காலமாறுபாட்டினால் காரியாதிகள் மாற்றமாக ஆய்விடுமென்றும் அல்லாஹுதஆலா அறிவித்திருப்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம்.

இதன் இரண்டாவது வாக்கியத்தில் கூலி கொடுப்பதற்காக வாக்களிக்கப்பட்ட நாளென்று கூறியிருக்கிறான். இதனை மறுமை நாளென்றே தீர்மானித் திருக்கின்றார்கள். அந்த நாளில் நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுக்கப்போவதாக அன்பியாக்கள் மூலம் அறிவித்திருக்கிறான் எனவே அந்நாளில் வானத்திலும் அதிலுள்ள நக்ஷத்திரங்களிலும், பூமியிலும் அதிலுள்ள வஸ்துக்களிலும் பெரியதோர் மாறுதல் உண்டாகி புதிய உலகம் காணப்படும். இவ்வுலகின்கண் அகப்பெருமை கொண்டு மூர்க்கக் குணம்படைத்திருந்தோருக்கு அங்கு தாழ்மையும், இவ்வுலகின்கண் பொருமையைக் கைக்கொண்டு எதிரிகளால் புரியப்பட்டுவந்த அதிக்கிரமங்களைச் சகித்துக்கொண் டிருந்தவர்களுக்கு அங்கு அளவற்ற சங்கை மரியாதைகளும் கிடைக்குமென்றும் தெரிவித்து, இவ்வாறான மாறுதல்களெல்லாம் அல்லாஹுதஆலாவின் அளவற்றசக்தியினால் தான் உண்டாகிறதென அறிவித்திருக்கிறான்.

இதன்மூன்றாவது வாக்கியத்தில்'ஷாஹித்' சமுகங் கொடுக்கும்படியானதென்றும் "மஷ்ஹூத்" சமுகங் கொடுக்கப்படுவதென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, ஷாஹித் என்பது ஜும்ஆவுடைய நாளென்றும், மஷ்ஹூத் என்பது அரபாவுடைய நாளென்றும் வியாக்கியானஞ்செய்திருக்கிறார்கள். எனவே ஜும்ஆவில் பல தெருவிலுள்ளவர்களும் ஒன்று கூடுவதாலும், அரபாவில் பல தேசவாசிகளும் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் சமுகங் கொடுப்பதாலும் இப்பெயரிடப்பட்டிருக்கிறது. இதற்காகத்தான் வாரத்தின் நாட்களில் வெள்ளிக்கிழமை சிறந்ததென்றும், வருஷத்துடைய நாட்களில் அரபாவுடைய நாள் மாக்ஷிமைபொருந்தியதென்றும் ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறதுடன் இவ்விரண்டும் ஒரேநாளில் ஏற்படுவது மாபெரும் புண்ணிய மளிக்கவல்லதெனவும் சிலாகித்துக் கூறப்பட்டிருக்கிறது.

இதன் நான்காவதுவாக்கியத்தில், கிடங்குகளை யுடையவர்கள் நாசமாய்விட்டார்களெனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, சன்மார்க்கத்தின்மீது பகைமை கொண்ட குப்பார்கள் பெரும் ஆழமான கிடங்குகளைத் தோண்டி அதில் விரகுகளை நிறப்பி தீமூட்டி சுடர்விட் டெறியுங்கால் ஆண்டவன்மீது (ஈமான்) நன்னம்பிக்கை கொண்டவர்களைப் பிடித்துவந்து அதில்போட்டுவிட்டுத் தாங்கள் அதற்குச் சூழால் உட்கார்ந்துகொண்டு, ஈமான் கொண்டவர்கள் அந்த நெருப்பில் என்ன செய்கிறார்களென்பதைப் பார்த்துக் கேலிபரிகாசஞ் செய்துகொண்டுமிருந்த காரணத்தினால் அன்னோர் நாசமாய் விட்டார்களென அல்லாஹுதஆலா அறிவிக்கிறான். இவ்வாறானசம்பவம் எவ்விடத்தில் எந்தக்காலத்தில் நடைபெற்றதென கவனிப்போமாயின், எமனில் தூநவாஸ்என்பவனும், ஷாமில் இப்தா மூஸரூமியும், பாரிஸில் புக்தநஸரும் இவ்வாறான அதிக்கிரமங்கள் புரிந்துகொண்டிருந்ததாக சரித்திர வாயிலாய்த் தெரிந்து கொள்கிறோம். தவிர பனூஇஸ்ராயீல்களில் விக்கிரக ஆராதனை ஏற்பட்ட காலத்திலுங் கூட இவ்வாறான சம்பவம் நிகழ்வுற்றதென

இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே எமனில் நடைபெற்ற சம்பவங்களை அரபிகள் நன்கு தெரிந்திருந்தார்கள். அதனைக் கண்ணுற்றவர்களிற் சிலரும் எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலம் வரை ஜீவித்திருந்திருக்கிறுர்கள். ஆகவே குரைஷியர்களும் கிடங்குடையவர்களைப் போன்று ஏழை முஸ்லிம்களுக்குத் துன்பம் விளைத்து வந்ததால் குரைஷியர்களுக்கு நல்லறிவு ஏற்படுவதற்காக அல்லாஹுதஆலா இதனை அன்னேர்க்கு அறிவித்து அக்கொடிய செயலை விட்டுவிலகுமாறு எச்சரிக்கை செய்கிறுன்.

குரைஷிக் காபிர்களுக்கு, கிடங்குகளையுடையவர்களின் அடாத செயல்களையும், அவர்களுக்கு உலகின்கண் ஏற்பட்ட கஷ்டங்களையும், அவர்களது சிம்மாஸனங்கள் பரிப்பட்டுப் போனதையும் அவர்கள் மறுமையில் அவமானமடைவதையும் நல்லவிதமாக விளக்கிக்காட்டி, எவர்கள் ஈமானையுடைய ஆண் பெண்களுக்குக் கஷ்டங்கள் கொடுத்து அதைவிட்டு மன்னிப்புத் தேடிக்கொள்ளாமலிருக்கின்றுர்களோ, அவர்களுக்கு மறுமையில் நரகவேதனை ஏற்படுவதுடன் உலகின் கண்ணும் பலவாருன கஷ்ட நஷ்டங்கள் உண்டாகி அதனுல் மனநோவினை அடைந்தவர்களாக யிருப்பார்கள்; எவர்கள் (ஈமான்) நன்னம்பிக்கை கொண்டு வணக்கம் புரிவது, தான தர்மஞ்செய்வது, உற்ருர் உறவினருடன் கூடி வாழ்வது முதலிய நலவான காரியங்களைப் புரிந்தார்களோ அன்னேருக்கு சுவனபதியின் கண் அழகிய பூங்காவனங்கள் ஏற்பட்டிருக்கின்றன ; இதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் மாபெரும் ஜயமாகும் எனக் கூறுகின்றுன்.

மேலேகூறப்பெற்றதில், ஈமானையுடையவர்களுக்கு கஷ்டம் விளைவிப்பவர்களுக்கு நரக வேதனை உண்டென்றும், (ஈமான்) நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு மேலானசுவர்க்கம் கிட்டுமெனவும் தெரியப்படுத்தியபின் இவ்விரண்டிற்கும் உவமானமாக ஆண்டவனுடைய சக்திகளினின்று இரண்டுவிதமானதைக் குறிப்பிட்டு, உம்முடைய நாயனின் பிடியானது கடிசானதாகும்; அவன் யாரைப் பிடிக்கின்றுனே அவன் விடுதலையடைய முடியாதென்றும், அவனை உலகின் கண்ணும் தாழ்மையுடையவனுகச் செய்து விடுகிறுன்; மறுமையிலும் பலவாருன கடிசான வேதனைகளை அனுபவிக்கச்செய்கிறுன்; அதுபொழுது மானிடன் புரியும் எவ்விதத்தந்திரமும் பிரயோசனம் தராது எனவும், ஆண்டவன் அபாரசக்தியினையுடையவனுக யிருப்பதால் அவன் ஆரம்பத்தில் படைத்ததுபோல் மரணத்திற்குப் பின்னும் மீளவைப்பவனுகயிருக்கிறுன் எனவும் கூறியிருக்கின்றுன்.

இதன் பன்னிரண்டாம் வாக்கியத்தில், உம்முடைய நாயனின் பிடியானது கடிஸானதாக யிருக்குமென்று கூறப்பட்டு அதற்காக கிடங்குடையவர்களின் சரிதையை உவமானமாகக் காட்டப்பட்டிருக்கிறது. பின்னும் அவ்விஷயத்தை ஞாபகம் மூட்டுவதற்காக, அரபியர்களுக்கும் வேதக்காரர்களுக்கும் நல்லவிதமாகத்தெரிந்திருக்கக் கூடிய பிர் அவ்னின் கூட்டத்தாரும், தமூத்கிளையார்களும் செய்தமாறு பாடான செயல்களையும், அவர்களுக்கு ஆண்டவனுல் அனுப்பப்பட்ட பலவாருன கஷ்ட சங்கடங்களையும் ஞாபக மூட்டுவதற்காக, ஏமுஹம்மதே! பிர்அவ்ன், தமூத் இவர்களின் கூட்டத்தார்களுக்கு யாது நிகழ்வுற்றதென்பது உமக்குத் தெரியாதா? எனக் கூறிவிட்டு, நல்லவிதமாகத் தெரிந்தேயிருக்கும் என அவனே அறிவித்திருக்கின்றுன்.

குரைஷிக்காபிர்கள் ஆண்டவனை ஒப்புக்கொண்டிருந்ததுடன் விக்கிரஹங்களையும் தங்களுக்கு சிபாரிஷ் செய்பவைகளெனக்கருதியிருந்தார்களாதலின் மேலே கூறப்பட்டுள்ள சம்பவங்களைக்கேட்டவுடன், ஆண்டவன் உண்டென்பதை அறிந்து கொள்ளாமலும் அவனது அபாரசக்தியினை ஒப்புக்கொள்ளாமலுமா யிருக்கிறேம்? எதற்காக இவ்வுதாஹரணங்களை யெல்லாம் எங்களுக்குக் கூற வேண்டுமென வினவுவற்கு முற்பட்டார்கள் இதற்கு விடையளிப்பான் வேண்டி "காபிர்கள் வாயளவில் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் அவர்களது மனதில்மாறு செயல்களே குடிகொண்டிருக்கிறது; அவர்கள் ஆண்டவனது பிடியானது கடிசானதாக யிருக்குமென உறுதிகொள்வார்களாயின் ஈமான் கொண்டவர்களுக்கும், நபி அவர்

களுக்கும் ஒருக்காலும் தொந்திரை கொடுக்கவேமாட்டார்கள் ஆதலால் அவர்கள் புரியும் காரியமானது அல்லாஹுத ஆலின் அபார சக்தியினை மறுக்கக்கூடியதாக யிருப்பதால் தான் அவர்கள் தங்கள்தீய செயல்களினின்று பின்னணிக்கு வரும்படி செய்வதற்காக வேண்டியே பலவாறுன நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற தென்பதை நன்கு தெரிந்துகொள்ளுகிறோம்.

(வல்லாஹ் அஃலம்)

நாயகவாக்கியம்

லைலத்துல்கத்ர்

"எவனொருவன் நன்மையை ஆதரவு வைத்தவனாக கத்ருடைய இரவில் விழித்து வணக்கம் புரிகின்றானே அவனுடைய பாவங்களடங்கலும் மன்னிக்கப்பட்டுப் போகிற" தென எம்பெருமானார் சத்தியசீலர் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்கள். எனவே அவ்விரவானது அளவற்ற மகிமையுடைய இரவாகுமென்பதையும், அதற்கு நெகிராக வேறு எந்த இரவும் கிடையாதென்பதையும் நன்கு தெரிந்துகொள்கிறோம். இதனுல்தான் கத்ருடைய இரவின் பொருட்டால் இதர இரவுகளுக்கு மகிமை ஏற்பட்டிருக்கிறதென்றும், இரவுகளிலெல்லாம் கத்ருடைய இரவானது மேலான இரவாகுமென்றும் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

கத்ருடைய இரவில் ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் மலக்குகளின் ஒரு பெரும் கூட்டத்துடன் இப் பூவுலகின்கண் இறங்கி ஆண்டவனை வணங்கிக்கொண் டிருக்கும் ஒவ் வொருவரையும் சந்திக்கின்றார்கள்; ஈதுப் பெருநாள் வந்தவுடன் அல்லாஹ்த்ஆலா மலக்குகளிடம் இன்னோர் விஷயமாய் பெருமை பாராட்டிப் பேசி ஏமலக்குகளே! தன் வேலையை நிறைபூர்ணமாய்ச் செய்து முடித்த அடியானுக்கு என்ன கூலி கொடுப்பதெனக் கேட்கின்றான். அதுபொழுது மலக்குகளெல்லாம் அவனுக்குத் தக்க கூலி அளிக்க வேண்டுமெனக் கூறுகின்றார்கள். உடனே அல்லாஹுதஆலா மலக்குகளை நோக்கி, என் அடியான் தம்மீது ஏற்பட்டிருந்த கடமையை நிறைவேற்றிவிட்டு கூலி பெறுவதற்காக வந்திருக்கின்றான்; நான் அவனது வேண்டுதல்களை எல்லாம் ஒப்புக்கொண்டு அவன் பாவங்களை மன்னித்துவிட்டேன் எனக் கூறுகின்றான். ஆகவே அதுகாலை அடியான்தன் பாவங்கள் யாவற்றும் மன்னிக்கப்பட்டவனுகத் தமது இல்லமேகின்றான் என சற்குண சீலர் சமத்துவத் தூதர் (ஸல்.) கூறியிருக்கின்றார்கள்.

ஈதுப்பெருநாள் தொழுகை

ஈதுப்பெருநாள் தொழுகைக்காக மானிடன் புறப்படுவானுகில், அதுபொழுது என் அடியான் என் கட்டளையைச் சிரமேற்றுங்கி ரமலானில் நோன்பு நோற்றுவிட்டு என்னிடம் கூலி பெருவதற்காக வருகின்றான்; ஆதலின் அவனுடைய பாவங்கள் யாவற்றையும் மன்னித்துவிட்டேன் என அல்லாஹுத ஆலா கூறுவதாக சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் அன்றிவித்திருக்கிறார்கள்.

பித்ர் சத்கா

சதக்கத்துல் பித்ரை நிறைவேற்றி வையுங்கள்; அதனைத் தொழுகைக்குச் செல்லுமுன் கொடுங்கள் என எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பித்ருடைய ஸதகாவானது நோன்பில் ஏற்படும்பலகெடுதிகளைப் போக்கிவைப்பதற்குத் தக்க ஔஷதமாகவும் ஏழைகள் காலக்ஷேபம் செய்துகொள்வதற்கு ஏற்றனவாகவுமிருக்கிறதென எம்பிரான் நபிய்யகரீம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கின்றார்கள். தவிர சதக்கத்துல் பித்ரானது ஒவ்வொருவரின்மீதும் கடமையாக யிருப்பதால் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மக்காவின் பல பகுதிகளுக்கும் ஒரு ஆளை அனுப்பி அதனை நிறைவேற்றும்படி அறிவித்து வருமாறு செய்திருக்கிறார்கள்.

காலமாறுபாடும் முஸ்லிம்களின் நிலைமையும்

தற்கால இப்பூப்பரப்பின்கண் தோன்றியுள்ள வியாபாரச் சீர்கேடும், அபரிமிதமான டாம்பீகச் செலவுகளும் மாபெரும் ஐசுவரியங்களை யுடைய ராஜாங்கங்களின் அஸ்திவாரங்களை எல்லாம் அசைத்துக் கொண்டிருக்கிறதென்பது வெள்ளிடை. இதனாலேயேதான் அமெரிக்கா ஐரோப்பா முதலிய செல்வம்படைத்த நாடுகளிலெல்லாம்சிக்கனத்தைக் கைக்கொள்ள பகீரதப்பிரயத்தனஞ் செய்யப்பட்டுவருகிறது எனவே ஆங்கெல்லாம் நாணயம் பத்திரப்படுத்தப்படும்முறையும், தங்கம் சேகரஞ்செய்யும் விதமும் அபரிமிதமாய்க் கையாளப்பட்டு வருகிறது. ஏற்கனவே கடனின் சுமையைத் தாங்க முடியாது தடுமாறிக்கொண்டிருந்த எழுமைத்தனமுடைய இந்தியாவோ, இதுகாலை பெரும் கஷ்டத்தி லகப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே முழு உலகின் செல்வநிலையும் சீர்கெட்டுப்போயிருக்கிறதென தைரியமாய்க் கூறலாம். பொதுவாய் இந்தியாவினுடைய சகலவருவாய்களிலும் குறைவேற்பட்டிருந்த போதிலும் வேலையில்லாத் திண்டாட்டமென்னும் தொத்துநோய் ஒருபக்கல் பல்லாயிரக் கணக்கானோரை பீடித்து நிற்கின்றது. இன்னிலைமையில் சொற்பவரும்படியுடன் அபரிமிதமான ராஜ செலவுசெய்வதி லீடுபட்டிருக்கும் முஸ்லிம்கள், சற்று நிதான சிந்தனையோடு தாங்கள் செய்யும் வீண்விரயத்தை நோக்குவார்களாக. ஆகவே ஒவ்வொருவரும் தம் தம் நிலைமையை ஒழுங்குபடுத்திக்கொள்ள முற்பட்டு தொழிலி லீடுபடவும் ஐசுவரியங்களைப் பத்திரப்படுத்தவும் முயற்சிக்க வேண்டியது அத்தியாவசியமாகும் என்பது வெள்ளிடை. தவிர நம் சமுகம் கல்வியிலும் ஐசுவரிய அபிவிர்த்தியிலும் உலகின் கண் காணப்படும் இதரசமுகங்களைப் பார்க்கினும் வெகுதூரம் பின்னணியில் நிற்பதன் காரணம் இன்னதெனத் தெரிந்து அதனை நிவர்த்திக்க முற்படாது வீணில் வருந்திக் கண்ணீர் வடிப்பதால்மட்டும் எவ்விதப் பிரயோசனமு மேற்பட்டுவிடாதென்பது திண்ணம்.

இவண் நஞ் சமுகத்தைப் பாதாளத்தில் தாழ்த்திவரும்வீண்செலவுகளிற் சிலவற்றைக் குறிப்பிடுவோம். பொதுவாக இந்தியாமுழுதிலும் வதியும் சுமார் 8-கோடி முஸ்லிம்களுக்கு அனுச்சாரப்பழக்கவழக்கங்களில் ஏற்படும்செலவுசுமார் 56-கோடிரூபாய் எனவும், வீண் விவகாரங்களில் ஏற்படும் செலவு சுமார் 24-கோடி எனவும் மதிப்பிடப்படுகிறது. இதுவன்றிசொந்தமாக நம் சென்னைமாகாணத்தை எடுத்துக்கொண்டு அதி லுள்ள முஸ்லிம்களின் நிலைமையை கவனிப்போமாகில், இங்குள்ள முஸ்லிம்கள் சம்பாத்தியஞ்செய்வதில் இதரமாகாணங்களிலுள்ளவர்களைப் பார்க்கினும் எவ்வகையிலும் பின்னடைந்தவர்களாக யில்லை. இன்னிலைமையில் முஸ்லிம்களின்ஸ்திதி மிகச் சீர்கேடடைந்ததாகவே இருப்பதைக் காண்கின்றோம் எனவே மாதமொன்றுக்கு 40, 50—வருவாய் வரக்கூடிய ஒருமுஸ்லிம் மாதம் 15, 20 சம்பாத்தியஞ் செய்யக்கூடிய ஒரு ஹிந்துவினிடம் கடன் வாங்கும்படி நேரிடுகிறது. சொற்ப சம்பாத்தியமுள்ள ஹிந்து தான் உண்டுதின்று முஸ்லிமுக்கு ஆதாயத்தின்பேரில் கடனும் கொடுக்கின்றான். ஆனால் முஸ்லிமோ, தமது வருவாயாக உள்ள 40, 50-ரூபாயையும் செலவு செய்துவிட்டு மேலதிகமாகக் கடன்வாங்கிச்செலவு செய்வதற்குள்ள நிர்ப்பந்தத்திற்காளாய் விடுகிறான். ஈதெல்லாம் முஸ்லிம்கள், வருவாய்

செலவு இவ்விரண்டையும் சீர்தூக்கிப்பார்க் காத தாலேற்படும் கேடுகளென்றே தீர்மா னிக்கவேண்டி யிருக்கிறது. சதாவும் அவர்க ளின் வருவாயைவிட செலவுகளே மிதமிஞ் சியதாக யிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் தினமும் ஏற்படும்செ லவுகளைக் கணக்கிடுவது கஷ்டமாக யிருந்த போதிலும், சாதாரண மக்களிலனேகர் தே யிலைபானம், சுருட்டுபீடி, வெற்றிலை பாக்கு போன்ற அற்ப சொற்ப வஸ்துக்களில் செல வதை குறைந்த திட்டத்துடன் கவனிப்போ மாக. நம் சென்னை மாகாணத்தில் வதியும் சற்றேறக்குறைய 32 லக்ஷம் முஸ்லிம்களில் 10-லக்ஷத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் ஒருநாள் முழுதும் ஒரேதடவை தேயிலைபான மருந்தி அதற்காக அரையணு செலவிடுவ தாக வைத்துக்கொள்வோமாயின், அந்த 10-லக்ஷம் நபருக்கும் தினம் 32,250-ரூபாயும் மாதத்திற்கு 9,37,500-ரூபாயும்வருடத்திற்கு 1,1406250-ரூபாயும் செலவிடவேண்டியிருக் கிறது. சுருட்டு, பீடி வெற்றிலைபாக்கிற்காக தினம் காலணு செலவாவதாகக் கணக்கிட்ட போதிலும் அவ்வகையில் நாளொன்றுக்கு 15,625-ரூபாயும் மாதத்திற்கு 4,68750-ரூபா யும் வருடமொன்றுக்கு 5,703125-ரூபாயும் செலவாய்க்கொண்டிருக்கிறது. நாம் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்ப்போமாகில், இக் கணக்கு மிகக் குறைந்ததென்ற தீர்மானத் துக்கே வருவோம். இச்சொற்பச் செலவைக் கொண்டு வேறு செலவுகளை வகுத்துப் பார்த்து நம் சமூகம் நாசமென்னு படுகுழி யின் பக்கல் எவ்வளவுதூரம் விறைந்து சென் றுகொண்டிருக்கிறதென்பதை யூகிக்கக் கட வோமாக.

மேலும் சிலகாலத்திற்குமுன் முஸ்லிம் களில் பூஸ்திதியுடையவர்கள் கடனில்லாது உண்டு உடுத்திக் காலங்கழித்து வந்தார்க ளென்பதையும்,இதுகாலைஏற்பட்டுள்ள அபரி மிதமான மிதமிஞ்சிய வீண் டாம்பிகச்செலவு களிலும் வீண் சடங்குகளை நிறைவேற்றுவதி லும் அவர்கள் ஈடுபட்டதின் காரணமாகத் தங்கள் பூமியை அடமானம் வைத்துவிட்டு வட்டி கொடுக்கவும் முடியாது பரிதபிக்கிறார் கள் என்பதையும் நன்கு தெரிந்துகொள்கி றோம். எனவே முஸ்லிம்களின் மூதாதைகள் அரும்பாடுபட்டு கஷ்டத்துடன் சம்பாத்தி யஞ் செய்துவைத்திருந்த ஐசுவரியங்களுக்கு இன்னோரால் அழிவேற்பட்டதற்குக் காரணம் யாதாகுமென யூகித்துப் பார்ப்போமாகில், நம் சமூகம் வீண்சடங்குகளை நிறைவேற்று வதிலும் மிதமிஞ்சிய செலவுகளை அபரிமித மாய்ச் செய்வதிலும் ஈடுபட்டிருப்பதே யாகு மென நன்கு தெரிந்துகொள்கிறோம். இவ்வா றான க்ஷீணதிசைக்குப் பின்னுமா முஸ்லிம் கள் தங்கள் செல்வநிலைமையின்மீது கவனஞ் செலுத்தாதிருக்கின்றனர்? அந்தோ! நேற்று அதிகாரஞ் செய்துகொண்டிருந்த முஸ் லிம் சமூகம் இன்று எழுமை என்னும் படு குழியில் விழுந்து அவஸ்தைப்பட்டுக்கொண் டிருக்கிறது. ஆனால் முஸ்லிம்கள் தங்கள் ஆழ்ந்த நித்திரையை விட்டெழுந்து சற்று நிதானத்தோடு சிந்தனை செய்துபார்த்துத் தங்கள் நிலைமையைச் சீர்படுத்திக் கொள்வ தற்கு முற்படாது இன்னுஞ் சற்றுநா ளிருப் பார்களாயின் கஷ்டத்துடன் காலங்களிப் பதற்குள்ள நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும்படி நேரிடுமென்பது திண்ணம். ஆகவே நம் முஸ்லிம்கள் முன்னேற்ற மடைவதற்கு ஐசுவரியங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசிய மாகும். அவ்வாறு தனத்தைச் சேகரித்துக் கொள்வதற்கு சிக்கனத்தைக் கைக்கொள் ளுதல், வருவாயை அபிவிர்த்தி செய்து கொள்வது ஆகிய இரு வழிகளே பிரதான மாகும். எனவே குறைந்தது மாதச் செல வில் ஒரு ரூபாயைச் சிக்கனப்படுத்தியும், 5-ரூபாயை வருவாயில் அதிகப்படுத்தியும் வரவேண்டும். வியாபார நிலை சீர்கேடடைந் திருக்கும் இக்காலை, வருவாயை அதிகப்படுத் திக்கொள்ள முடியாதிருக்குமாயின் குறைந்த பக்ஷம் செலவினத்தில் மாதம் ஐந்து ரூபாயை யாகிலும் மீதப்படுத்திக் கொள்ளவேண்டும் உலகமுழுதிலுமுள்ள பெரும்பெரும் ராஜாங் கங்களெல்லாம் சிக்கனத்தை அனுஷ்டிக்க முற்பட்டிருக்கும் இக்காலை, முஸ்லிம்கள் மட் டும் தங்கள் வீண் செலவுகளை விட்டுவிடுவதை அகவர்வமெனக் கருதுவது மதியீன மன்றோ! ஆனால் எத்தனை காலத்திற்குத் தான் இவ்வாறான வீண் கனவுகள் கண்டு கொண்டிருக்கப் போகிறார்களென்பது தான் நமக்குப் புலனாகவில்லை. ஆகவே நமது சமு கம் டாம்பீகச் செலவு முதல் அற்ப வீண் செலவுகள் உள்பட யாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு சீர்திருத்த முன்னணிக்கு வருந்

காலந்தான் சாலச்சிறந்த காலமென்பதை நஞ்சோதிரர்கள் நன்குணர்ந்து அதற்காகு மானதைச் செய்ய முற்படுவார்களாக. உஷார்! உஷார்!! உஷார்!!!

முஸ்லிம் அரசர்களும், சீரிய உலமாக்களும்

முஸ்லிம் கலீபாக்கள், சீரிய உலமாக்களைப் பெரிதும் பாராட்டி கௌரவப்படுத்தி வந்ததன் காரணமாய், பெரும்பாலும் வியவகாரங்களில் அவ் வுலமாக்களுடைய ஆலோசனை பெற்றே நடந்துகொள்வார்கள். ஆகவே அரசாங்கக் காரியாதிகளிலுங்கூட உலமாக்களுக்கு அதிக சம்பந்தமிருந்து வந்துளது.

சிறப்பின் மிக்க உலமாக்கள் இத்துணை தூரம் கண்ணியம் புரியப்பட்டு வந்ததின் பிரதான காரணம் யாதெனின், அக்கால கலீபாக்கள் சுயமே கல்விச்செல்வத்தில் சிறந்த பூமான்களாயிருந்து வந்ததின் காரணமாக உலமாக்கள் அன்னோரால் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தார்கள்.

முஸ்லிம் கலீபாக்களில் இற்றைநாள் வரை எந்த கலீபாவும் கல்வியறிவில்லாதவராய்த் தோன்றியது கிடையாது. ஒவ்வொரு கலீபாவும் குறைந்தபக்ஷம் சன்மார்க்க ஷரீஅத்தின் கல்விகளிலேனும் ஞானமுடையவராய் இருந்தே வந்திருக்கின்றார். உதாரணமாக, அப்பாஸிய்யா வர்க்க கலீபாக்களில், கலீபா மாமூனுர்ரஷீத் அவர்கள் ஷரீஅத்துடைய கல்வியிற் றேர்ந்தவர்களா யிருந்ததினூடே, தத்துவ சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலியவற்றினுமெல்லாங்கூட நன்கு தேர்ச்சிப் பெற்ற நிபுணராயிருந்து வந்துள்ளார்கள். மேலும் அந்துலுஸ் வர்க்க கலீபாக்களில் ஹிக்கம்பின் நாஸிர் என்பவரும் மிகப் பெரும் ஆலிமாகவும் தேர்ச்சிப் பெற்ற பாஜிலாகவுமிருந்து வந்துள்ளார்.

சிறப்பு மிக்க உலமாக்கள்

உலமாக்களுக்குக் கண்ணியமளிப்பதில் இதரர்களைவிட கலீபா ஹாரூனுர் ரஷீதவர்கள் மேன்பாடுடையவரா யிருந்தார்கள். உதாரணமாய் ஓர்முறை அவர்கள், அந்தகரா யிருந்த அல்லாமா அபூமுஆவியா என்னும் பெரியாரை விருந்துக்கழைத்திருந்தபோழ்து தாங்களே அப்பெரியாரது கரத்தையலம்பிச் சுத்தஞ் செய்து உபசரித்தார்கள்.

கலீபா ஹாரூன் அவர்களது ஆட்சி காலத்தில் பிரசித்திப் பெற்ற இருபெரும் ஆலிம்களிருந்து வந்தனர். அவர்களில் ஒருவர் பெயர் ஹஜ்ரத் கஸாயீ என்பதும், மற்றவர் பெயர் முஹம்மத் பின்ஹஸன் என்பதுமாகும். கலீபா ஹாரூனவர்கள் அவ்விருப் பெரியார்களையும் தங்களது சிம்மாசனத்துக் கெதிரே உபாசனங்களளித்து உட்காரவைத்துக்கொண்டு, தாம் எழுந்தால் தமக்கு மரியாதை செய்வான்வேண்டி அவர்கள் எழுந்து நிற்கவேண்டிய அவசியமில்லை யென்றும் கட்டளை யளித்திருந்தார்கள்.

அதே கலீபா ஹாரூனுடைய காலத்தில் ஹதீது ஆராய்ச்சித் துறையில் ஹஜ்ரத் இப்னு அனஸ் அவர்கள் மிகச் சிறந்தோராகவும், அக்காலத்தினருக்கே ஓர் இமாமாகவுமிருந்துள்ளார்கள். ஒருமுறை கலீபா அவர்கள் அவ்விமாமை நோக்கி, "தாங்கள் எம் இல்லமேகி எனது குமாரர்களுக்குக் கல்வி போதித்துக் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்கு இமாமவர்கள், கலீபாவை நோக்கி "கல்வியானது தானே யாரையும் தேடிக்கொண்டு போகாது" என்று கூறிவிட்டார்கள். அதன்பின் கலீபா அவர்கள் கல்வியின் உயர்வை உணர்ந்து தம் குமாரர்களாகிய இளவரசர்களையே ஹஜ்ரத் இப்னு அனஸ் அவர்களுடைய சமுகத்துக்கு அனுப்பி வைத்து கல்வி கற்று வரும்படி செய்தார்கள். இதுவன்றி பலசமயம் கலீபா ஹாரூனவர்களும் இப்னு அனஸ் அவர்கள் வீட்டுக்குச் சென்று வருவார்கள்.

தவிர ஹஜ்ரத் இப்ராஹீம் மூஸலீ, ஹஜ்ரத் கஸாயீ, நஹ்வீ, அப்பாஸீ, முதலிய பிரபல உலமாக்கள் மரணமடைந்த சந்தர்ப்பங்களில், கலீபாஹாரூனவர்கள், மாமூனுர்ரஷீத்

அவர்களை அழைத்து "நீவிரே சென்று அவர்களது ஜனஸாவின் தொழுகையை நிறைவேற்றி வைத்து வருவீராக" என்று கட்டளையிட்டு அனுப்பிவைத்தார்கள்.

மேலும் கலீபா மாமூனுர் ரஷீதும் உலமாக்களை அதிகமாய் கௌரவப்படுத்தி, பாராட்டி, உபசரித்து மேதை மரியாதைகள் புரிந்து வந்ததோடு உலமாக்களுடன் மிகவும் நெருங்கிய அன்பரேபோன்று வாழ்ந்து வந்தார். கலீபாவுடைய தர்பாரில் ஒவ்வோர் செவ்வாய்க்கிழமையும் சபைகூடும் அச்சபையில் உலமாக்கள், அறிஞர்கள் யாவரும் வந்து கலந்துக்கொண்டு ஒவ்வொருவரும் கல்வி சம்பந்தமாகவுள்ள தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தடையின்றித் தாராளமாய் எடுத்துரைத்து வாதிக்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

கலீபா மாமூனும், காஜீயஹ்யாவும்

தர்பாரில் சேகரமாகும் கல்விமான்களின் சபையில், கலீபாமாமூனவர்களுடைய முட்டியும் உலமாக்களுடைய முட்டியும் நெருங்கியிருக்கும் வண்ணம் உட்கார்ந்து பரஸ்பரமாய்ச் சம்பாஷிப்பார்கள்; சில சமயம் இராக்காலங்களில் கல்விமான்கள் கலீபா மாமூனுடைய சயன அறையிலேயே கலீபாவுக்குப் பக்கத்தில் தூங்குவதுமுண்டு. உதாரணமாய் ஒருமுறை காஜீயஹ்யா அவர்கள், கலீபாவுடைய சயன அறையில் நித்திரைப் புரிந்து கொண்டிருக்குங்கால், நடுநிசியில் காஜீ சாஹிபவர்கள் நித்திரைக் கலைந்து எழுந்துட்கார்ந்துகொண்டார்கள். இச்சப்தத்தைக் கேட்டு கலீபா மாமூனும் எழுந்து காஜி சாஹிபின் முகம் சோர்வுற்றுபேதகமாயிருப்பதைக் கண்டு, காஜீ சாஹிபை நோக்கி என்ன விஷயமென விசாரித்தார்கள். காஜி சாஹிப் தமக்கு தாகமாயிருப்பதாய்த் தெரிவித்தவுடன், கலீபா அவர்கள் சிரமம் பாராது தாங்களே எழுந்துச்சென்று ஜலங் கொண்டுவந்து கொடுத்து தாக சாந்திச் செய்வித்தார்கள்.

மற்றோர் முறை கலீபா ஹாரூன் அவர்கள், காஜீ யஹ்யா அவர்களோடு கைகோர்த்துக் கொண்டு சிங்காரவனத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது காஜீ சாஹிபின்மீது வெய்யிற்பட்டுக்கொண்டிருந்தது திரும்பிவரும்போது கலீபாவின்மீது வெய்யிற்படுவதைக் கண்ட காஜீ சாஹிபவர்கள் வெய்யில்பக்கமாய்ச் சென்று தங்கள் நிழலை கலீபாவுக்கு விட விரும்பினார்கள். இதையறிந்த கலீபா அவர்கள், காஜீசாஹிபை நோக்கி "இவ்வாறு செய்வது நியாயமல்ல போகும்போது யான் நிழலில் இருந்தேன், வரும்போது நிழலிலிருப்பது தங்கள் உரிமையல்லவோ! என்று சிரித்துக்கொண்டு சமாதானங் கூறினார்கள்.

கலீபாவின் புதல்வர்களது நன்னடத்தை

ஒருமுறை கலீபா மாமூனவர்களின் இரு புதல்வர்களும், தங்கள் உஸ்தாதின் பாதரக்ஷையை ஒழுங்குபடுத்துவதற்காகப்போட்டி போட்டுக்கொண்டார்கள் இவ்வாதம் வெகு நேரம்வரை அவர்களுக்குள் நிகழ்ந்துகொண்டிருந்து முடிவில் ஆளுக்கொரு பாதரக்ஷையைச் சுத்தப்படுத்தி உஸ்தாதின் பாதங்களின்முன் வைப்பதென்று அவர்களுக்குள் முடிவாயிற்று. இச்செய்தி கலீபா மாமூன் அவர்கட்குத் தெரிந்து, அவர்கள் உஸ்தாத் அவர்களைத் தம் சமுகத்துக் கழைத்து "ஹஜ்ரத்! இச்சமயம் இவ்வுலகத்தில் மிக மிக கண்ணியவான் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு,

உஸ்தாது :—அமீருல் மூமினாகிய தங்களைத் தவிர வேறு யாரிருக்க முடியும்?

கலீபாமாமூன் :—யானில்லை. உண்மையில் மிக மிக கண்ணியமானவர் யாரெனின், யாருடைய பாதரக்ஷையைச் சுத்தப்படுத்துவதற்காக அமீருடைய புதல்வர்கள் போட்டிப் போட்டுக் கொள்கின்றார்களோ அவர்களே மிக கண்ணியமானவர்களாகும்.

உஸ்தாது :—ஆம்! தங்கள் புதல்வர்கள் அவ்வாறு செய்துவிட்டது உண்மைதான். ஆனால், அவ்வாறு செய்யவேண்டாமென அவர்களை யான் விலக்கக் கருதினேனெனினும், உஸ்தாதுக்கு சிஷ்யர்கள் பணிவிடை செய்வதினாலேற்படும் புண்ணியத்தைவிட்டும் அவர்களை நிர்கதியாக்கலாகாதென்றே தடை செய்யாமலிருந்துவிட்டேன்.

கலீபா மாமூன் :—தாங்கள் அங்ஙனம் தடைசெய்திருப்பீர்களேல், எனக்குஅதனால் பெரிதும்மனச்சஞ்சலம் ஏற்பட்டிருக்கும்; தங்கள் புனித பாதரக்ஷகளைத் தொட்டதனால் என் புதல்வர்களின் மதிப்பொன்றும் குன்

றிப்போகவில்லை; அரசனே யாயினும் அவன் தன் பிதாவுக்கும் ஞான குருவுக்கும் பணி விடை செய்வதினால் அபகீர்த்தி யாதும் ஏற்பட்டுவிடமாட்டாது என்று கூறினார். அதன் பின் கலீபா மாமூன் அவர்கள், பதி னாயிரம் திர்ஹங்களை உஸ்தாத் அவர்கட்கு சன்மானமாக அளித்துதவினார்கள்.

கலீபா ரஷீதவர்கட்கும், இமாம் மாலிக் (ரஹ்) அவர்கட்குமிடை நிகழ்ந்த சம்பவங் கள் மிகப் பிரசித்தமாயிருக்கிறது. அதா வது:—இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், கலீபா ரஷீதுக்குப் பாடம் போதிக்கும் போது கிலாபத் ஸ்தானத்துக்குரிய பீடத் தைவிட்டும் அவரை இறக்கி, பொது மாண வர்களுக்குச் சமமாக உட்காரவைத்துக் கொள்வார்கள்.

பகீஹ் யஹ்யாவின் சத்திய மொழி

அந்துலிஸின் கலீபாவாகிய இரண்டாவது அப்துர் ரஹ்மான் அவர்களது ஆட்சியில், பகீஹ்யஹ்யா அவர்கட்கு அளவற்ற கண் ணியமும் அதிகாரமுமிருந்துவந்தன. அர சாங்கத்தின் பெரும் பெரும் உத்தியோகங் களும், காஜீ, காஜியுல்குஜாத் முதலிய பதவிகளும் காஜீயஹ்யா அவர்கள் ஆதீனத் திற்குள் இருந்துவந்தன. எனவே யஹ்யா அவர்கள் யாரைத் தேர்ந்தெடுப்பார்களோ அவர்தான் அப்பதவிக்குரியவராவர். சுருங் கக் கூறின், நாட்டினரின் சன்மார்க்கக் காரி யாதிகள் அனைத்தும் அவர்களுடைய கை வசமே இருந்துவந்தன. ஒருமுறை கலீபா அமீர் அப்துர் ரஹ்மான் தானீ அவர்க ளுடைய நோன்பு முறிந்துவிட்டது; நோன்பு முறிப்பட்டதற்கு என்னகப்பாரா (பரிகாரம்) அனுஷ்டிக்க வேண்டுமென்று கலீபா அவர் கள் பகீஹ்யஹ்யா அவர்களிடம் கேட்டார் கள். அதற்கு யஹ்யா அவர்கள் "60-நோன் புகள் நோர்த்தாகவேண்டும்" என்று கட் டளையிட்டார்கள். பெரியாரவர்களுடைய கட் டளைப்படியே கலீபா அவர்கள் கப்பாராவாக அறுபது நோன்புகளை நிறைவேற்றினார்கள். இதர உலமாக்கள், ஹஜ்ரத் யஹ்யா அவர் களுடைய மார்க்கத் தீர்ப்பை ஆக்ஷேபித்து, ஒரு நோன்புக்குக் கப்பாராவாக ஓர் அடி மையை விடுதலைச் செய்துவிடுவது, அல்லது அறுபது ஏழைகளுக்கு உணவளித்துவிடு வது போதுமானதா யிருக்கிறதென்னும் மஸ்அலாவை எடுத்தோதினார்கள். அவ் வாக்ஷேபணைக்குச் சமாதானமாக பகீஹ் யஹ்யா அவர்கள் விடுத்த பத்வாவில் "பொதுமக்களுக் குரியதுபோன்ற பத்வா இவ்வரசருக்கும் அளிக்கப்படுமாயின், தின மும் நோன்பை முறித்துவிட்டு, அதற்குக் கப்பாராவாக அறுபது ஏழைகட்கு உணவ ளித்து விடுவதோ, அல்லது ஓர் அடி மையை விடுதலை செய்துவிடுவதோ இவருக் குச் சிரமமான காரியமாகமாட்டாது என்று தாக்ஷண்ணியமின்றி சத்தியமொழி கூறி னார்கள்.

காஜிமுன்திரும் கலிபாவும்.

உலகத்தின்கண் அக்காலை மிகமிகப் பெரி தாயும் அழகானதாயும் சிறந்துவிளங்கிய "அஸ்ஸொஹ்ரா" என்னுங் கட்டிடம் நிர் மாணிக்கப்பட்டபோது, கலீபாவாகிய மூன் றாம் அப்துர்ரஹ்மான் அவர்களே அதற்கு மேற்பார்வையாளராயிருந்து உழைத்துவந் தார்கள். அதில் அவர்கள் அதிக ஊக்கமும் உற்சாகமும் மிகுந்தவர்களாய் உழைத்து வந்ததனால், தொடர்ந்து மூன்று ஜும்ஆத் தொழுகைக்கு வராதிருந்துவிட்டார்கள். அதன்பின் நான்காவது ஜும்ஆவில் கலீபா அவர்கள் பள்ளிவாசலுக்கு விஜயம் செய் யவே, காஜீ அவர்கள் குத்பாவில், ஜும்ஆவை விடுபவர்களுக்கு ஏற்படும் தண்டனையை நன் கெடுத்துக் காட்டினார்கள். இதையறிந்த கலீபா அவர்கள் பெரிதும் வெட்கமடைந்த தோடு, தம் மனத்தில் காஜீ சாஹிபின்மீது அழுக்காறும் கொண்டார்கள். அதன்பின் தம் அரண்மனைக்குச் சென்று, தம் புதல்வரில் அல்ஹிக்கம் என்பவரை நோக்கி, "இன்று காஜீ சாஹிப் என்னை மிகவும் இழிவுபடுத்தி விட்டார் ஆகையால் இனி யான் சத்திய மாக அந்த காஜியின் பின் நின்று தொழ மாட்டேன்" என்று கூறினார். இதைக் கேட்ட அல்ஹிக்கம், தம் தந்தையை நோக்கி "காஜீயின்மீது தாங்கள் இவ்வளவு மன வருத்தமடைந்திருப்பதாயின், உடனே அவ ரை காஜீ உத்தியோகத்தை விட்டுத் துறத்தி விடலாமே!" என்று கூறினார். அதற்கு கலீபா அவர்கள் "அங்ஙனமன்று, உம்மை இளவரசரென்ற ஸ்தானத்தை விட்டுத் துறத்திவிடுவது மிக எளிது, ஆனால் காஜீ போன்ற பாரபக்ஷமற்ற ஆலிமை அவரது

ஸ்தானத்தை விட்டு நீக்குவதும் மூடத்தனமேயாகும். யான் செய்துவிட்ட சத்தியத்துக்காக கப்பாராக்கொடுத்துவிட்டு, இனிமேல் என் ஜீவியகாலம் முழுமையும் அந்த காஜீ சாஹிபின் பின்னலேயே தவருது தொழுது வரப்போகின்றேன்'' என்று உறுதி கூறினர்கள்.

அதன்பின் கலீபா அவர்கள், அக்காஜீ சாஹிபுக்குப் பெரிய சிறப்பான விருந்தொன்று அளித்து, அதற்கு சகல உலமாக்களேயும் அழைத்திருந்தார்கள். பல்லோர் நிறைந்த அப்பெருஞ்சபையில் கலிபா அவர்கள் காஜீ சாஹிபவர்களிடஞ் சென்று பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். அப்போதும் காஜீ சாஹிபவர்கள் தாக்ஷணியம் பாராமல் மீண்டும் வெகு நேரம் கலிபாவுக்கு இதோபதேசங்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.

உலமாக்களின் நீதிமுறை.

ஒருமுறை, கலீபாவான முதல் அல்ஹிகம் என்பவருக்கு ஓர் மாளிகை கட்டவேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டது. அங்ஙனம் கட்டிடம் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில் ஓர் ஏழைவிதவா ஸ்திரியின் குடிசை யிருந்தது. எனவே அந்தகுடிசையுள்ள இடத்தை விற்றுவிட்டுப் போய்விடும்படி அவளிடம் கூறப்பட்டதெனினும் அவள் முடியாதெனமறுத்துவிட்டனள். ஆகையால் கலீபாவுக்குக் கோபம்வந்து, பலாத்காரமாக அந்நிலத்தைத் தம் சுயாதீனத்திலாக்கிக்கொண்டு கட்டிடம் கட்டத்தொடங்கி விட்டார்.

நிர்க்கதிக்காளான அந்த ஏழைவிதவை, காஜி அவர்களது சமுகத்திற்குச் சென்று தன் குறையை முறையிட்டுக் கொண்டாள். எனவே காஜியார் அக்கிழவியை நோக்கி, அங்ஙனமாயின் யான் அதற்குறிய நியாயம் வழங்க முயற்சிக்கிறேன்; நீ சென்று வருவாயாக! என்று ஆறுதல் கூறி அனுப்பினர்கள்.

கட்டிட வேலைகள் முடிவடைந்து, அதை கலீபா அவர்கள் பார்வை யிடச்சென்றபோது, காஜீ யாரும், ஒரு கழுதையையும், ஒரு சாக்குப்பையையும் அவ்விடத்துக்குக் கொண்டு சென்ருர்கள். அங்குபோய், கலீபாவிடம் உத்திரவு பெற்று அவ்விடமிருந்த மண்ணைத் தம்சாக்குப்பையில் நிறைத்து கலீபாவையழைத்து அதை தூக்கிவைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். காஜியார், தம்மைப் பரிகாசஞ் செய்வதாக எண்ணிக்கொண்ட கலீபா, அந்த மண்மூட்டையைத் தூக்கிப்பார்த்து முடியாமற்போகவே, "காஜியாரே! இது அதிக கனமான தாகயிருக்கிறது எப்படித் தூக்கமுடியும்?'' என்று கூறினர். உடனே காஜி சாஹிப், அக்கலீபாவை நோக்கி, "இந்தச் சிறுமூட்டையிலுள்ள மண்ணைத்தூக்க முடியாதவராகிய நீர், கியாமத்தில் அந்த ஏழை விதவை ஆண்டவனிடம் வந்து நியாயங் கோரும்போது, இந்த நிலத்தைத்தூக்கி சுமந்தாக வேண்டுமே அப்போதென்ன செய்வீர்?'' என்று அழுத்தமாகக் கூறினர்கள். காஜியாரின் இந்த அறிவுறுத்தலான சொல்லைக் கேட்ட கலீபா மெய்மறந்தவராகி நற்புத்திப் பெற்று, உடனே அந்த நிலத்தையும், அதன் மீது கட்டப்பட்டிருந்த மாளிகையையும், அதிலிருந்த சாமான்கள் உள்பட யாவற்றையும் அவ்வேழை ஸ்திரீக்கே கொடுத்து விட்டார். இங்ஙனம், அக்காலை கலீபாக்களே உலமாக்களிடம் இவ்வளவு தூரம் நடந்து வந்திருப்பதை நோக்குமிடத்து, பொது ஜனங்கள் உலமாக்களின் வார்த்தைகளுக்கு எவ்வளவு தலைசாய்த்திருப்பார்களென்பதை விவரிக்கவேண்டிய அவசியமில்லை.

ஹஸ்ரத் அபூ இஸ்ஹாக்.

அபூ இஸ்ஹாக் அவர்கள், தேசாளும் அரசருடைய தர்பாருக்குச் செல்லுங்கால், வழியினில் ஜனங்களெல்லோரும் அவர்களது பாதத்தைத்தொட்டு முத்தமிட்டு மரியாதை செய்வதற்காகத் திரள்திரளாகக் கூடி விடுவார்கள். அதனல் அவர்களது சவாரி போவதற்கும் தடை யேற்பட்டு விடும். அவர்களுடைய பாதத்தைத் தொட்டு முத்தமிட இயலாமற் போகிறவர்கள், அவர்கள் ஏறியுள்ள குதிரையின் வாலையாயினும் தொட்டு முத்தமிட்டு சந்தோஷமடைவார்கள்.

இமாம் அஹ்மதிப்னுஹம்பல் (ரஹ்) அவர்கள் வபாத்தாகி அவர்களது ஜனஸாத் தொழுக வைக்கப்பட்டபோது, அத் தொழுகைக்கு எட்டுலக்ஷம் பேர்கள் கூடியிருந்தனரெனின் அவர்களுக் கிருந்த மதிப்புச் சொல்லத் தரமாமோ?

பண்டைய இஸ்லாமியத்தொழில் முறை.

(சென்ற மாதத்தொடர்)

இப்னு பதூத்தா.

பிரசித்திப் பெற்ற உலகச்சுற்றுப் பிரயாணகரா யிருந்த இப்னு பத்தூத்தா அவர்கள் மேற்கூறப்பட்ட காந்தஹார் என்னும் ஊரினின்றுதான், இப்ராஹீம் சகோதரர்க ளுடைய ஜாஙிர், முனவ்வரத் முதலிய கப்பல்களில் பிரயாணஞ்செய்து கோக் என்னும் நகருக்குப் போய்ச்சேர்ந்து அவண்ணுள்ள விசேஷங்களைப் பற்றித் தெரிவித்திருப்பதாவது:—

"அஃதொரு பெரியநகரம்; பெரும் பெரும் கடைவீதிகளிருந்தன; அங்கோர் அழகிய மஸ்ஜிதைக் கண்ணுற்றேன்; அது ஹஜ்ரத் கில்று (அலை) உடைய பள்ளியென்றும், கடலில் மூழ்குபவர்க்கு அஃதோர் கலங்கரை விளக்காய் விளங்கிவருகிற தென்றும் அப்பிரதேசத்தினரால் போற்றப் பட்டுவந்தது. என்பதே

வாஸிபின் வர்த்தகம்.

இப் பதினைன்காவது நூற்றுண்டிலேயே வாஸிப் என்பவர், பெரும் வர்த்தகராயிருந்தார். அவர், தம் வியாபார அனுபவங்களைக் கூறுமிடத்து, மலபார் கடற்கரைப் பிரதேசத்தின்கண் அபரிமிதமாய் விற்பனையாகி வந்த அராபியக் குதிரைகள், ஈரான் அசுவங்கள் ஆகியவற்றின் விசேஷத்தைப்பற்றியும் வியாபாரத்தைப்பற்றியும் சிலாகித்துக் கூறியுள்ளார். தவிர அக்காலை அத்தேச ஜனங்கள் தங்களிடமிருக்கும் திரவியங்களைப் பெரும்பாலும் நல்ல திடமான குதிரைகளை வாங்கிவைப்பதிலும், விற்பதிலும் செலவிட்டு வந்தார்கள் என்பதாக மார்க்கோ போலோ என்பவரும் தம் வியாபார அனுபவங்களையொட்டி எழுதியிருக்கின்றார்.

ஸுல்தான் பைரோஜ் ஷாஹ்வின் சேனை பலம்.

ஹிந்துஸ்தானத்தின் வடக்குப் பிரதேசத்தை அக்காலை ஆதிக்கங் கொண்டிருந்த லக்னூத்தி என்பானை முறியடித் தோட்டுவதற்காக வென்று ஸுல்தான் பைரோஜ் ஷாஹ் துக்லக் மன்னர், கி. பி. 1353 வது ஆண்டிலும், 1360 - ம் ஆண்டிலுமாக இரு பெரும் படைகளை அனுப்பி அச்சேனைகளின் உதவிக்காக கவசம்பூண்ட பல கப்பற்களையும் ஏற்பாடு செய்திருந்தார். எனவே அக்கப்பல்கள் ஓர் இலக்ஷம்சிப்பாய்கள் உட்கார்ந்து பிரயாணம் செய்வதற்கான சௌகரியங்களெல்லாம் அமையப் பெற்றனவாக யிருந்தது.

அதன்பின், பைரோஜ்ஷா கி. பி. 1372-ம் ஆண்டில் சுல்தான் டட்டா என்பவருக்கு விரோதமாக ஒரு பெரும்படையை அனுப்பி வைத்தார். அச்சேனையில் தொண்ணூராயிரம் குதிரையும், நானூற்றி எண்பதுயானைகளும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இஃதல்லாமல் இன்னோர் சிந்துநதி தீரத்துக்குச் சமீபித்துப்போய்ச்சேர்ந்ததும், ஆங்கு ஐயாயிரம் கப்பல்கள் தயாரித்து அதன்மூலமாய்ச் சேனைகளைக் கடத்திச் சென்றார்கள். அக்கப்பல்களின் உதவியினால் அப்பெருஞ் சேனைகள் சிலநாட்களுக்குள் சிந்துநதி வழியாகவே டட்டாநகரம்போய்ச் சேர்ந்துவிட்டன.

அமீர்தய்மூரின் கப்பற் பாலம்.

இவர் கி. பி. 1388-ம் ஆண்டில் அநேகக் கப்பல்களையுடையவராயிருந்தார். அவர் தம் பட்டாள வாகனங்களோடு சிந்துநதி தீரத்தைக் கடந்து செல்லவேண்டி யிருந்தபடியால், தமக்குரிய கப்பற்களை வரிசையாக நதிக்குக் குறுக்கே நிற்கவைத்து, இரண்டே நாளி லொரு பெரிய பாலம் நிர்மாணித்து அதன் வழியாய்த் தம் சேனைகள், வாகனங்கள் முதலிய யாவற்றையும் கடத்திச் சென்றார். மேலும் அவர் கங்காநதி தீரத்தில் அநேகமுறை கடற்போரும் புரியவேண்டியதாயிருந்தது. உதாரணமாய் ஒருமுறை ஹிந்துக்களுடைய ஒரு பெரும் பட்டாளம் நாற்பத்தெட்டுக் கப்பல்கள் சகிதம் அமீர் தய்மூரின் பட்டாளங்களோடு எதிர்த்துக் கடற்போர் தொடுத்தது அப்போரில்

அமீர்தய்மூர் தமக்குரிய வன்மையாதிக்கத்தினுல் ஜயம் பெற்றதோடு, ஹிந்துக்களுக்கு உரியதாயிருந்த அக்கப்பற்களை எல்லாம் தம் வசப்படுத்திக்கொண்டுவிட்டார்.

கியாஸுத்தீன் அஃலம்.

மார்க்கோ போலோ இது சம்பந்தமான விஷயங்களைத் தெரிவித்திருப்பதைப்போல், சீன உலக யாத்திரீகரான மாமோன் என்பவர் வாயிலாகவும் அநேக விஷய வரலாறுகள் தெரியவந்துள்ளன. சீன மாமோன் என்பார் பதினைந்தாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஹிந்துஸ்தானத்துக்கு விஜயஞ் செய்துள்ளார். எனவே, அக்காலை வங்காளத்துக்கும் சீனத்துக்குமிருந்தவந்தசம்பந்தச் சம்பவங்களைப்பற்றி அவர் எழுதியிருப்பதாவது:—

கி. பி. 1385-ம் ஆண்டு முதல் 1407-ம் ஆண்டு வரை வங்காளத்தின் பிரபல பாதுஷாவாகவிருந்தகியாஸுத்தீன் அஃலம்பாதுஷா, சீன அரச தர்பாருக்குப் பற்பலவிதமான அநேக சன்மானப் பொருள்களோடு தமது பிரதிநிதியை அனுப்பிவைத்திருந்தார். அவர் அனுப்பிய சன்மானப் பொருட்களில் குதிரைகள், ஆயுதங்கள், வெள்ளிச் சாமான்கள், தங்க, வைர நகைகள், முதலிய மற்றும் பல பொருட்கள் பிரதானமாகும். அதே கியாஸுத்தீன் பாதுஷா அவர்கள் கி. பி. 1407-ம் ஆண்டிலும் மற்றுமோர் பிரதிநிதியையும் சீன தர்பாருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஸுல்தான் ஸைபுத்தீன்

ஸுல்தான் ஸைபுத்தீனும், சீன (முஸ்லிம்) அரசாங்கத்தோடு சம்பந்தங்களுடையவராயிருந்ததால், சீன தர்பாருக்குத்தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்துள்ளாரென்று சரித்திர பூர்வமாகத் தெரியவருகின்றது. தவிர சீன அரசாங்கத்துப் பிரதிநிதிக்கூட்டமொன்று சீனத்து இளவரசரான "ச்செய் ஸோ" என்பவரது தலைமையின்கீழ் சுல்தான் ஸைபுத்தீனுடைய தர்பாருக்குச் சென்றிருந்ததென்றும் தெரிகிறது.

இவ்வரலாறுகளினுல், அப்பண்டைக் காலமாகிய பதினைந்தாம் நூற்றுண்டிலும், ஹிந்துஸ்தானத்தின் அதாவது வங்காளத்தின் முஸ்லிம் மன்னர்கள் சீனத்தாருடன் அரசாங்க சம்பந்தங்களும், வர்த்தக லேவாதேவிகளும், நேசபாசமும் கொண்டிருந்தார்களென்பது நன்கு விளங்கக் கிடக்கின்றது.

கள்ளிகோட்டைத் துறைமுகம்

அதே (பதினைந்தாம்) நூற்றுண்டின்போது கள்ளிக்கோட்டைத் துறைமுகமானது ஏற்றுமதி இறக்குமதியில் மிகப் பிரசித்திபெற்றிருந்ததென்பதையும், அது அக்கால உலகத்தின் பெரும்பெருந் துறைமுகங்களிலொன்ருய் மதிக்கப்பட்டு வந்ததென்பதையும் நிரூபித்து அப்துர்ரஜாக் என்ற அக்கால யாத்திரீகர் எழுதுவதாவது :—

கப்பல் கப்பலாக கரும் மிளகு மூட்டைகள் நிரப்பப்பெற்று, கள்ளிக் கோட்டைத் துறைமுகத்தினின்று நேரே மக்காவுக்கு (ஜித்தாவுக்குக்) கொண்டு போகப்பட்டுவந்தன; அக்காலை, கள்ளிக்கோட்டையின் ஜனங்கள் மிக தைரியசாலிகளாகவும், பராக்கிரம மிக்க மானுமிகளாகவும் விளங்கிவந்தார்கள்; கொடிய கடற்கொள்ளைக்காரர்களுங்கூட, கள்ளிக்கோட்டைக்காரர்களின் கப்பல்களைக் கொள்ள அருகில் நெருங்கவும் தைரியமில்லாதவர்களாய் பயந்திருந்து வந்தார்கள்; அத்தகைய (கள்ளிக்கோட்டை)த் துறைமுகத்தில் எப்பொருள் சரக்குகள் வேண்டுமாயினும் சுலபத்தில் கிடைக்கக் கூடியதாயிருந்தது. தவிர, ஆங்கு கப்பற்களுக்கும் பொருட் களுக்கும் தக்க பாதுகாப்பு இருந்துவந்ததோடு, அப்பகுதியினர் வாக்குச் சுத்தமானவர்களாகவு மிருந்து வந்தனர். எனவே சரக்குகளால் நிறைக்கப்பட்ட கப்பல்கள் வெகு தூரதேசங்களிலிருந்தெல்லாம் அங்கு வருவதுண்டு. வெளிதேசங்களின்று சரக்குகள் வந்து இறக்குமதியான வுடனுக்குடன், ஆங்காங்குள்ள வியாபார ஸ்தலங்கட்கும், பஜார்கட்கும் அனுப்பப்பட்டு விற்று முதலாகிவிடுவது வழக்கம். வெளி தேசங்களினின்று சரக்குகளைக்கொண்டுவருபவர்கள் தான் தம் சரக்குகளைப் பாதுகாத்து வியாபாரிகட்கு விநியோகித்து அதற்குள்ள கணக்குகளை கவனிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. துறைமுகத்து அதிகாரிகளி லொருவரான கஸ்டம் ஆபீஸரே கப்பலில் வரும் எல்லாச்சரக்குகளையும் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு, மிக சிரத்தையோடு அவற்றை அல்லும் பகலும் பாதுகாத்து, உசிதம்போல் வியாபாரிகட்கு ஈந்து, அவற்றின் கணக்குகளை ஒழுங்காகவைத்துக் கொள்ளுவராய் இருந்தார்.

அங்ஙனம் பொருட்கள் செலவாய் விற்பனை யாகிவிட்டதும், அதற்குரிய தீர்வையை, அல்லது (கமிஷனை) எடுத்துக் கொண்டு, சரக்கின் சொந்தக்காரருக்குச் சேரவேண்டியதை ஒழுங்காக அவரிடம் கொடுத்து விடுவார். மேலும் எவ்வளவு சரக்கு விற்கப்படுகிறதோ அதனளவுக்குமட்டுமே தான் சுங்க வரி வசூலிப்பர். இக்காலத்தைப் போல், இறக்குமதியாகும் சரக்குகள் விற்றாலும் விற்காவிட்டாலும், நல்ல நிலையிலிருந்தாலும் கெட்டுப் போயிருந்தாலும் சுங்கவரிக்கட்டணம் குறைவின்றி வாங்கப்படும் வழக்கம் அக்காலை இருக்கவில்லை. அத்துறை முக சம்பந்தப்பட்ட விஷயங்களில் மற்றோர் விசேஷம் யாதெனில், கள்ளிக்கோட்டையை நோக்கிப்புறப்பட்டு வரும் கப்பல் வந்து சேரும்வரை அதைப்பற்றி சிரத்தைக்கொண்டிருப்பர்; அக்கப்பலுக்கு வழியில் ஏதேனும் ஆபத்து நேரிட்டாலும் அல்லது கப்பல் வழி தப்பி குறிப்பிட்ட நேரத்திகுள் வந்து சேராவிடினும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று ஆகுமான உதவிகளைப் புரிந்து கரைச்சேர்ப்பார்கள் மற்ற விடங்களில் இவ்வித விசேஷம் இருக்கவில்லை.

மேலும், ஏதேனும் அன்னியக் கப்பல்கள் வழிதப்பியோ, அல்லது கடல் கொந்தளிப்புக்கு பயந்தோ அன்னியத்துறை முகத்துக்குச் சென்று விடுமாயின், அக்காலை கள்ளிக்கோட்டையல்லாத இதர துறைமுகப்பிரதேசத்தினர், அக்கப்பல் தங்களுக்குக்கிடைத்த இலவசப் பொருளென மதித்துக் கொள்ளையடித்துக்கொண்டு அன்னியருக்கு நஷ்டமுண்டாக்கிவிடுவர். ஆனால், கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தினர் அங்ஙனமின்றி, பிறரது கப்பலாயிருப்பினும் பரஸ்பர நன்றியோடு நடந்துக் கொள்வர்.''

15-ம் நூற்றாண்டின் சம்பவங்கள்.

நிக்கோலோ கோண்டி என்ற உலகயாத்திரிகர், பதினைந்தாவது நூற்றாண்டில் ஹிந்துஸ்தானுக்கு வந்துள்ளார். அக்காலை இந்தியாவில் சிறந்திருந்த கப்பல்கள், வியாபாரங்கள் ஆகியவற்றைப்பற்றி அவர் எழுதியிருப்பதாவது:—

(1) இந்திய ஜனங்கள் கப்பல் நிர்மாணிப்பதில் சிறந்தவர்களா யிருந்ததால், அன்னோர் எங்கள் நாட்டாரைவிட மிகமிகப் பெரிதான கப்பல்களைத் தயார்செய் திருக்கின்றனர். அக் கப்பல்களில் இரண்டாயிரம் பீப்பாய்கள் ஏற்றிவருவதற்கான வசதியிருந்தது அவ்விதக் கப்பல்களில் ஐந்துப் புகைப் போக்கிகளும், ஐந்து காற்றுக்குழாய்களும் அமைக்கப்பட்டிருந்தது. அக்கப்பலின் கீழ் தட்டத்தில் மூன்றுபெரும்பலகைகள் அமைக்கப்பெற்றிருந்தது. அப் பலகைகளினாலான சூட்சமத்தால், புயல்காற்றினின்று அக் கப்பல்கள் தப்பிப்பதற்கு அனுகூல மேற்படுத்தப்பட்டிருந்தது. அவர்கள் தயார் செய்த கப்பல்களில் மற்றோர் சிறப்பு யாதெனில், கப்பலின் ஒருபாகம் மோதுண்டு உடைந்து கெட்டுப் போகுமாயின், அதனால் வேறு பாகத்துக்கு இடையூறின்றி கப்பல் நிலைத்திருக்கும்படியானதா யிருந்தது.

(2) கங்காநதிக்கரையோரத்தின் ஒருபகுதியில் அளவற்ற மூங்கிற்காடுக ளிருப்பதால் அக்காட்டில் விளையும் பெரும் பெரும் மூங்கில் வாறைகளைக்கொண்டே இந்தியர்கள், மிக அருமையான படகுகளைத் தயார்செய்து கொள்ளும் வழக்க முடையவர்களா யிருந்தார்கள். அத்தகைய வேலைப்பாட்டில் தென்னிந்தியர்கள் சிறந்தவர்களாக விளங்கினார்கள்.

(3) தென்னிந்திய வியாபாரிகள் மிகப் பெருந் தனிகர்களா யிருந்து வந்தனர். சில வியாபாரிகள் முப்பது, நாற்பது கப்பற்கட்குச் சொந்தக்காரர்களா யிருந்துவந்தனல். அப் பல கப்பல்கள் மூலமாய் அன்னோர் திறம்பட வியாபாரங்களை செய்துவந்தனர். அவர்களிடமிருந்த கப்பல்களில் ஒவ்வொன்றும் பதினைந்தாயிரம் பவுன்களுக்குக் குறைவுபடாத விலையுள்ளதா யிருந்ததெனின், இதனாலே அன்னோர் எவ்வளவு பெரிய தனவந்தர்களாகவும் வியாபாரிகளாகவு மிருந்தார்களென்பது நன்கு புலனாகும்.

(4) ஜினிவா தேசத்தின் 'ஸ்டெபினோ' என்ற வர்த்தக ரொருவர் பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவைச் சார்ந்த கடற்கரைப் பிரதேசங்களுக் கெல்லாம் சுற்றுப் பிரயாணஞ் செய்துள்ளார். அவர் அவ்வாறு சுற்றுப் பிரயாணம் புரிந்தது வியாபாரத்தை முன்னிட்டே யாகும். மேலும் அவர் ஒரு முறை கெய்ரோவிலிருந்து இந்தியப் பாய்க்கப்பல் மூலமாகவே

பிரயாணஞ் செய்துள்ளார். அக்கப்பலானது மரத்தினலும், மூங்கில்களினலும் செய்யப்பட்டதாயிருந்தது; அதன் பாய்மரப் பர்தா, நூலினலான துணியாகவே இருந்தது என்று அவர் தம் அனுபவ ரீதியாகச் சொல்லியிருக்கின்ருர் என்பதே.

குஜரத்தையாண்ட பாதுஷாக்கள்

புர்த்தகாலியர்கள் வருவதற்கு முன்னல், அஹத் ஆபாதின் ஸுல்தான், இந்திய சமுத்திரத்துக்கு அதிபதியாக விளங்கி வந்தார். அதன்பின்னர் குஜ்ரத் மாகாணத்தை ஆண்டுக்கொண்டிருந்த அஹத்ஷா என்பவர் கி. பி. 1439-ல் ஒரு பெரும் கடற்படையைத் தயாரித்து பம்பாய் நகரத்தையும் ஸாலியட் பகுதியையும் கைப்பற்றிக் கொள்வதற்காக அதனை அனுப்பி வைத்திருந்தாரெனினும், அப்படையை பஹ்மனிய வர்க்கத்து மன்னர்கள் வென்று பம்பாய்ப் பகுதிகளைத் தங்கள் ஆதினத்துக்குள்ளாக்கிக் கொண்டனர்.

கி. பி 1453-க்கும் 1459-க்கு மிடையில் ஓர் பெருஞ்சம்பவம் நடந்தது. அதாவது; 'விஸால்கட்' என்பது கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதோர் அரும் பெருங் கோட்டையாகும். அதனை ஆண்டுகொண்டிருந்த இராஜன் முன்னூறு கப்பல்களைத் தயார்செய்து பெரும்படையைத் திரட்டிக் கொண்டு, தன்னை குஜரத்தின் பாதுஷாக்களுக்குச் சமமாக எண்ணிக்கொண்டிருந்தான். ஆகையால், அவனது ஆணுவத்தை அடக்க வேண்டுமென்று அக்காலை குஜ்ரத்தின் அரசராயிருந்த மஹ்மூத் பாதுஷா கடற்படையொன்றைப் பெரிதாய்த் திரட்டிக்கொண்டு வந்து அவ்விராஜனின் படையைத் தாக்கிச் சிதறடித்து ஜயக்கொடி நாட்டிவிட்டு, அதை விட பெரும்படை யொன்றைத் தயாரித்துக் கொண்டுபோய், கடற்கொள்ளைக் கூட்டத்தினர்களையும் தாக்கி அடக்கி ஒடுக்கி இல்லாதாக்கினர். எனவே அவரது சாமர்த்தியத்தின் பயனய் அக்காலை கடற்கொள்ளைகள் நடைபெருதிருந்து வந்தன.

வாஸ்கோடி காமா :—இப்பெயர்கொண்ட வீரதீரன் மேனட்டில் மிகப் பிரக்கியாதி பெற்றிருந்தவனவன். அவன் கிழக்கு ஆப்ரிக்காவுக்குப் பிரயாணம் போயிருந்தக்கால், ஆங்கு கும்பாத், இந்தியா முதலிய நம் பிரதேசங்களினின்று சென்றிருந்த மாலுமிகள், வியாபாரிகள் முதலியோரைக் கண்டு பல தகவல்கள் தெரிந்துள்ளான். அவன் கூறுவதாவது :—அந்த மாலுமிகளும் வியாபாரிகளும் கப்பல் செலுத்துவதில் மகாத்திறமையுள்ளவர்களாயிருந்தனர் எனவே, அன்னேர் நட்சத்திரங்களைக் கண்டு அதன் மாறுதல் கணக்குகளைக் கொண்டு வழியறிந்து கடல் பிரயாணஞ் செய்பவர்களாயிருந்தனர்; அவர்களிடம் கப்பல் ஒட்டுந்தொழிலுக்குரிய பற்பலவிதமான கருவிகளும் இருந்தன; அன்னேர் அறிவு ஆராய்ச்சியில் மற்றமாலுமிகளைவிடத் தேர்ந்தவர்களா யிருந்தனர் என்பதே.

கி. பி. 1508-ம் ஆண்டில் எகிப்தினுடையவும், குஜ்ரத்தினுடையவும் கடற்படையாதிக்கங்கள் ஒன்று சேர்ந்து புர்த்தகாலியர்களை எதிர்த்துப் போராட முற்பட்டன. எனவே, கி. பி. 1521-ம் ஆண்டில் குஜரத்தின் முஸ்லிம் மன்னரொருவர், கடற்படை முஸ்தீபுகளோடு அனுப்பி வைத்த ஒரு ஸர்தாருடைய படையெடுப்பினல் பெருந்திரளான புர்த்தகாலியர்கள் தோல்வியுற்று, முறியடிக்கப்பட்டு விட்டார்கள். இன்னேரது ஒரு கப்பலும் கடலுக்குள் மூழ்கடிக்கப் பட்டது.

கி. பி. 1528-ம் ஆண்டிலும் புர்த்தகாலியர்கட்கும், குஜ்ரத் பாதுஷாவுக்கும் கடும்போராட்டம் நடைபெற்றுளது. அதில் புர்த்தகாலியர்களுக்கே ஜெயம் கிடைத்து அன்னேர் 73 கப்பல்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். மேலும் சில வருஷங்கட்குப் பின்னரும் குவா என்னும் பகுதியில் இருந்த கடற்கொள்ளைக்காரர்களை அடக்கி ஒழிப்பதற்காக புர்த்தகாலியர்கள் ஒரு கடற்படையைத் தயாரித்து அனுப்பிவைத்திருந்தன ரெனினும், அப்போராட்டத்தில் புர்த்தகாலியர்கட்குத் தோல்வி ஏற்பட்டு அவர்கள் ஏராளமான நஷ்டமடையும்படி யாயிற்று.

மேற்குப் பகுதியின் இரு துறைமுகம்.

அக்காலத்தில் மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் சால் என்றும் டாபேல் என்றும் இரு பெருந் துறைமுகங்கள் இருந்து வந்தன. இத்துறை முகங்களோடு ஈரான் (பர்ஷியா) தேசத்தாரின் வியாபார சம்பந்தங்கள் இருந்து வந்தன. செங்கடல் வழியாக ஐரோப்பா

தேசத்தினருங்கூட இத்துறை முகங்கட்கு தம் கப்பல்களில் சரக்குகளை அனுப்பிவைத்துக் கொண்டிருந்தனர்.

இந்திய மேற்குக்கடற் கரைப் பிரதேசத்தில் மேற்கூறியவையல்லாத மற்றும் அநேகத்துறைமுகங்களு மிருந்தன. அவற்றில் பேஸீன் என்பது பிரதானமாகும் அங்கு நல்ல மரங்கள் அதிகமாக விருத்தியாகிவந்தமையால், கப்பல்களுக்குத் தேவையான கட்டைகள் பலகைகள் முதலிய சகலவும் அதிகமாகக் கிடைத்து வந்தன. ஆகவே துருக்கியருங்கூட அவ்விடத்துக்கு வந்து கப்பல் கட்டுவதற்கான சாமான்களை ஏற்றிச் செல்வர். தவிர கவா பிரதேசத்துக்குத் தேவையான கப்பல் கட்டைகள், வீடு கட்டும் கட்டைகள்யாவும், 'பேஸீன்' துறைமுகத்தினின்று சென்று கொண்டிருந்ததாம். மேற்கூறிய 'டாபேல்' பிரதேசத்தாரின் ஒரு கப்பல் செங்கடலில் ஸீரிஸ் கப்பீத்தான் என்பவனுல் தடுத்துக் கொள்ளப்பட்டது. அக்கப்பல் 153-அடி நீளமும், 42-அடி அகலமும், 31-அடி உயரமும், 12-ஆயிரம் டன் எடையுமுள்ளதாயிருந்தது. அக்காலத்திய ஆங்கிலேயர்களின் கப்பல்கள் 350 டன் எடையுள்ளனவாக மட்டுந் தானிருந்து வந்தன.

(தொடரும்)

தென் அமெரிக்காவில் இஸ்லாத்தின் முன்னேற்றம்

இஸ்லாமே சர்வகாலத்துக்கும், சர்வ சமூகத்துக்கும், சர்வதேசத்துக்கும் ஏற்றதான சன்மார்க்கமென்பது அதன் சித்தாந்தமாகும். இவ்வுண்மைக்கேற்ப இப்பிரபஞ்சப் பூபாகத்தின்கண் இஸ்லாமிய மக்கள் வதியாத பாகமே இல்லையென்பது திண்ணம். உலகத்தோரின் ஞானமும் அறிவும்எத்துணைக்கெத்துணை பெருகிக்கொண்டு போகின்றனவோ, அத்துணைக்கத்துணை இவ்வுலகினில் முஸ்லிம்களுடைய தொகையும் பெருகிக்கொண்டே போகின்றது. நிற்க, "உலகத்தில் இஸ்லாம்மதம் வாளாயுத பலத்தினுல்தான் பரவியிருக்கின்றது" என்று இஸ்லாமிய விரோதிகள் சதாகாலமும் சொல்லித் திரிகின்றனர். ஆனுல் உலக நிகழ்ச்சியும், மாந்தரின் வாழ்க்கையிலுண்டாகும் சத்தியமுமே அவர்களுடைய பொய்க்கூற்றுகளை மறுக்கப் போதியனவாக யிருந்து வருகின்றன.

கிறிஸ்துவப் பிரசாரகர்களின் ஆதாரங்கள்

கி. பி. 1896-ம் ஆண்டில் டாக்டர் ஹெயூபர்ட் ஜஸ்டிஸ் என்பார் தாம் எழுதிய "தெர் பெர்மிங்கடிஸ் இஸ்லாம்ஸ்" என்னும் நூலில் அக்காலை தென் அமெரிக்காவில் வசித்திருந்த முஸ்லிம்களின் தொகை ஐம்பதினுயிரம் என்று வெளிப்படுத்தியுள்ளார். அதன் பிறகு கி. பி. 1921-ம் ஆண்டில், ஒரு பிரான்ஸியப் பிரசாரக ரெவரெண்டு (பாதிரி)யாகிய ஆர்விலோ என்பார், தமது சொந்த அனுபவ பூர்வமான சாக்ஷியத்தைக்கொண்டு அக்காலை தென் அமெரிக்காவில் வதிந்து வந்த முஸ்லிம்களின் தொகைகளை பின்வருமாறு விளக்கியுள்ளார்:—

பிரதேசம்	தொகை
வெண்டோர்டு தீவு	305
ஜெமிக்கா	3400
டிரேனெடாட்	11493
கொவாடெலூப்	3000
மார்னீக்கு	2000
பிரென்ச்காயினு	1670
டெச்காயினு	20314
மிரஸ்காயினு	1536
அர்ஜண்டாயின்	9520
பொராவீல்	111700
சில்லீ	150
கியூபா	3000
பிரேக்வே	200
பேரோ	6000
பிறக்வே	700
ஆக மொத்தம்	174988

அர்ஜண்டாய்னின் நீக்ரோ முஸ்லிம்கள்.

பராவீல், அர்ஜண்டாயின் ஆகியப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் குடிஜனங்கள்

'நிரோதாஸ்' என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த ஜனங்களெல்லோரும் வர்க்கத்துறையில் நீக்ரோ (ஹபஷி) களைச்சேர்ந்தவர்களாவர். அன்னோர், ஷாமிய தார்கான் ஜனங்களுடைய அரும் பெரும் பிரயாசைகளின் காரணத்தால் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டவர்களாவர்.

பராஸீலிலுள்ள ஷாம் துருக்கி வியாபாரிகள் மிகப் பெரும் பணக்காரர்களாயும் செல்வாக்காளர்களாயு மிருக்கின்றார்கள். இங்குள்ள துர்க்கியக் குடி ஜனங்களின் தொகை சுமார் அறுநூறுகும். மிஸ்டர் முஹம்மத் ஜங்கிஸ் என்பார் எடுத்துள்ள திட்டப்படி பராசிலின் நீக்ரோ முஸ்லிம்களின் தொகை மட்டும் ஓர் இலக்ஷத்துக்கு அதிகமேயாகும். இந்த ஜனங்கள் பூர்வத்தில் பழங்கால அடிமைகளுடைய சந்ததியினின்று தோன்றியவர்களாவர். பராஸீலிலுள்ள முஸ்லிம்களின் பொருளாதாரம் நல்ல நிலையிலிருந்து வருகிறது. அன்னவர்களுடைய ஆதீனத்தில் பெரும் பெரும் வியாபாரச் சாதனங்கள் இருக்கின்றன. உலகத்திலேயே மிகச் சிறந்ததாயும் பிரசித்திப் பெற்றதாயும் மதிக்கப்பட்டு வரும் நகரங் களிலொன்றாய ரியூடிஜினிரோ என்னும் இடத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாயிருந்து வருகின்றனர். இவ்விடத்தில் நேர்த்தியான பல மஸ்ஜிதுகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்து வருகின்றன.

அர்ஜண்டாயினின் நிலைமை.

அர்ஜண்டாயினில், முஸ்லிம்களின்தொகை அபிவிருத்தியடைந்து கொண்டே செல்கின்றது. பராஸீலின் ஆயிரக்கணக்கான ஷாம் வியாபாரிகள் தங்கள் வியவகாரச் சாதனங்களைச் சென்ற பதினைந்து ஆண்டுகளுக்குள் இங்கு மாற்றிக் கொண்டுள்ளார்கள். பராஸீலிலிருந்து மூன்று நாளுக்கொரு முறையாக வெளிவரும் "அல் அப்கார்" என்னும் அரபிப் பத்திரிகையின் ஆசிரியராகிய டாக்டர் ஸயீது அபூஜம்ரத் அவர்கள் அறிவித்துள்ளபடி, அர்ஜண்டாயினின் முஸ்லிம்களின் ஜனத்தொகை ஒரு இலக்ஷத்துக்குச் சமீபத்திருக்கிறதெனத் தெரிகிறது. மேலும் அர்ஜண்டாயினில் முஸ்லிம்கள் இராஜீய விஷயங்களில் அதிக விவேகமும் அறிவுமுள்ளவர்களாயிருந்து வருவதால், அங்கு நவ் முஸ்லிம்களின் தொகை நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வருகிறது. எனவே ஷாம் வியாபாரிகளிற் பலர், அதிக ஊக்க உற்சாகத்தோடு அர்ஜண்டாய்னில் இஸ்லாம் மதப்பிரசாரஞ் செய்து வருவதின்பயனாய், அந்நாட்டில் பூர்வகாலமாயிருந்து வரும் ஜனங்கள் தான் சீக்கிரமாக இஸ்லாத்தைத் தழுவிக்கொள்கின்றனர். அவ்வாறு புதிதாக இஸ்லாத்தைத்தழுவும் நவ்முஸ்லிம்களின் ஜீவனோபாயவழிக்காக வென்று அர்ஜன்டாயினில் பல முஸ்லிம் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்விடங்களில் நவ் முஸ்லிம்கள் ஏராளமாகயிருந்து பலவிதமான கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன் நவ் முஸ்லிம்கட்குப் பொருளுதவியும் செய்யப்பட்டு வருகின்றது.

தென் அமெரிக்காவின் இஸ்லாமிய பத்திரிகைகள்.

தென் அமெரிக்கப் பிரதேசங்களில் அநேகப் பத்திரிகைகள் இருந்து வருகின்றன. அவற்றினுள்பராஸீல் என்னுமிடத்தில்நடைபெறும் இஸ்லாமியப் பத்திரிகைகளின் ஜாபிதாமட்டும் பின்வருமாறு:—

பேர்.	விபரம்.
"அல் அப்கார்"	வார மிருமுறை.
"அல் அத்லு"	தினசரி.
"ரோஜ்நாமா அமெரிக்கா"	தினசரி.
"அல் ஹதீத்"	வாரப் பதிப்பு.
"அல்பரீத்"	வாரப் பதிப்பு.
"பத்யாலீனன்"	வார மிருமுறை.

இவற்றில், 'அல்அத்லு' என்னும் தினசரிப் பத்திரிகையானது பராஸீலின் தலைநகராகிய ரியூடீஜனீரோ என்னு மிடத்தினின்று பிரசுரமாகின்றது. மற்றையபத்திரிகைகள் பராஸீலல்லாத இதர வியாபார ஸ்தலங்களாகிய ஸாட், பாட்டோ, ஸொனீலோ, பாலோ முதலிய இடங்களி னின்று வெளியாகின்றன. இதுவன்றி மாஜி துருக்கிக் கான்ஸலின் அறிக்கையின்படி ரோஸியான் என்னும் நகரத்தில் மட்டும் சுமார் நான்கு லக்ஷத்து ஐயாயிரம் முஸ்லிம்கள் இருக்கின்றனரென்று தெரியவந்துளது.

பத்திரிகாத் தொழிலின் இரு அரும் முன்மாதிரிகள்

(மௌலானா அப்துல் மாஜித் சாஹிப் வரைவது.)

ஸி. பி. இஸ்காட் எனும் பேரறிஞர் சமீபத்தில் கடந்த ஆண்டுதான் காலஞ் சென்றார். அன்னவர் பல்லாண்டுகள் வரை, ஆங்கிலேய தேசத்திற்கே அரும்பெரும் பிரசித்திப் பெற்ற பத்திரிகையாகிய "மான் செஸ்டர் கார்டியன்," என்பதின் பத்திரிகாசிரியராகவும், அதிபராகவு மிருந்து வந்துள்ளார்.

"மான்செஸ்டர் கார்டியனா"ன்து மேனாட்டில் நிலவும் சகல தினசரிகளைக் காட்டிலும் மிக மிக அதிக செல்வாக்குள்ளதாயும், மக்களால் ஆதரிக்கப்படுவதாயும், திறம்பட நடத்தப்படுவதாயு மிருந்து வருகிறது. இப்பத்திரிகைக்கு ஏற்பட்ட இத்துணைக் கீர்த்தியும் செல்வாக்கும் புகழும் அதன் ஆசிரியரவர்களால் அதற்குத் தேடிவைக்கப்பட்ட தாகும். எனவே, அதன் ஆசிரியரவர்கள் அப்பத்திரிகையின் ஜீவியத்தூடேயே தன்னுடைய ஜீவியத்தையும் சம்பந்தப்படுத்திக் கொண்டு வந்தாரெனக் கூறுவது மிகையாகாது.

'லார்டு நார்த்கிலிப்' என்பாரும் உலகப் பிரசித்திப்பெற்ற எழுத்தாளர் (ஜர்னலிஸ்ட்) களிலொருவராய் விளங்கிவந்து, சில வருஷங்களுக்கு முன்னரேதான் இறந்து போய்விட்டார். இன்னவர், டைம்ஸ், டெய்லி டைம்ஸ் முதலிய பத்திரிகைகட்கு அதிபராகவும், டைரக்ட ராகவுமிருந்துள்ளார். இவரது பேர் பிரபல்யமானது பிரிட்டிஷ் நாட்டின் மூலைமுடுக்கு களிலெல்லாமுங்கூட பரவி எங்கும் உச்சரிக்கப்பட்டு வந்தது.

மேற்கூறப்பட்ட இருபெரும் அறிவாளிகளும் ஒரே காலத்தினர்களாகவும், ஒரே விதத் தொழிலிலீடுபட்டவர்களாகவும், அந்நாட்டு மக்களால் மதிக்கப்பட்டவர்களாகவும், அக்காலத்தோரில் பலவகையில் சிறந்தவர்களாகவு மிருந்துள்ளார்கள். ஆனால் இருவருடைய வாழ்க்கைப் போக்கின் திட்டமும், நித்திய நடைமுறையும், வெவ்வேறு விதமாகவே இருந்து வந்துள்ளது. எனவே அவ்விரு ஆசிரியர்களுடைய வாழ்க்கையனுபவத்தில் காணப்பட்டுவந்த விசேஷங்களை மட்டும் கீழே குறிப்பிடுவோம்.

மிஸ்டர் ஸ்காட்டின் வாழ்க்கைமுறை

பத்திரிகை நடத்துவது, பொது ஜனத் தொண்டிற்காகவேயாம் என்பது அறிஞர் ஸ்காட்டின் உள்ளக் கிடக்காகும். மேலும் ஆசிரியத் தன்மை என்பது நேர்மையாக உழைக்கும் ஒரு மெஷினுக்கு நிகரானதென்றும், மானிடர்களை சீர்திருத்தத்தின் பக்கல் அழைக்கும் சாதனமாகுமென்றும் அவர் கருதி உழைத்துவந்தார்.

அவரது பத்திரிகையின் அனுபவரீதியான கடமைகள் யாதெனில்:— தமது வாசகர்கட்கு விஷய ஞானங்களையும், சமாச்சாரங்களையும் காலந்தவறாது அளித்தல்வேண்டும்; அவ்விஷயங்கள் எண்ணிக்கையில் மிக மிக அதிகமாய் வேண்டுமென்பதில்லை; ஆனால், சிறப்பிலும், நேர்த்தியிலும், தன்மையிலும் மிக மிக மேன்மையானவையாக இருத்தல் வேண்டும்; அவ்விஷயங்களைத் தேர்ந்தெடுத்துச் சேகரம் செய்யும்முறை நியாயமும் சத்தியமுமான விதத்திலாயிருக்கவேண்டும்; நிகழ்வுற்ற வரலாற்றின் தகவல்களை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமாயின், அது உண்மையில் எங்ஙனம் நிகழ்வுற்றதோ அதே வண்ணமா யிருத்தல் வேண்டும்; அதில் சிலவற்றைத் தள்ளிவிடுவதோ, குறைத்துவிடுவதோ, அதிகப்படுத்துவதோ, மாற்றியமைப்பதோ கூடாது; பத்திரிகையில் சமாச்சாரங்களை எம்மட்டும் பிரசுரிக்கவேண்டியிருப்பினும், அவற்றில் நடுத்தெருவின் வதந்திகள், இட்டுக் கட்டிக் கூறுவோரின் கைச்சரக்குகள் முதலியன சிறிது மிருத்தல் கூடாது. ஆகவே, யாவும் வாஸ்தவமாகவும், விளக்கமாகவும், ஆதாரமுள்ள தகவல்களாகவுமே இருத்தல் வேண்டும். (இவைகளெல்லாம் தினசரி நிகழ்வுறும் சமாசாரங்களைப் பற்றிய முன்மாதியாகும்.)

இனி விஷய வியாஸங்களை வெளியிடுவதாயின், அதன் வாயிலாய்த் தற்கால நிகழ்ச்சி

சம்பந்தமான விஷயங்களை எடுத்துக்கொண்டு, அது விஷயத்தில் வாசகர்கள் நடந்துய்வதற்கான நேர்மையான வழியைப் போதிக்கவேண்டும்; அவை, வாசகர்கள் ஆழ்ந்து சிந்தித்து விசால அறிவுபெறத் தக்கனவாகவுமிருத்தல்வேண்டும்; அவ்வியாஸங்கள், வாசக நேயர்களின் மனோ நோக்கங்களை மிக மிக மேலான நிலைக்குக் கொண்டுபோகத் தக்கனவாகவும், சிந்தனை உணர்ச்சிகளை மிக மிகத் தூய்மைப்படுத்தி வைப்பனவாகவும், அவர்களது அபிப்பிராயங்களை மிக மிக சிரேஷ்டமானதாய்ச் செய்யக்கூடியனவாகவு மிருத்தல்வேண்டும்; ஜனங்களுடைய அபிப்பிராயங்கள் தவறான வழியிலாயிருக்குமாயின், அவைகளை நேரான வழிக்குக் கொண்டுவரக் கூடியனவாகவு மிருத்தல்வேண்டும்; பொதுஜன உணர்ச்சிகளில் முரண்பாடுகளிருக்குமாயின், பத்திரிகைக்கு அபகீர்த்தியோ கீர்த்தியோ உண்டாய்விடு மென்பனவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அம்முரண்பாடுகளை உடனுக்குடன் எதிர்த்துக் கண்டித்துச் சீர்திருத்தம் புரியத்தக்கவைகளாகவு மிருத்தல் வேண்டும்; எக்காலும் சத்தியத்தையும் நியாயத்தையுமே எடுத்துப் போதித்துக் கொண்டிருத்தல் வேண்டும்; தனிப்பட்ட முறையில் ஏற்படும் நேசப் பான்மையையோ விரோதப் பான்மையையோ பத்திரிகையில் எடுத்துக் கூறுவதைப்பற்றிக் கூடியமட்டிலும் பேணிக்கொள்ள வேண்டும்; பொதுஜனப் பரிகாசத்துக்கிடம் கொடுக்கக் கூடியவற்றைப் பின்பற்றி நடத்தல் கூடாது; ஆனல் நமது முக்கிய-பிரதம-அசல் நோக்கமான (பத்திரிகை நடைப்பெறுவதில்) தேசத்துக்கு அனுகூலமும், பிரஜைகட்கு வெற்றியும் கிடைக்க வேண்டும் என்னும் நோக்கமிருத்தல் வேண்டும்; சுருங்கக்கூறுமிடத்து, பத்திரிகாசிரியரின் நடைமுறைப் பாங்கானது தற்காலீகமான விஷய சமாச்சாரங்களையொட்டி உலக வியலினுள் பொது மக்கட்கு அவர் ஓர் வழிகாட்டியாகவும், போதகராகவும், சீர்திருத்தக்காரராகவுமிருத்தல் வேண்டும். என்பதே.

லார்டு நார்த் கிலிபின் முறை

பத்திரிகை நடத்துதல், வணக்கம் அல்லது உபதேசம் புரிவதில் சம்பந்தப்பட்டதென எண்ணிக்கொள்ளுவது ஒருவித மூடத்தனமாகும் என்று லார்டு நார்த் கிலிப் கருதியிருந்ததாக அவரது வாழ்க்கைத்தத்துவத்திலிருந்து தெரிய வருகின்றது. ஆகவே பத்திரிகாத் தொழில் சம்பந்தமாய் அவருடைய முறையாவன :—

'ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர் தன்மை வகிப்பதும் ஒருவிதமான வியாபாரமேயாகும்; ஆகையால் ஓர் ஆசிரியருக்கு மகிமையை அளிக்கவல்ல அம்சம், அவரது கல்வியாற்றலும் சத்தியாசாரமுமா யிருப்பதற்கு பதிலாய் அவர் அடையும் "வெற்றி" யாகவே யிருக்கின்றது; பத்திரிகையின் கைங்கரியம் பொதுஜனங்களுடைய அபிப்பிராயங்களை ஒழுங்குபடுத்துவதோ, ஆதிக்கங்கொள்வதோ அன்று; ஆனல், அவர்களது நோக்கங்களுக்கேற்ப நடந்துகொள்வதேயாகும்; தமது மனச்சாக்ஷியைத் தான் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதில்லை; பொதுமக்கட் போக்கின் காற்றடிக்குந் திசையே பத்திரிகைப் பின்பற்றுந் திசையாகும். ஏனெனின், வியாபாரியின் நோக்கமானது பொதுஜன விருப்பத்துக்கேற்ப தன் கடையை வனப்புப் படுத்திவைத்து, கிராக்கிக்காரர்களை சந்தோஷப்படுத்தி வைப்பதேயாகும். இஃதல்லாமல் தேசத்துக்கு நலவானதென்ன? ஜனங்கட்கு அனுகூலமானதென்ன? என்று தர்க்கவாதம் பண்ணி நடப்பது கடைக்காரனுக்கு அவசியமானதல்ல! விஷமானதாயினும்சரியே, விஷத்தை நிவர்த்திக்கக்கூடியதாயினுஞ் சரியே இரண்டையும் விற்பனை செய்வதே மருந்துக் கடைக்காரனுடைய வேலை. ஆகையால் பத்திரிகாத் தொழிலும் ஒரு கடைக்கார வியாபாரியின் தொழிலுக்கு நிகரானதாகவே இருக்கிறது. இதனல் மிஸ்டர் ஸ்காட்டின் அபிப்பிராயம் பொதுஜன நன்மையாயிருந்தது; லார்டு நார்த் கிலிப்பின் அபிப்பிராயமோ பொதுஜனனுகூலத்தையோ, மதாசாரத்தையோ பொருட்படுத்தாமல், வெறும் வியாபார ரீதியாயிருந்ததென்பது நன்கு புலனகிறது.

தவிர 'பத்திரிகாசிரியரின் காரியமானது ஜாக்கிரதையாகவும், விசால நோக்கமுள்ளதாகவு மிருப்பதினோடே, பொதுஜனங்களின் பற்று எந்த விதத்திலிருக்கிறதென்பதையும் அனுசரித்து நடந்துக்கொள்ளவேண்டும்; பொதுமக்களின் விஷய ஞானதாகத்தை எந்

தெந்தவிதத்தால் தணித்துவைத்தல்வேண்டுமென்பதையும் கவனித்தொழுகல்வேண்டும்; எனவே அசாத்வீக நடப்பு சம்பந்தமான விஷயங்களைப் படிப்பதை ஜனங்கள் அதிகம் விரும்புவதாயின், அதற்கேற்ற செய்திகளைக் கொண்டே தம் பத்திரிகைகளை நிரப்பவேண்டும். உதாரணமாக :—"லாஹூர் நகரில் பீரங்கிப் பிரயோகம் நடந்தது"—"லக்னோவில் பட்டப்பகலில் கடைகள் கொள்ளையிடப்பட்டன"—"தந்தையே தன் பிள்ளையைக் கொன்றுவிட்டான்"—"இன்னான் அன்னனைக் கழுத்தறுத்துவிட்டான்"—"ஒரு கொடிய தாய் தன் பிள்ளையின் ஈரலையே கடித்துத் தின்றுவிட்டாள்"—"அண்ணன் தம்பியுடைய இரத்தத்தைக் குடித்துவிட்டான்"—"ஒரு நிலச்சுவாதீனன் ஒரு குடியானவனைச் சுட்டுத்தின்று விட்டான்"—என்பன போன்றவைகளாகும்.

இவ்வாறே, பொதுமக்களின் விஷய ஞான விருப்பம் பின்வரும் தலையங்கம் போன்றனவாயிருப்பின், அவ்வாறான விஷயங்களையே திரட்டிப் போட்டாகவேண்டும். அவை :—"கலியாணச் சந்தடியில் மாப்பிள்ளையைக் காணோம்"—"ஒரு தாலூக்காதாரரின் மகள் நாடோடியுடன் சேர்ந்தோடிவிட்டாள்"—"போர்டிங் அரண்மனையின் மணவரை மர்மம்" "ஒரு பெண்மணி கூறுவது"—"ஆயிஷாவின் அற்புத நிகழ்ச்சி"—இன்னும் இதைப்போலொற்றவையுமாகும். சுருங்கக் கூறுங்கால், பத்திரிகையானது முன்னேற்றமடைய வேண்டுமாயின் பொதுஜனங்கள் கேட்கவும், படிக்கவும் விரும்பும் விஷயங்களையே பிரகடனப்படுத்தல் வேண்டும் ; இவையல்லாமல், 'அவர்கள் கட்டாயம் கேட்டோ படித்தோ பிரயோஜனம் பெற்றாகவேண்டும்' என்பதை கவனித்தல் வியாபார முறையாகமாட்டாது ; பத்திரிகையின் பிரதான அம்சமானது பெரும் பெரும் கொட்டை யெழுத்துள்ளதாகவும், திடுக்கிட்டு பதற்றத்தோடு படிக்கத்தக்க விஷயங்கள் நிரம்பப்பெற்றதாகவு மிருத்தல்வேண்டும் ; நடுவீதியின் வதந்தியைக் கூட உண்மையானதாகவே திரித்துப் பிரசுரித்து விடவேண்டும் ; எந்தக் கதையையும் உண்மைக் கதையாக்கிவிட வேண்டும் ; நிகழ்ச்சிச் சமாச்சாரங்களை கூட்டியோ, குறைத்தோ, நிராகரித்தோ, அனுசரித்தோ, திரித்தோ, மாற்றியோ எந்தவிதத்திலாயினும் பொதுஜன விருப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் வழியில் வெளியிட்டுவிட வேண்டும் ; அவ்விதம் வெளியிடும் விஷயம் தன் கொள்கைப் போக்குக்கே விரோதமாயிருப்பினுஞ் சரியே, என்பதே. இதனாலும் மிஸ்டர் ஸ்காட்டின் அபிப்பிராயம் பொதுஜனங்களுக்கு நன்மைபயக்கும் விதத்திலிருந்ததென்பதையும், நார்த் கிலிப்பின் அபிப்பிராயம் பொது ஜனானுகூலத்தையோ மதாசாரத்தையோ பொருட்படுத்தாது வெறும்வியாபாரப் போக்கிலேயே யிருந்ததென்பதும் நன்கு புலனாகின்றது.

இருமுன் மாதிரிகளின் பலன்களும், இடர்களும்

மேற் கூறப்பட்டுள்ள இரு முன்மாதிரிகளில், அவ்விரு பத்திரிகாசிரியர்களும் தம்தம் நடைமுறைப் போக்கில் திறமை பெற்றிருக்கின்றார்களென்பதில் ஐயமில்லை. ஆனால் அவ்விருவிதப் போக்குகளில், "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையானது தனது சத்தியத்தன்மையாலும், சீரிய அமைப்பினாலும் தனிப்பட்ட மகிமையையும் கீர்த்தியையும் பெற்று பிறற்கோர் நமூனாவாய் விளங்குகின்றது. இதுவன்றி காலநிலைக்குரித்தான விஷயங்கள்மீது நேர்மையானபோக்கை யனுசரித்தும், தன் சுயதன்மைக்குப் பிரியமான போக்கைவிட்டு ஒதுங்கியு மிருந்தமையால் அது புகழ்ந்து கூறுவதற்குரியதாக யிருக்கிறது. ஆகையினால் அப்பத்திரிகையின் வாசகர்த் தொகையானது அளவுக்கதிகமாய்ப் பெருகிப் போகாதிருப்பினும், தேசமக்களெல்லோரும் அதனை சத்தியத்தைப் போதிப்பதென்றும், பெருந்தன்மைப் பூண்டதென்றும், நேர்மையான போக்குடையதென்றும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு ஆதரித்து வந்தார்கள். எனவே "கார்டியன்" பத்திரிகையின் தன்மையும், அமைப்பும், நடப்பும் சிறுகச் சிறுக பெருமைப் பெற்று பிறர்க்கு வழிகாட்டக்கூடிய அரும் பெரும் நமூனா (முன்மாதிரியாய்) ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. மேலும், அதில் வெளிவரும் சமாச்சாரங்களெல்லாம் உண்மையானதாய்—நம்பத்தக்கனவாய்—ஆதாரமுள்ளனவாய் இருக்குமென்பது பொதுஜனங்களின் உள்ளத்தில் நன்கு பதிந்துப் போயிருந்ததினால், பத்திரிகைக்குநன்மதிப்பும், நேர்

மையான கண்ணியமும் மிதமிஞ்சியவிதத்தில் கிடைத்திருந்தும் அறிஞர் ஸ்டாக், மிதமிஞ்சிய செல்வங்களைத் திரட்டிக்கொள்ள முடியவில்லை. அதற்கு பதிலாய் நற்பேரும், நன்மதிப்பும், கண்ணியமுமே கிடைத்தன. இதன் காரணமாய், அதற்கு எதிரிடையாயிருந்தக் கூட்டத்தினருங்கூட அப்பத்திரிகையை மதித்து வாங்கிப் படித்து அதன் மீது நம்பிக்கைக் கொண்டிருந்துவந்தார்கள்.

லார்டு நார்த் கிலிப் என்பவரோ, அதற்கு நேரிடையான மனப்போக்கும், நடப்புங் கொண்டிருந்தமையால், உலகவியலில்மட்டும் அவர் தடபுடலான முன்னேற்றமும், பரபரப்பான வெறும் மதிப்பும்பெற்று, பொருளாதாரவிஷயத்திலும் வெற்றிப்பெறலானர். அன்னவர் 'டைம்ஸ்' பத்திரிகையை முதலில் தன் ஆதீனத்துக்குட்படுத்திக் கொண்டபின், அதனைக் குறிப்பிட்ட வர்க்கத்தாரின் கருவியாகச் செய்துகொண்டு, அதன் செல்வாக்கினுல் அதற்கு நிதானத்துக்கு அதிகமாகவே (சந்தா) ஏற்படுத்தி வைத்திருந்தார். இங்ஙனம் 'டைம்ஸ்' பத்திரிகையானது குறிப்பிட்ட அபிமானிகட்குரியதாய் விடவே, பொதுஜனங்களைத் தம் வசமாக்கி வைத்துக் கொள்வதற்காகவென்று, காலப் போக்கிற்கேற்றபடி வேறோர் தினசரியை "டெயிலி மெயில்" என்ற பெயரால் நடத்திவரலானர். இப்பத்திரிகையின் பக்கங்கள் முழுதையும் பாமர மக்களுக்கு ஆச்சரியத்தையும், பிரியத்தையும் உண்டாக்கும்படியான சமாச்சாரங்களைக்கொண்டு உணர்ச்சியுண்டாக்கும்படியான கருவியாகச் செய்துகொண்டார்.

எனவே பாமர ஜனங்களின் உற்சாகத்தை அதிகப்படுத்தி வைக்கும்படியான விசித்திர விநோதமானசெய்திகள் எவ்வளவு உண்டோ அவையாவும் அப்பத்திரிகையில் நிரப்பப்பெற்றிருக்கும். அதாவது:--வேடிக்கை விநோத விளையாட்டுகளின் சமாச்சாரங்கள், குதிரைப்பந்தயம், நாய்ப்பந்தயம் முதலியவற்றின் தகவல்கள், கலியாணச் செய்திகள், விவாகரத்துச் செய்திகள், காதல் சம்பந்தமான விநோதச் சமாச்சாரங்கள், கொலை கொள்ளை மோசம் முதலியவற்றின் வரலாறுகள், நவீன மோசத்தனத்தின் காதைகள், குற்றவாளிகளின் வீரதீரத் திருட்டுச் செயல்கள், இரகசியப் போலீஸ்களான துப்பறிவோரின் விநோத விசித்திர சாமர்த்தியங்கள், அநேக இட்டுக்கட்டுக் கதைகள் முதலியச் சமாச்சாரங்களெல்லாம் தினந்தோறும் அபரிமிதமாக வெளி வந்துக்கொண்டிருந்தது.

மேலும் அப்பத்திரிகையில் "நாளைக்கு மிக விசித்திர அற்புதமான இரகசியம் பகிரங்கமாகப்போகிறது" என்று ஒருநாள் முன்னடியாகவே பிரகடனப்படுத்திவிட்டு, இரண்டாம் நாள் அதன் ஆரம்பச் செய்திகளை மட்டுஞ் சொல்லி நிறுத்திக்கொண்டு, மூன்ரும் நாள் அதைப்பற்றிய இதர விபரங்களைத் தெரியப்படுத்துவதும், இன்னும் இதைப்போலவே என்னென்னமோ ஜகஜ்ஜாலப் புரட்டான வின்னியாச விஷயங்களெல்லாம் வெளிவரப்போவதாக விளம்பரப்படுத்திவிட்டு, மறுதினம் அதைப்பற்றிய விபரங்களை விநோதமான முறையில் கூட்டிக் குறைத்து எழுதிவிடுவதும், சில சமயங்களில் முன் வந்த செய்திக்குப் பிழைத்திருத்தமோ மறுப்போ வெளியிட்டுவிடுவதும் அப்பத்திரிகையின் நடைமுறை வழக்கமாயிருந்து வந்தது. தவிர அப்பத்திரிகையில் "மந்திரி அல்லது கனவானுடைய அந்தப்புர இரகசியங்கள்" என்பன போன்ற வின்னியாசங்களும், அபரிமிதமாகத் தங்குதடையின்றி பிரசுரிக்கப்பட்டு வந்தன. இத்தியாதி விபரீதங்களோடு, விசித்திரமான சித்திரப்படங்களும், கால்நிர்வாணம் -அரை நிர்வாணம்--முக்கால் நிர்வாணம் போன்ற போட்டோ (உருவ)ப் படங்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டு வந்தது. மேலும் அவ்வாசிரியர் அப்பத்திரிகையில் சிரிப்புவரக்கூடிய ஹாஸ்யங்களையும், துண்டுத்துணுக்குகளையும், வேடிக்கைக் கட்டுரைகளையும் வெளிப்படுத்திவந்தார்.

ஆகையால் அப்பத்திரிகை மற்றதைக்காட்டிலும் அபரிமிதமாக விற்பனையாகி வரலாயிற்று; இலக்ஷக் கணக்கான பிரதிகள் பிரசுரிக்கப்படலாயின; இது விற்பனையாகிவந்த பிரதிகளின் எண்ணிக்கையை உத்தேசித்துப் பார்க்குமிடத்து, இதன் முன்னிலையில் வேறெந்த பத்திரிகையும் இதற்கு நிகரில்லாதிருந்ததோடு முற்காலத்திலுங்கூட அவ்வளவு அதிகமான பிரதிகள் விற்ற பத்திரிகை வேறெதுவுமிருந்ததாகவும் தெரியவில்லை. அவ்வாறு லார்டு நார்த்துடைய ஜீவிய கால

முடிவுவரையுங்கூட அப்பத்திரிகையின் அதிகப் பிரதி விற்பனையில் வேறெப் பத்திரிகையும் போட்டிப் போட முடியவில்லை.

மேற் கூறப்பட்ட வினோதங்கள் நிறைந்த டெய்லி மெயில் அல்லாது, தனிப்பட்ட வேறு பல வாரப்பத்திரிகை, மாத சஞ்சிகையையும் நடத்திவந்தார். தவிர ஒரு குறிப்பிட்ட வின்னியாச விஷயங்கட்காக வென்று ஒரு தனிப்பட்ட பத்திரிகையும், பெண்களுக்காக வென்றொன்றையும் சிறுவர் சிறுமியர்க்காக வொன்றையும், இதைப்போல் பல விஷய துறைகளிலும் பல பத்திரிகைகளையும் நடாத்திவந்துள்ளார்.

சுருங்கக்கூறின் அவர் எந்தப் பத்திரிகை நடத்தியபோதிலும் மேற்கூறப்பட்ட வியாபாரத் தந்திர முறைப்படியே நடத்திவந்ததால் கூடிய துரிதத்தில் செல்வபாக்கிய முன்னேற்றம் பெறலானர் எனவே வெறும் "மிஸ்டர்" (கனவான்) பட்டத்தோடு இருந்து வந்த அவர் "லார்டு" (பிரபு) என்ற பெரிய பட்டமும் அடைந்து, பண விஷயத்தில் முன்னேற்றம்பெற்று லக்ஷாதி பிரபுவாகவும், பிறகு கோடீஸ்வரராகவு மாறிவிட்டார். அங்ஙனமெல்லாமிருந்தும் ஜனங்களில் எவருடைய மனத்திலும் அவரைப்பற்றி உத்தமமான—சத்யாபிமானம் ஏற்படவில்லை. ஆயினும் அவர் மகா தந்திர சக்தியும் வியாபார தந்திர முறையின் அனுபவமும் பெற்றவரென்று அவரது நாடு மட்டுமின்றி உலகமே புகழ்ந்தது!

முஸ்லிம் பத்திரிகாசிரியர்கள் கவனிக்க!

இதோ நம் கண்முன் பத்திரிகாத் தொழிலின் இருபெரும் முன்மாதிரிகள் காணப்படுகின்றன; இதைக் கண்டுணர்ந்த பின் நம்மனோரின் பத்திரிகாசிரியர்கட்கும், பத்திரிகைத் தொழில்புரியும் 'ஜர்னலிஸ்டு' கட்கும் இரு வழிகள் துலக்கமாய்விடும். எனவே அவர்கள் அதில் ஒரு முறையைப் பின்பற்றினால், தம் பத்திரிகையைப் புத்தியக்கக் கிளர்ச்சி புரிய சாதனமாக்கிக் கொள்ளலாம்; அதனை வியாபாரச் சாதனமாகக் கருதிக்கொண்டு, பெரும் பணம் திரட்டும் கருவியாகவுஞ் செய்துகொள்ளலாம்; விளம்பரங்கள் தேடிப் பெற்று வந்து அவை நல்லதோ கெட்டதோ என்று பாராமல் பிரகடனஞ் செய்து பணத்தைக் கொள்ளைக் கொள்ளலாம்; இன்னவிதமான விளம்பரம், வியாசம், பிரசுரிக்கலாம்; இன்னவிதமானவை பிரசுரிக்கலாகாது என்பனபோன்ற ஒழுக்க நீதி வித்தியாசங்களைப் பொருட்படுத்தாது கண்டதையெல்லாம் பிரகடனப்படுத்தி அதன் தைரியத்தால் விற்பனைக்காக மிக மிக ஏராளமான பிரதிகளை அச்சிட்டுப் பணம் திரட்டலாம்; படிப்பவர்கள் சீர்திருந்துவார்களா? சீர்கெட்டுழன்று போவார்களா என்பன போன்ற (சீர்திருத்த) சிந்தனையை மனத்திற் கொள்ளாமலும், இறைவனுக்கும், ஜனங்களுக்கும் நாம் ஆற்றவேண்டிய கடமைகள் யாதென்பதைப் பொருட்படுத்தாமலும், எல்லாவிதமான வதந்திகள், கட்டுக்கதைகள் விநோதங்கள், விசித்திரங்கள், ஆபாசச் செய்திகள், நிகழ்ந்தவைகள், நிகழாதவைகள் யாவற்றையும் வெளிப்படுத்திப் பிரக்யாதியும் பெறலாம்; அக்கப்போர்களையும் விதண்டாவாதங்களையும் கண்டன மறுப்புக்களையும், எள்ளி நகையாடும் வின்னியாசங்களையும் இஷ்டம்போல் பிரசுரித்து, எந்த விதத்திலும் பணஞ் சம்பாதித்துக்கொண்டு குபேரவாழ்வு வாழலாம்!

மற்றோர் முறையைக் கைக் கொண்டால், அதன் பலன் மேற்கூறியதற்கு நேர் மாற்றமானதாய் முடியும். ஆகவே சன்மார்க்கத்திற்குழைக்கும் பத்திரிகாசிரியர்களும், ஜர்னலிஸ்டுகளும் இம்முன் மாதிரியைப் பின்பற்றி இறைவனுடைய நற்பாக்கியத்தையும், நல்லருளையும் பெற்றுய்வார்களாக. தவிர, சத்தியப் பொறுப்பையும், பெருந்தன்மையையும், நற்குண நல்லொழுக்கத்தையும் சகிப்புச் சுபாவத்தையும், மானுஷ்யத் தன்மையையும், நல்லாசார ஒழுக்கத்தையும் பின்பற்றி நேரிய முறையில் தம் பத்திரிகையை நடாத்தி அழியாப் புகழைப் பெறுவார்களாக. ஆகையால், மேற் கூறப்பட்டபடி பணக் கொள்ளையடித்துக் குபேர வாழ்வு வாழக் கருதுவது சன்மார்க்கத்திற்கு முற்ற முற்ற விரோதமாகும் எனவே இவ்விரண்டாம் முறையைப் பின்பற்றியொழுகுவார்களாயின் அவர்களுடைய பேனா என்ன அட்சரங்களை எழுதுகிறது? அதைப் படித்தால் ஜனங்கள் என்ன நலம் பெறுவார்கள்? நாளைக்கு அது உலகத்தில் என்னவிதமான பிரஸ்தாபத்துடன்வரும்? அதனால் மக்

கள் சீர்திருந்துவார்களா? சீர்கெடுவார்களா? என்பனபோன்ற கேள்விகளை யெல்லாம் பயத்துடன் உள்ளத்தில் எண்ணி ஓர்ந்துப் பார்த்து, இகபரத்தின் நற்பேறுகளை விரும்பி நடந்துகொள்வார்களானால், உலகத்தில் நல்ல கீர்த்திப் பிரதாபத்தையும், உத்தமமான கண்ணியத்தையும் பெறுவதோடு, பரத்திலும் புண்ணியத்தையும், ஆன்ம விமோசனத்தையும் பெற்றுக் கொள்வார்களென்பது திண்ணம்.

திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பு

(M. முஹம்மது நூருத்தீன்)

இற்றைக்கு உலகம் அருள் வேதங்களை வெகுவாய் இழந்துவிட்டது. திருக்குர்ஆன் ஒன்று தவிர மற்றெல்லா வேதங்கள் ஆகமங்கள் யாவும் மாறுதலடைந்துவிட்டது. தவ்ருத், ஸபூர், இன்ஜீல் ஆகிய இவ்வேதங்கள் பெயரளவில் உலகத்தில் இருக்கிறதாகத் தென்படினும், அவைகள் அருள் வேதத்தின் தன்மையைவிட்டு வெகு தூரம் ஒதுங்கிவிட்டது. அருள் வேதமென்பது இறைவனால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டு, ஜனங்களின் கை நாட்டு அதில் அறவே ஏற்படாதிருக்கக்கூடியதாக யிருக்கவேண்டும். அப்படி ஏற்பட்டுவிடுமாயின், அதுதான் அவ்வேதங்களுக்கு ஒரு தோஷமாகும். இந்நிலைமையில் அவைகளைப் பரிசுத்த வேதமென்று கூறுவது முடியாத காரியமாகும். மக்கள் பாரமார்த்திக வழியிற் செல்வதற்கு வேண்டிய கட்டளைகள் வேதத்தில் அறிவிக்கப்பட்டிருக்குமாதலின் அஃது ஒருவாறு மானிடர்களுக்குக் கஷ்டமாகத்தான் தோன்றும். அதில் ஜனங்களின் கை நாட்டு ஏற்படுவதாயின் அவர்களின் வழிக்கேற்றவாறு அதனைத் திருத்தியமைத்து விடுவார்களென்பது வெளிப்படை. அதனால் அவ்வேதம் பாரமார்த்திகத் துறையில் சத்தியத்தைவிட்டு அகன்றுவிடுகிறது.

பைபிளின் தன்மையை கவனியுங்கள் புதிய ஏற்பாடென்றும் பழைய ஏற்பாடென்றும் கிறிஸ்தவர்கள் பாகுபாடு படுத்திவைத்துவிட்டார்கள். மேலும் ஒரே ஏற்பாட்டின் பல அச்சுப் பிரதிகளைக் கவனிப்போமானால், அவைகளில் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதாகக் காணப்படுகின்றன. ஆகவே இவைகள் மானிடர்களை நேர் வழியில் கொண்டு செல்லத் தகுதியற்றவை யென்பது வெள்ளிடை மலை.

திருக்குர்ஆனோ அவ்வாறன்று. இறைவனால் அருளப்பட்டவாறே இற்றைக்கும் திகழ்ந்திலங்கிக் கொண்டிருக்கிறது. மூன்றாம் கலீபாவான சையிதுனா உதுமானிப்னு அப்பான் (ரலி) அவர்கள் ஆரம்பத்தில் குர்ஆனை எழுதி வைத்தார்கள். உலகில் பரவியிருக்கும் பிரதிகள் யாவும் அதைத்தான் அசலாகக்கொண்டிருக்கிறது. அதில் எவ்வித வித்தியாசமுங் கிடையாது. ஒருகால் அச்சிடுபவர்களால் தவறுகள் நிகழுமாயின், குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்கள் அதனை ஒழுங்கிடத் தயாராயிருக்கின்றனர். எனவே ஒரு சிறு அக்ஷரமும், புள்ளியும் வித்தியாசப்படாமல் இப்பிரபஞ்சம் முழுதும் ஒரேவிதமாய்த் திகழும் வேதம் திருக்குர்ஆன் ஒன்றேயாகும்.

இத்திருவேதம் உலகின் பிரதானப்பாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டிருக்கிறது. நந்தமிழ் பாஷையிலோ போதிய விபரங்களோடு மொழிபெயர்க்கப்படாமலிருப்பது நம் துரதிர்ஷ்டமேயாகும். அரபுத்தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருப்பினும் அஃது சுருக்கமாகச்செய்யப்பட்டிருப்பதால் அதைக்கொண்டு அருள் வேதத்தின் கருத்துக்கள் செவ்வனே அறிந்துகொள்ளக்கூடியதாகயில்லை. அஹ்மதிகளின் மொழிபெயர்ப்போவெனின், குர்ஆனின் கருத்துக்கும் ஹதீதுகளின் பொருளுக்கும் முற்றும் விரோதமாயிருக்கிறது ஆகவே அதனால் வழிகேடு அதிகரிக்குமேயன்றி எவ்விதப்பிரயோசனமு மேற்படப்போவதில்லை.

திருச்சி நூற் பிரசுர சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள வியாக்கியானம் பயன்படத் தக்கதா யிருப்பினும் அஃது ஒருபாகம் மட்டுமே வெளியிடப்பட்டி ருக்கிறது.

ஹி. இ. சங்கத்தார்கள் தங்கள் மாசிகை மூல்யம் ஒவ்வொரு அத்தியாயமாய் மொழி பெயர்த்து விரிவுரையுடன் வெளியிட்டு வருகின்றார்கள்; அவ்வத்தியாயங்கள் இறக்கப்பட்டபோது நிகழ்ந்த சரித்திரங்களையும்குறிப்பிடப் படுகிறது. அதனால் தெய்வ அறிவிப்பின் தன்மையையும், அம்சங்களையும் அறிந்து கொள்வதற்கு மிகவும் ஹேதுகரமாயிருக்கிறது இம்மாதிரியான வியாக்கியானம் தமிழ் முஸ்லிம்களுக்கு மிகமிக அவசியமான தென்பதிலேய்யமில்லை. ஆனால் இம் மூன்று வருடங்களி னிறுதியில் திருக்குர்ஆனின் அறுபதில் ஒருபாகந்தான் வெளியிடப்பட்டிருக்கிறது. இதேமுறையில் இதனைச்செய்து முடிப்பதென்றால், நூற்றுக்கணக்கான வருடங்கள் கழிந்துவிடும் ஆகவே இவ்வரிய சேவைக்காக முஸ்லிம்கள் தக்கஉபகாரத்தைச் செய்ய முன்வருவார்களாயின், காலதாமதமின்றி பாக்கி வெளியீடுகளையும் வெளிப்படுத்த சௌகரியம் ஏற்பட்டுவிடலாம். மேலும் திருக்குர்ஆனின்மொழி பெயர்ப்பை மூலம் உரையுடன் தனித்தனிப் பிரதிகளாக அச்சிடவேண்டும். இதற்காவனவற்றை முஸ்லிம் உலகம் கவனிக்குமென்று எதிர்பார்க்கின்றேன்.

கான்ஸ்டாண்டி நோபிளின் வெற்றி.

(சென்ற மாதத் தொடர்.)

முடிவாக துருக்கியர் ஒவ்வொரு நாளும் பகற்காலங்களில் பீரங்கி, வாள் முதலியவற்றால் விளைவிக்கும் சேதங்களை ரூம்தேய சிப்பாய்கள் இராக்காலங்களிலேயே ஒழுங்குபடுத்தி வைத்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு நீண்டநாள் நடைபெற்று வருவதை அறிந்த சுல்த்தான் அவர்கள், தரைமார்க்கமாக யுத்தம் புரிவதில் எவ்விதப் பிரயோஜனமுமேற்படாதென்பதை நன்கு தெரிந்துகொண்டு, வேறு எவ்வாறுன வகையுமில்லாது, கடல் மார்க்கமாய்த்தான் ஏதாவதொரு முறையைக் கையாள வேண்டுமென்னும் நிர்ப்பந்தத்திற்காளானார்கள். இந்நிலைமையில் ரூமியர்கள் அபரிமிதமாகக் குண்டுப் பிரயோகஞ் செய்ததின் பயனை துருக்கியர் பலவாறான சங்கடங்களுக்காளாகியும் ஆயிரக்கணக்கான உயிர்களை தியாகஞ் செய்தும் கடைசியில் அபஜயமே அடைந்தார்கள். அதற்குப் பின்னும் துருக்கியர் தங்கள் முழுபலத்தையும் உபயோகித்து சுத்த வீரியத்தன்மையோடு போர்புரிய முற்பட்டும் பீரங்கி குண்டுகளின் தாக்குதல் களினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டவர்களாய் பெரும் தோல்வி அடையும்படி நேர்ந்தது. முடிவாகக் கூறுமிடத்து தரைமார்க்கமான இவ்யுத்தத்தில் எதிரிகளுக்கே அதிகப் பிரயோஜன மேற்பட்டு பலவகையிலும் துருக்கியர் முன்னேறுவதற்கான பல வழிகளும் அடைபட்டுப் போய்விட்டதெனலாம். ஆகவே துருக்கியர் தங்கிப் போர் புரிவதற்குள்ள உயரமான யாதொரு இடமும் அவர்களுக்குக் கிடையாதிருந்தது.

அதுபொழுது சுல்த்தான் அவர்களின் நிலைமையோ பரிதவிக்கத் தக்கதாகயிருந்தது. ஒரு மாதகாலம் யுத்தம் நடைபெற்று பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கும் பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கும் சேதமேற்பட்டிருந்தும் யாதொரு பிரயோசனமுமேற்படவில்லை. கடைசியாக சுல்த்தான் அவர்களுக்கு எவ்வகையிலும் ஜெயமேற்படுவதற்குள்ள மார்க்கம்தென்படாததால், எவ்வாற்றாலும் முயற்சித்து தந்திரமாக உள்ளால் பிரவேசித்துவிட வேண்டுமென்று கருதியும், கோட்டை மதிளின்மீது சிப்பாய்கள் காவல்புரிந்து நிற்பதால் எவ்வகையினுல் அக்காரியம் கைகூடுவதற்கு ஹேதுவில்லாது

இருந்தது. இதைக்கண்ட சுல்த்தான் அவர்கள் தங்களது முழு யுக்தியையும் பிரயோகித்து ஒரு தந்திரமான முறையைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் அவ்வாறுனயோசனை இதுவரை எந்தச் சரித்திர புத்தகங்களிலும் காணப்பட்டதேயில்லை. அதாவது பாஸ்பரஸ் ஜலஸந்தி, சமுத்திரத்தின் கிளை இவைகளுக்கிடையிலுள்ள கற்பாங்கான 10 மைல் தூரத்திலும் கப்பலைச் செலுத்திக்கொண்டு வந்து, அதனை அரணுக்குச் சமீபமாக கடலில் போட்டுவிட வேண்டுமென்பதே. ஆனால் காய்ந்து வரண்டுபோன கற்பாறையான பூமியில் கப்பலைச் செலுத்திக் கொண்டுபோவதென்பது எவருடைய கனவிலுங்கூட ஏற்படாத நூதன விஷயமேயாகும். அவ்வபாரச் செயலை சுல்த்தான் அவர்கள் அனுஷ்டானத்தில்செய்துமுடித்து வெற்றிக்கொடி நாட்டிவிட்டார்கள். எனவே முதலாவதாகவரண்டுகிடந்த அப்பூமிஒழுங்கு படுத்தப்பட்டது; பிறகு கிடங்குகள் தோண்டப்பெற்று அதன்மீது பலகைகள் பரத்தப்பட்டன; அப்பலகைகளின்மீது கொழுப்பு எண்ணெய் முதலியவைப் பூசி வழுக்கிடப்பட்டது; பிறகு அதன்மீது கப்பல் ஏற்றப்பெற்று சிப்பாய்கள் யாவராலும் இழுத்துச் செல்லப்பட்டு சமுத்திரங் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது. இவ்வாறு 80 கப்பல்கள் ஒரே இரவில் மதிளுக்குச் சமீபத்திலுள்ள கடலுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டுப் போயிற்று. கோட்டைக்குள்ளாலிருந்தவர்கள் இரவெல்லாம் விளக்கு வெளிச்சமும் பெரிய சப்தமும் ஏற்பட்டுக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தார்களாயினும் என்ன நடைபெற்றுக் கொண்டிருந்ததென்பது அவர்களுக்குத் தெரியாது. ஆனால் அதிகாலையில் துருக்கிய வீரர்கள் தங்கள் கொடியைப் பறக்கவிட்டார்களாதலின்,மதிலுக்குச் சமீபமாகநிற்பதைக் கண்ட எதிரிகள், அறிவு மயங்கியவர்களாய் பிரமித்துப்போய் தாங்கள் காண்பது கனவா? அன்றி வாஸ்தவமாகவே இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறதாவென சந்தேகங் கொள்ளலாயினர். இதனைக் கண்ட கைஸரானவன் கடும்போர் நடத்துவதற்குக் கட்டளை பிறப்பித்தான். ஆனால் துருக்கி வீரர்கள் தக்க வசதியான இடத்தில் நின்று கொண்டிருந்ததால் கிறிஸ்துவப்படையினரால் எவ்வித இடையூறுகளும் செய்துவிடுவதற்கு ஹேதுவில்லாது போய்விட்டது. கடலில் ஏற்படுத்தப்பட்டிருந்த துருக்கிச் சிப்பாய்கள் தங்கள் முழுபலத்தையும் உபயோகித்து எதிரிகளைத் தாக்கியதால், முற்பட்டுவரும் ஒவ்வொரு கப்பலும் சமுத்திரத்திற்குள் தாழ்த்தப்பட்டே வந்தது. இதைப் பார்த்து கைஸருக்கும், அவனது பட்டாளங்களுக்கும் ஏற்பட்டிருந்த ஆதரவுகுன்றி, தங்கள் உயிர்களையும் சொத்துக்களையும் கையிழந்தவர்களாய் கைசோர்ந்து உட்கார்ந்துவிட்டார்கள். அதுபொழுது கைஸரானவன் மிகத் தாழ்மையோடு மன்னிப்புக் கேழ்க்க முற்பட்டான். ஆனால் சுல்த்தான் அவர்கள் அதற்கு இடங் கொடுக்கவேயில்லை. இந்நிலைமையிலேயே ஒருவாரம் செல்லுபடியாய் விட்டதால், எதிரிகள் பெரும் பலத்தைத் தேடிக்கொண்டு விட்டார்கள். மேலும் ஹங்கேரி இட்டாலி முதலிய தேசங்களிலிருந்தும் உதவிக்காகப் படைகள் அனுப்பப்பட்டிருக்கிறதென்னும் செய்தியும் சுல்த்தான் அவர்களுக்கு எட்டிற்று.ஆதலால் இனி தாமதித்துக்கொண்டிருப்பதில் எவ்விதப் பிரயோசனமுமில்லை என்பதை நன்கு தெரிந்திருந்த சுல்த்தான் அவர்கள், 1453-ம் ஆண்டு மேய்மீ 29-ம் தேதியை யுத்தத்திற்காகக் குறிப்பிட்டுத் தெரிவித்துவிட்டார்கள். அதுபொழுது சுல்த்தான் அவர்கள் தங்கள் சிப்பாய்களுக்கு மிதமான நன்கொடையளிப்பதாக வாக்களித்ததால், யாவரும் ஆனந்த பரவசமடைந்து சந்தோஷ சப்தத்தைக் கிளப்ப ஆரம்பித்து மேய்மீ 28ந்தேதி பட்டாளத்தினர் யாவரும் நோன்பு நோற்று, நோன்பு திறந்தவுடன் மிதமான விளக்குகளை ஏற்றி சந்தோஷங் கொண்டாடினார்கள். மறு தினம் நிச்சயம் வெற்றி கிடைத்துவிடுமென்னும் பூர்ண நம்பிக்கை இஸ்லாமிய வீரர்கட்கு ஏற்பட்டிருந்ததால், தக்பீர் தஹ்லீல் முதலியவைகளைக்கொண்டு வானமளாவச் செய்து கொண்டிருந்தார்கள். எதிரிகளோ வெளிச்சத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் கண்டு மதிமயங்கிப் பைத்தியம் பிடித்தவர்களேபோ லாய்விட்டனர். மறு தினம் தமக்கும் தம் ராஜாங்கத்திற்கும் முடிவேற்படப் போகிறதென்பதை நன்கு அறிந்துகொண்டிருந்த கைஸரானவன், தமது மந்திரி பிரதானிகளைக் கடைசி முறையாகச் சந்திக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு யாவரை

யும் தமதிருப்பிடத்திற்கு அழைத்து ஒவ்வொருவரையும் கட்டித்தழுவி அனுப்பிவிட்டு, ராஜமாளிகையுள் பிரவேசித்து ராணிமார்களையும் கடைசியாகப் பார்த்தவுடன் "அயாஸூபியா" என்னும் கோவிலுக்குச் சென்று மிக்க மனம் வருந்திய அழுகையோடு பிரார்த்தனைப் புரிந்தபின் குதிரையின்மீது வீற்று அகிள்களின் பக்கல் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

ஆண்டவனது கிருபையால் மேய்மீ 29வ காலையில் முஸ்லிம்கள் ஒரே மூச்சாய், கரை கடல் இவ்விரண்டின்மூலம் தாக்க முற்பட்டு, வழக்கம்போல் குண்டுப் பிரயோகஞ்செய்ய ஆரம்பிக்கவே, இதனைக்கண்டு எதிரிகளும் குண்டுப்பிரயோகஞ் செய்தார்கள். இவ்விரு சாரார்களின் குண்டுப்பிரயோகத்தாலேற்பட்ட புகையின் அமளியால் ஒருவரையொருவர் தெரிந்துகொள்வதற்குங்கூட முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதுபொழுது துருக்கிவீரர்கள் தங்களது பராக்கிரமம் நிறைந்த அபாரசக்தியை உபயோகித்து குண்டுப்பிரயோகஞ் செய்ததின் காரணமாக, மதில்களில் அநேகப் பெரும்பெரும் துவாரங்களேற்பட்டுவிட்டது. இதனல் உள்ளாலிருப்பவர்களின் கதி எவ்விதமிருக்கிறதென்பது நன்கு தெரிந்துகொண்டிருந்தது. முஸ்லிம்படைகளிலுள்ள தாத்தாரி, ஷாமீ துருக்கி முதலிய வர்க்க சிப்பாய்கள், அல்லாஹ்வின் பாதையில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகஞ்செய்யும் நோக்கத்தோடு அங்குற்றிருந்ததினல், பீரங்கிப்பிரயோகம் நிறுத்தப்பட்டவுடன் தங்கள் வாளாயுதங்களை மின்னல் வெட்டுவதுபோல் வீசிக்கொண்டு முன்னேறிச்செல்லுங்கால் சுத்தவீரிய பராக்கிரமத்தோடு புலிகளேபோன்று நின்றிலங்கினர்கள். கைஸரின் பட்டாளமும் தங்கள் முழுபலத்தையும் உபயோகித்து வாள் வீச்சைச்கொண்டு கடும்போர்நடத்தினர்கள். இப்போராட்டத்தில் ரூம்தேசத்தின் கியாதிவாய்ந்த "ஜான்குட்யான்" என்னும் பெயருடைய படைத்தலைவன் தம் சேனைகளோடு துருக்கிப் படைக்கு நடுவில் நின்றுகொண்டும், இதர யூனன் தேயப்படைகள் இரு புறங்களிலும் நின்றுகொண்டும் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனல் துருக்கி சிப்பாய்களோ நிகரற்ற தங்களது முழு சுத்த வீரியத்தையும் உபயோகித்து சிறிது நேரத்திற்கெல்லாம் ரூம் தேய சிப்பாய்களின் ஆத்திரத்தை எல்லாம் அடக்கி ஒடுக்கி விட்டார்களாயினும், பின்னல் உதவிக்காகப் படை வருகிறதென்பதை அறிந்த ரூம் தேய சிப்பாய்கள் சற்று ஆறுதல் அடைந்தார்கள். அதுசமயம் மதிளில் அடிக்கப்படும் ஒவ்வொரு குண்டும் அநேகரின் மரணத்தை இழுத்துக்கொண்டு வந்தது. பீரங்கிப் பிரயோகத்தினல் புகை சூழ்ந்துகொண்டதால் ஒவ்வொருவரும் தம் கையில் இன்னதிருக்கிறதென்றுங்கூட தெரிந்துகொள்ள முடியாதிருந்தது; குதிரைகளின் போக்குவரத்தினல் ஏற்பட்ட தூசியானது மேகம்போல் காணப்பட்டது; இனத்தார், விரோதி என்றுங்கூட தெரிந்துகொள்வதற்கு ஹேதுவில்லா திருந்தது; நகாராவின் ஓசையும் குதிரையின் கனைப்புதலும் காயப் பட்டவர்கள் ஆஹ், ஆஹ் வென சப்த மிடுவதும், இஸ்லாமிய வீரர்களின் தக்பீர் முழக்கமும் ஒருவிதமான பயங்கரத் தோற்றத்தை உண்டுபண்ணி விட்டது. இப் பெரும் அமளியால் வெற்றி யாருக்கேற்பட்டிருக்கிறதென்பது எவருக்குமே தெரியா திருந்தது. முடிவாக மாலையில் கிறிஸ்தவர்களின் சப்தம் சற்று அடங்கியதாகத் தெரிந்ததால், அவர்களுக்கு அபஜெய மேற்பட்டிருக்கிறதெனப் புலனய் விட்டது. தமது படைகள் ஆதரவற்று பின்வாங்கிச் செல்ல எத்தனிக்கின்ருர்களென்பதை அறிந்த கைஸரானவன் "ஷபாஷ்" "ஷபாஷ்" இன்னுமொருமுறை சற்று ஊக்கத்தோடு முன்னேறுவீர்களாகில் உங்களுடையதேசம் விடுதலை அடைந்து விடுமென்று கூறி உற்சாக மூட்டிக்கொண்டேயிருந்தான்.

சுல்தான் அவர்களோ, குதிரையின் மீது சவாரி செய்தவண்ணமே யுத்தகளத்தில் தோன்றி யுத்தம் நிகழ்வதைப் பார்த்துக்கொண்டு சிப்பாய்களுக்கு உற்சாக மூட்டிக்கொண்டே யிருந்தார்கள். 10-ஆயிரம் பராக்கிரம சாலிகளான சுத்த வீரியர்கள் சுல்தான் அவர்களுக்குச் சூழால் நின்று அபாயம் நேரிடுங்கால் தங்களினின்னுயிர்களை தியாகஞ் செய்துவிட ஆயுத்தமாக யிருந்துகொண்டிருந்தனர். அதுதான் யுத்தம் முடிவடைதற்குள்ள நேரமாக யிருந்தது. எனவே கிறிஸ்தவப் படையினர் நிலையற்றவர்களாய் விட்டார்கள். கடாசியாக கிறிஸ்தவப்படைத்

தலைவனான கியாதிவாய்ந்த ஜான் ஜஸ்பீ என்பான் மூன்று காயத்துடன் பின் வாங்குவதற்கு முற்படவே, உதவிக்காக வந்திருந்த இதர பட்டாளங்களும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தனர். அச்சமயத்தில் துருக்கியர்களுக்கு கஷ்டமின்றி தாங்கள் கோரிய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளத் தக்க சந்தர்ப்பமேற்பட்டு விட்டது. உடனே கடலிலிருந்த இஸ்லாமிய பட்டாளங்கள் ஒரு கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு கொடியை நாட்டிவிட்டார்கள். இதனைக் கண்ட இதர படடாளங்களும் சற்றேனும் அச்சமின்றி முன்னேறிச்செல்ல முற்பட்டனர். இங்கிலைமையிலும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த கைஸரானவன் இஸ்லாமியப் பட்டாளங்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டதைக்கண்டவுடன் "என் சிரசை தேகத்தினின்று பிரித்து விடுவதற்கு யாராகினுமொரு கிறிஸ்தவன் இல்லையா?" என உரத்த தொனியோடு சப்தமிட ஆரம்பித்தான். இச் சப்தத்தைக்கேட்ட யாரோ ஒருவன், கைஸரது சிரசை துண்டித்து விட்டான். இதுவன்றி உரோமர்களின் தலைவன் பாஸ்பரஸ் ஜலசந்தியில் கிடந்து தவித்துக்கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. இஸ்லாமிய வீரர்கள் தக்க வெளிச்சத்தோடு நகரைக் கொள்ளை யிட்டார்கள். முடிவில் 40 ஆயிரம் கிறிஸ்தவ சிப்பாய்கள் கொல்லப்பட்டும், 60-ஆயிரம் சிப்பாய்கள் சிறையாக்கப்பட்டும் போனதுடன் எஞ்சியவர்களெல்லோரும் ஓட்டம் பிடித்து விட்டார்கள்.

செய்தித்திரள்.

கிள்ளான்.

மிஃரூஜ் வைபவச்சிறப்பு:—25-11-32-ல் இங்குள்ள வியாபார ஸ்தலங்கள் யாவற்றையும் மூடிவிட்டு சகலரும் பள்ளிக்கு வந்து கூடியதும், ஜனாப் மௌலவீ கூ. வெ. ஹஸன் முஹம்மது ஆலிம் அவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மிஃராஜ் சென்று வந்த சிறப்புகளை வெகு சாங்கோபாங்கமாக எடுத்தோதினார்கள். பிறகு ரூத்திப் செய்யப்பட்டு சிற்றுண்டியுடன் இரவு 2 மணிக்குக் கூட்டம் கலைந்து யாவரும் இருப்பிடஞ் சென்று சஹர் செய்துகொண்டு பள்ளிக்கு வந்து பஜர்வரை நபில்தொழுகை நிறைவேற்றிக்கொண் டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பறுஅத் இரவின் மகிமை:—கனம் நாட்டாமை மீ. பீ. அ. ஜமால் முஹம்மது அவர்களின் அரிய முயற்சியால், ஷஃபான் 15-ந் தேதி இரவு, இங்குள்ள கடைகள் யாவற்றும் மூடப்பெற்று மக்ரிப் தொழுகைக்குப் பின் மூன்று முறை யாசீன் ஓதப்பட்டது. பிறகு இஷாத் தொழுகைக்குப் பின் இரவு 9-30-க்கு மௌலவீ கூ. வெ. ஹஸன் முஹம்மது ஆலிம் அவர்களால் பராஅத் இரவின் சிறப்புக்களையும், அதிலேற்படும் விசேஷங்களைப்பற்றியும் நன்கு துலக்கப்பட்டது. பிறகு மெஸர்ஸ் R. E. முஹம்மது காஸிம் & Co. வால் பிஸ்கட்டும், மெஸர்ஸ் M. P. A. J. & Co. வால் காப்பியும் சப்ளை செய்யப்பட்டு, இரவு 1 மணி வரை ரூத்திப் முதலானவைகள் நடைபெற்றது. பிறகு யாவரும் சஹர் செய்துவிட்டு கபரஸ்தான்களுக்குச் சென்று ஜியாரத்துச் செய்துவிட்டு பள்ளிவந்து பஜர் வரை நபிகள் தொழுதுகொண்டிருந்து பஜர் தொழுகையை முடித்துக்கொண்டு தங்களிருப்பிடஞ் சென்றூர்கள். அன்றிரவு பள்ளி முழுமும் விளக்குகளைக்கொண்டு நிரப்பப்பட்டிருந்ததும், கிள்ளானிலுள்ளவர்கள் யாவரும் முதலாளிகள் உள்பட மஸ்ஜிதுக்கு வந்திருந்ததும் பெரும் காக்ஷியாக யிருந்தது. தவிர இவ்விரவில் புரியவேண்டிய அமல்களைக் குறிப்பிட்டு ஜனாப் கோ. அ. பகீர் முஹம்மது சாஹிப் கம்பெனியாரால் வெளியிடப்பட்டிருந்த பிரதிகள் யாவருக்கும் தக்கப் பிரயோசனத்தை அளித்தது பாராட்டத்தக்கதாகும்.

சிங்கப்பூர்

டாக்டர் காலித் ஷெல்டிரேக்கின் வருகை:—டாக்டர் ஷெல்டிரேக்கும், காலித்

ஹிம்ஸனும் சமீபத்தில் சிங்கைமா நகருக்கு விஜயஞ் செய்யப்போவதை முன்னிட்டு அன்னோர்களை சிறப்பாகவரவேற்று வைபவமான விருந்தொன்று நடத்துவதற்காக தக்க ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை முன்னிட்டு சிங்கையின்கண் வதியும் பிரபல்ய முஸ்லிம்களின் கூட்ட மொன்று "அகில மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டி" கட்டிடத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்குஜனுப் டாக்டர் H. S. முன்ஷீ ஜே. பி. தலைமை வகித்துக் கூட்டம்கூட்டப்பட்டதின் நோக்கத்தை எடுத்துக் கூறுகையில், ஜனுப் காலித் ஷெல்டிரேக் அவர்களின் அரிய சேவைகளையும், அவர்கள் இங்கிலாந்திலும் மற்றும் இதர இடங்களிலும் ஆற்றிவரும் அரும்பெரும் இஸ்லாமியத் தொண்டுகளையும் எடுத்துக்கூறி, சிங்கைநகருக்கு விஜயஞ்செய்யவிருக்கும் அவ்விரு கனவான்களையும் தக்க முறையில் வரவேற்கநாம் கடமைப்பட்டிருப்பதையும்நன்கெடுத்துக் காட்டினார்கள், பிறகு தக்க முறையில் வரவேற்பதென்னும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியவுடன் அதற்காக வரவேற்புக் கமிட்டி யொன்று ஏற்பாடாய், அக்கமிட்டிக்கு ஜனுப் டாக்டர் H. S. முன்ஷி அவர்கள் பிரசிடெண்டாகவும், ஜனுப் R. ஜுமாபாய், ஜே. பி. காரியதரிசியாகவும், ஜனுப் S. எஹ்யாபின் அஹ்மத் ஜே. பி. ஜனுப் சையத் அப்துல்லா அலஹபாதீ இவர்கள் கஜான்சிகளாகவும், 55 கனவான் மெம்பர்களாவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அதற்குள்ளபலவேலைத்திட்டங்களுடன் காரியாதிகள் நடைபெற்று வருகிறது.

பூதமங்கலம்

மத்ரஸாமன்பஉல் ஹஸனுத் சோசைட்டி முதலாம் ஆண்டு பூர்த்தி விழா மகா நாடு:— 26-12-32 பிற்பகல் மாலை 3 மணிக்கு மகா நாட்டிற்காக அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில்நடைபெற்றது. மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மௌலானா மௌலவீ அல்ஹாஜ் S. A முஹம்மத் அலீ சாஹிப் அவர்களும் "குத்தா முல்மில்லத்" சன்மார்க்கத் தொண்டர் சபையினரும், கம்பம் இஷா அத்துல் இஸ்லாம் தூதுவக் கூட்டத்தின் அங்கத்தினர்களும், முஸ்லிம்லீக்கின் பிரதானிகளும் கூத்தானல்லூரிலிருந்து விஜயஞ்செய்திருந்தார்கள். இன்னோரை மத்ரஸா மாணவர்களும், சர்வ முஸ்லிம் சற்குண சங்கத்தார்களும் தக்க முறையில் வரவேற்று ஊர்வலமாக மகா நாட்டுக் கொட்டகைக்கு அழைத்துச் வந்தார்கள்.

ஜனுப் ஹாபிஸ் கொ. நெ. முஹம்மது அலீ சாஹிப் அவர்களால் கிரஅத் ஓதப்பெற்று சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. குத்தாமுல் மில்லத் சன்மார்க்கத் தொண்டர் சபை மாணவர்களாலும், மத்ரஸா மன்பஉல்ஹஸனுத் குத்தாமுல் இஸ்லாம் மாணவ சபையார்களாலும் புகழ் பாக்கள் பாடப்பட்டன. பின்னர் அக்கிராசனராகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மத் அலீ சாஹிப் அவர்களுக்கு, மத்ரஸா சொசைட்டியின் சார்பாக மகா நாட்டுக் காரியதரிசியாகிய ஜனுப் நெ. மு. ஷேக் தாவூத் ருவுத்தர் அவர்களால் உபசாரப்பத்திரமொன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதில்மௌலானா அவர்கள் நம் இஸ்லாம் மார்க்க முன்னேற்றத்திற்காகவும், பொது நலச்சேவைக்காவும் குன்றா ஊக்கத்தோடு முன்னின்றுழைத்து வரும் அரும் பெரும் கைங்கரியங்கள் நன்கெடுத்துக் கூறப்பட்டிருந்தது. மௌலானா அவர்களால் அதற்கு விடை அளிக்கப்பட்ட பின், வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனுப் P. S. முஹம்மது அப்துல் காதிர் ருவுத்தர் (V.M) அவர்களால் வரவேற்புப் பிரசிங்கம் படிக்கப்பட்டது. பிறகு கனம் அக்கிராசனரவர்கள் பொதுவாய்க் கல்வியின் மேன்மையையும், குறிப்பாய் மார்க்கக் கல்வியின் அவசியத்தையும் அதற்காக மத்ரஸாக்கள் இன்றியமையாச் சாதன மென்பதையும் வற்புறுத்தி தக்கசொற்பொழி வாற்றினர்கள். பின்னர் காரியதரிசி ஜனுப் சோ. சே. அப்துல்கனி ருவுத்தர் அவர்களால் வரவு செலவு கணக்கு வாசிக்கப் பெற்று அங்கிகரிக்கப்பட்ட பின் அடியில் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது:

(1) சென்ற வருஷத்திய உத்தியோகஸ்தர்களே இவ்வருஷத்திலும் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(2) இச் சொஸைட்டியின் அபிவிருத்திக்காக வீடுகளில் பிடி அரிசி வசூலிக்கவேண்டும், ஊர் மிராசுதாரர்களிடம் வேலி ஒன்றுக்கு ஒருகலம் வீதம் நெல் வசூலிக்கவேண்டும்.

(3) மத்ரஸா மன்பஉல் ஹஸனத்திற்காக ஏற்கனவே ரெங்கூனில் வசூலிக்கப்பட்டதிலும், மத்ரஸா நஞ்சை நிலங்களின் வரும்படி நெல்லிலும் செலவுபோக பாக்கித்துகை மர்ஹூம் ஹாஜி ஆ. மு. சுல்தான் மொய்தீன் ருவுத்தரிடம் தங்கிவிட்டதையும், ஷை மத்ரஸாவுக்காக வாக்களிப்பதையும் வசூலிப்பதற்கும், இன்னும் மாசூல் காலங்களில் நெல் வசூலிப்பதற்கும் வசூல் கமிட்டி மெம்பர்களாக 9 நபர்களை நியமிக்கவேண்டும்.

(4) மத்ரஸாவுக்கு இடவசதி குறைவாயிருப்பதால் அதற்குத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) சு. ம. இயக்கத்தினர் நம் பரிசுத்த இஸ்லாத்தைத் தாக்கி எழுதிவருவதோடு, அதை அழித்து விடப்போவதாக உளரிக் கொட்டிவருவதை இம்மகாநாடு வெகு அழுத்தமாய்க் கண்டிக்கிறது. இவ்வியக்கத்தில் முஸ்லிம்கள் சேரக்கூடாதென்றும், இவ்வியக்கத்தைப் பிரசாரஞ்செய்து வரும் "குடி அரசு" பத்திரிக்கையை முஸ்லிம்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும்.

(6) S. A. K. ஹுஸைனி என்பவர் "இண்டியன் நேஷன்" என்னும் மாசிகையில் முஸ்லிம்களின் தொழுகையை தூஷித்திருப்பதையும், சென்னையில் பிரசுரமாகும் "முரசு" என்னும் வாராந்தரப் பத்திரிக்கையில், ஆர்ல அய்யலு சோமயாஜி B. A. வரைவதாக ஔரங்ஜேப் பாதுஷாவின்மீது உண்மைக்கு மாருக தூற்றி வரைந்து ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்க எத்தனிக்கும் மூட முரஸையும் இம்மகாநாடு அழுத்தமாய்க் கண்டிப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

பின்னர் "கல்வியின் மேன்மையும், அதன் அவசியமும்" என்பதுபற்றி ஜனப். மோ. அ. ஸையித் முஹம்மது, ஜனப். அ. அ முஹம்மது இப்ருஹீம் இவர்களாலும், "ஒற்றுமை" என்பதுபற்றி கூத்தாநல்லூர்லெ. மு. முஹம்மது யாஸீன் அவர்களாலும், மத்ரஸாவுக்கு நிதி சேர்க்கவேண்டிய அவசியத்தையும் அதற்கு உபகாரஞ் செய்பவர்களுக்குக் கிடைக்கும் பாக்கியங்களைப் பற்றியும் ஜனப் மௌலவி முஹம்மது மியான்சாஹிப், ஜனப் மௌலவி நா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் ஜனப் ஆ. மு. சு. அப்துல் மஜீது ஆலிம் சாஹிப் முதலியவர்களாலும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இப்பிரசங்கங்களால் சபையோர்களுக்கு ஓர் நூதன ஊக்கமும் அவர்களின் ஹிருதயங்களில் ஓர் புத்துணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது. அதனல் யாவர்க்கும் மத்ரஸாவுக்குத் தக்க உபகாரஞ் செய்யவேண்டுமென்ற பேராவல் உண்டாகி அதன்படியே ஒவ்வொருவரும் முயற்சி செய்வதென்னும் தீர்மானத்திற்கு வந்தார்கள்.

கடாசியாக கனம் அக்கிராஸனரவர்கள் முடிவுரையாகப் பேசியதாவது:—

இம் மத்ரஸா ஏற்பட்டு 30 வருடங்கள் கடந்துவிட்டது. இச்சொசைட்டியார் இவ்வருஷத்தில் செய்திருக்கும் சேவையைப் போன்று ஆதிமுதற் கொண்டே செய்துவந்திருந்தால் இவ்விஸ்தாபனத்தை வேறு தோரணையில் பார்க்கவேண்டி யிருந்திருக்கும். நம்முடைய ஊக்கமின்மையும், அசிரத்தையுமே, அபஜெயத்திற்கு காரணமாகி விடுகின்றது. இம்மாதிரியான மத்ரஸாக்கள் ஒவ்வொரு ஊர்களிலும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும். அதை பர்லு அய்ன் என்றே நான் நிசுஷயமாகக் கூறுவேன். அப்படி யில்லாதிருக்கின் மக்கள் ஏவல், விலக்கல் முதலிய சன்மார்க்கச் சட்டங்களை அறிந்து கொள்ளுவதற்கு வசதி இல்லாது போய்விடும். இதனல் மக்களின் பிற்கால வாழ்க்கை என்னவாகி விடுமென்பதை உன்னிப்பாருங்கள். இம்மத்ரஸாவுக்கு பண்டு சேர்ப்பதற்காக இன்று முடிவு செய்து விட்டீர்கள். இந்நாள் ஓர் பெருநாளென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இங்கு நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்களை ஏட்டுச் சுரக்காயாக ஆக்கிவிடாமல் கிரியாம்ஸையில் செய்துகாட்ட முன் வாருங்கள். நிர்வாக சபையார் ஊக்கத்தோடு வேலை செய்ய முன் வருவார்களானல், அடுத்த வருஷத்திய மகாநாடு நடத்தும்போது இவண் எவ்வித குறையுமின்றி பூர்த்தியாக் கொண்டாடப்படுமென்பதில் ஐயமில்லை.

தவிர சு. ம. இயக்கத்தினர் ஆரம்பத்தில் ஹிந்து மதத்திலுள்ள அனச்சாரங்களையும், விக்கிரகங்களையும் தூஷித்துவந்தனர். இதுபொழுது அவர்களின் அறியாத் தன்மையால் பரிசுத்த இஸ்லாத்தையும் தாக்க முற்பட்டு விட்டனர். இந்நாஸ்திகர்களையும்

அவர்களின் இயக்கத்தையும்' கண்டிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். முஸ்லிம்களில் ஒரு சிலர் இக்குழாத்தினருடன் சம்மந்தப்பட்டிருந்ததனல் தான் இவர்கள் நம் பரிசுத்த இஸ்லாத்தையும் தாக்க முற்பட்டனர்.

எல்லாரும் விடா முயற்சியாய் இந்த ஸ்தாபனத்திற்கு பண்டு சேமிப்பதில் முனேந்து வேலைசெய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன். பிடியரிசி எடுக்க ஏற்பாடு செய்து விட்டீர்கள். அது ஓர் சிறு தர்மமாகத் தோன்றினலும் அஃது ஓர் பெரும் வருவாயாகப் போய் விடுமென்பதை நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்ருேம். எல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டே நடக்க வேண்டியிருக்கிறது எல்லோரும் ஒற்றுமையாக இந் நற்காரியத்தைச் செய்து வருவீர்களென்று எதிர் பார்க்கிறேன். என பேசி முடித்தார்கள்.

பின்னர் ஜனுப் மௌலானு மௌலவி நூ. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்களால் சபையோர்களுக்கு வந்தனேபசாரம் கூறப்பட்டு தேனீர் வழங்கியபின் சபையின் நடவடிக்கைகள் முற்றுபெற்றன.

ஈதுல்பித்ர்

அல்லாஹ்த ஆலாவாகிறவன் மூமினுகிய தன் அடியார் மீது கிருபை கூர்ந்து ஈதென்னும் பெருநாளை நன்கொடை அளித்துள்ளான். அது முஸ்லிம்களின் பிரக்தியான பெரு நாளாகும். அது நோன்பு நல்ல முறையில் செல்படியாயிற்று ; நோம்புக்குக் கூலியாக பாவமன்னிப்பு ஏற்பட்டு விட்டதென்பதை வெளிப்படுத்தும் நன்னளாகவும் திகழ்கின்றது. அன்று தொழுகைக்குச் சென்றிருப்பவர்களை நோக்கி, ஏ,“என் அடியானே! நீ எனக்காக நோன்பு நோற்ருய்; இன்று தொழுகையை நிறைவேற்றினய்; உன் பாகங்கள்மன்னிக்கப்பட்டவனுக வீடுசெல்வாயாக” வென அல்லாஹ்த ஆலா அறிவிக்கின்ருன். “ஈத்” என்னும்பதத்திற்கு மடங்குதல் திரும்புதல் என்பது பொருள். இன்னளும் ஒவ்வொரு ஆண்டிலும் மடங்கி வருவதாலோ, அல்லது அல்லாஹ் தஆலா பாவங்களை மன்னிப்பதோடுமானிடர்பக்கல்திருப்புவதாலோ இப்பெருநாளுக்கு ஈதென பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே ஒரு மாதகாலமாய் பகலில் உணவையும் பானத்தையும் முற்றிலும் விலக்கியிருந்து, இறைவனது கட்டளைக்காகத் தங்கள் ஆசாபாசங்களைத் துறந்து, ஆண்டவனது கட்டளையைப் பரிபூரணமாகச் செய்தவர்களுக்கு இத்தினம் மிகவும் ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியதாகயிருக்கிறது.

முஸ்லிம்கள் அன்னளில் நன்னீராடி நல்லாடை நற்மணம் முதலிய பூண்டு, தங்கள் இல்லங்களை விட்டுப் புறப்பட்டுச் சென்று இரண்டு “ரக்அத்” தொழுகையை நிறைவேற்றிவிட்டு, இல்லமேகி பந்துமித்திரர்களைக் கண்டு களிப்பர். முஸ்லிம்களின் பெருநாள் முழுதும் இந்தத் தொழுகை ஒன்றில் தானிருக்கிற தென்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிவர். பெரு நாள் தொழுகை நிறைவேற்றப்பெற்று அங்கு வந்த பந்துமித்திரர் உள்பட ஏனைய எல்லா முஸ்லிம்களுடன் முஸாபஹா, முஆனக்கா செய்வதுடனேயே ஈதுப் பெருநாளின் சந்தோஷமும் முற்று பெற்று விடுகிறது. இதுவன்றி அன்னளில் பலவாறுன மார்க்கத்திற்கு முற்ற முற்ற நேர்விரோதமான-சன்மார்க்கத்தில்விலக்கப்பட்டதான வீண் விளையாட்டிலும் ஆட்ட பாட்டங்களிலும் ஈடுபடுவது ஈதின் மகிமைக்கு பங்கம் விளைவிப்பது போலாவதுடன், புண்ணிய மிக்க அந் நன்னளில் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டு வருவது போலவுமிருக்கிறது.

தவிர எல்லோரும் ஓரிடத்தில் ஒன்று கூட வேண்டும் ; ஒருவருக்கொருவர் நேசமுடன் உறவு கொண்டாடவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே, யாவரும் ஒன்று சேர்ந்து தொழ வேண்டும் என்னும் புனிதகருத்தோடு இத் தொழுகையை இஸ்லாம் மதம் ஏற்படுத்தியிருக்கிறது. இத் தொழுகையை நகரங்களிலுள்ள பள்ளிகளில் தொழுவதைப் பார்க்கினும் “ஈதுகாஹ்” வில், பட்டண

வாசிகள் யாவரும் ஒன்றுசேர்ந்து தொழுவது உத்தமமாகும். மஸ்ஜித நபவியில் தொழுவது அபரிமிதமான நன்மைகளை அளிக்கக் கூடியதாக யிருந்தும், எம்பிரான் நபிகட்திலகம் (ஸல்.) அவர்கள் வெளியில் சென்றே ஈதுத் தொழுகையை நிறைவேற்றி வந்திருக்கிருர்கள். ஆதலால் ஈதுகாஹ்வில் யாவரும் ஒன்று சேர்வது விசேஷித்த தனிச் சிறப்பினையுடையதாகு மென்பதை நன்கு தெரிந்து கொள்கிருேம்.

இவ்வாறு யாவரும் ஓரிடத்தில் ஒன்று கூடுவதால், அறிமுகமில்லாத பலரைக் காணவும் பேசவும் சந்தர்ப்ப மேற்பட்டு நட்புரிமை அதிகமாவதற்குள்ள தக்க வசதி ஏற்படுகிறது. ஆகவே இஸ்லாம் மதத்தில் சகோதரத்துவமும் கூட்டுறவும் எவ்வளவு முக்கியமாகக் கருதப்பட்டிருக்கிற தென்பதையும், தற்போது முஸ்லிம்களாகிய நம்மவரில் எவ்வளவு தூரம் அவை அனுஷ்டிக்கப் படுகிறதென்பதையும் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டியது மிகமிக அத்தியாஅவசியமாகும். வருகிற இந்த ஈதுப் பெருநாளை மகிழ்ச்சி தரத்தக்கதாக இறைவன் செய்து, ஒவ்வொருவருக்கும் உண்மையான பெருநாளாக ஆக்குவாளுக.

பித்று ஸதக்கா.

எவன் (பித்று) சதக்காவை நிறைவேற்றி(ஈத்) தொழுகையைத் தொழுதானே நிச்சயமாக அவன் ஜெயம்பெற்று விட்டான்.

சோதரீர்! மேலே கூறப்பெற்றுள்ள திருவாக்கியத்தில், சதக்கத்துல் பித்ரின் மகிமை நன்கு சிலாகித்துக் கூறப்பெற்றிருக்கிறது. வீண் பராக்கு, புரம்பேசுதல் முதலியவைகளால் நோன்பிற் கேற்பட்டிருக்கும் பெரும் நஷ்டத்தை, சதக்கத்துல் பித்ருனது நிவர்த்தியாக்கி வைத்துவிடுவதால், கடமையாக்கப்பட்ட ஒவ்வொருவரும் அதனை நிறைவேற்றவேண்டியது அத்தியாவசியமாகுமாதலின், அதனை நிறைவேற்றும் விதத்தை கீழே குறிப்பிடுவோம்.

(ஹனபிமத்ஹப்பிரகாரம்.)

ஜகாத்துக் கொடுக்கக் கடமைப்பட்ட ஒவ்வொருவரும் பித்றுஸதகாக் கொடுக்கவேண்டும். (வாஜிபு) இவ்வாறு கடமைப்பட்டவர்களில், எவர் அதனை நிறைவேற்றவில்லையோ அவரது நோன்பு அல்லாஹ்வின் சமுகத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என ஹதீது ஷரீபில் கூறப்பட்டுளது. ஸதக்காக் கொடுப்பதால் ஏழைகளுக்கு உபகார மேற்பட்டு அன்றைய திருநாளில் அவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சந்தோஷங் கொண்டாட ஹேது உண்டாய்விடுகிறது. ஆதலால் பித்று ஸதக்காவைத் தொழுகைக்குச் செல்லுமுன் கொடுப்பதும், அதனைத் தானியமாகக்கொடுப்பதைப் பார்க்கினும் ஏழைகள் தங்களுக்குத் தேவையான எதையும் சுலபமாக வாங்கிக் கொள்ளும் வண்ணம் அதனைப் பணமாகக் கொடுத்துவிடுவதும் உத்தமம்.

குடியிருப்பு வீடு, கடன் முதலிய அவசியமான செலவுகளுக்குமேல் $52\frac{1}{2}$ ரூபாய் அல்லது அது பெருமானமுள்ள சொத்துக்களையுடைய ஒவ்வொருவரும், தனக்காகவும் தன் சிசுக்களுக்காகவும் பித்று ஸதக்காக் கொடுப்பது வாஜிபு. ஆனல் பருவமடைந்த தன் மக்கள் முதலியோருக்காக பித்று சதக்காக் கொடுக்க அவன் கடமைப்பட்டவனல்லன். ஆனல் மேற்கூறப்பட்டவர்களிடமும் ஸதக்காக் கொடுப்பதற்கு ஏற்பட்ட அளவுள்ள சொத்திருந்தால், அவர்கள் பிரத்தியேகமாக ஸதக்காக் கொடுக்கவேண்டும். பருவமடையாத தன் குழந்தைக்குப் பிரத்தியேகமான சொத்திருக்குமாயின், அச் சொத்திலிருந்தே அக் குழந்தைக்குரிய பித்று ஸதக்காவைக் கொடுக்கவேண்டும். சித்த சுவாதீனமில்லாத தனது பெரிய குழந்தைக்காக (பருவமடைந்தவர்களுக்கு) தகப்பனே ஸதகாக் கொடுக்க வேண்டும். நோயாளி, பிரயாணி, கர்பஸ்திரி,

மாதவிடாய் கொண்ட பெண் ஆகியவர்கள் மேற்கண்ட காரணத்தால் நோன்பு நோற்கா விட்டாலும், அவர்களிடம் மேற்கண்ட விகிதப்படி சொத்திருக்குமாகில், அவர்கள்பித்று ஸதக்காக் கொடுக்கவேண்டும்.

ஈதுல் பித்று பெருநாளாகிய ஷவ்வால் மாதம் முதல்தேதியன்று கிழக்கு வெளுத்தவுடன் பித்று ஸதக்காக் கொடுப்பது வாஜிபாக ஏற்படுகிறது. இந்தத் தேதிக்கு முன் கொடுத்தாலும் அது நிறைவேறிவிடும். ஆனல் அன்றைபதினம் பெருநாள் தொழுகைக்குப் போகுமுன் கொடுப்பது முஸ்தஹப்பு. ஷை தேதியில் கிழக்குவெளுத்துவுடன் பித்று ஸதக்கா வாஜிபாக ஏற்படுவதால், கிழக்கு வெளுப்பதற்கு முன் குழந்தை பிறந்தால் அக் குழந்தைக்காகவும் ஸதக்காக் கொடுப்பது வாஜிபு. கிழக்கு வெளுத்தபின் பிறக்கும் குழந்தைகளுக்காக ஸதக்காக் கொடுப்பது வாஜிபல்ல. கிழக்கு வெளுப்பதற்கு முன் குழந்தை பிறந்து, கிழக்கு வெளுத்தபின் அக் குழந்தை இறந்துபோனலும் அக் குழந்தைக்காக ஸதக்காக் கொடுப்பது வாஜிபு. பித்று சதக்காக் கொடுப்பதற்குத் தகுந்த சொத்துள்ளவனுகை ஒருவன் கிழக்கு வெளுக்கும்போதிருந்து கிழக்கு வெளுத்தபின் ஏழையாகிவிட்டால், அவனும் பித்று ஸதக்காக் கொடுக்கக் கடமைப்பட்டவனுவான்.

மணிக் கோதுமை, முந்திரிப்பழம், கோதுமை மாவு, ரவா ஆகியவைகளை பித்று ஸதக்காவாகக் கொடுக்கவிரும்பினல், அரை 'ஸாஉ' கொடுக்கவேண்டும். வாற்கோதுமை, பேரீச்சம்பழம் ஆகிய இவைகளைக் கொடுப்பதானல் ஒரு 'ஸாஉ' கொடுக்கவேண்டும். இவைகளை யல்லாமல் தன்னிடமுள்ள நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களைக் கொடுக்க விரும்பினல் முற் கூறப்பட்ட அளவுள்ள கோதுமை முதலியவைகளைக் கிரயம் போட்டு, அக்கிரத்திற்கு ஏற்றதானியத்தைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதைப் பார்க்கினும் அதன் கிரயத்தைப் பணமாகக் கொடுத்துவிடுவதே மேல்.

ஜகாத்பணத்தை யார்யாருக்குக் கொடுக்கலாமோ அவர்களுக்கு பித்று ஸதக்காவும் கொடுக்கலாம். ஆனல் பந்துக்களில் அதனை வாங்கிக்கொள்ளத் தகுந்தவர்களிருந்தால், அவர்களுக்குக் கொடுப்பதுதான் மேல். பலருடைய பித்று ஸதக்காவை ஒருவருக்குக் கொடுக்கலாம். அவ்வாறே ஒருவருடைய ஸதக்காவை பலருக்குக் கொடுத்தலும் பொருந்தும். ஆபினும் அவ்வாறு ஒருவருடைய ஸதக்காவைப் பலருக்குக் கொடுப்பது கூடாதெனச் சிலர் கூறுவர் ஆதலால் பேணுதலுக்காக ஒருவருக்கே கொடுத்துவிடுவது உத்தமம்.

தற்சமயம் அரசாங்க அமலிலுள்ள அளவைகளில் பட்டணம் படியில் ஒருபடி 130-ரூபாய் எடையுள்ளது, இதன்படி ஒரு 'ஸாஉ' என்பது இரண்டுபடியும் 13-ரூபாய் எடையுள்ளதுமான $2\frac{1}{10}$ படியாகும். இக்கணக்குப்படி அறை 'ஸாஉ' என்பது மதராஸ் படியில் சுமார் ஒன்றே ஒரு வீசம்படியாகிறது. தற்பொழுது மதராசில் மணிக் கோதுமை படி 1-க்கு 0-3-7 விற்கிறது இதன்படி ஒன்றேவீசம்படிக்கு சுமார் 4-அணு வாகிறது. இதுதான் ஒருவருடைய ஸதக்கத்துல்பித்ராகும். இவ்வாறே அந்தந்த ஊர்களிலுள்ளவர்கள் அங்கு விற்கப்படும் கோதுமையின் கிரயத்தை நிதானித்து அதனைக் கொடுக்கவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

தனக்காகவும், தன் போஷணையிலிருக்கிற மனைவிமக்கள் முதலானவர்களுக்காகவும், தன் ஊரில் முக்கியமாக உபயோகிக்கப்படுகிற தானியத்தில் ஒரு 'ஸாஉ' பித்று கொடுப்பது வாஜிபு. இதன் கியரத்தைக் கொடுக்கக்கூடாது. கெட்டுப்போன அல்லது குறையுள்ள அல்லது ஈரமுள்ள தானியங்களைக் கொடுக்கக்கூடாது.

இந்த பித்று வாஜிபாவதற்கு நான்கு ஷர்த்துகள் இருக்கவேண்டும் அவைகளாவன :—

1. முஸ்லிமாக யிருக்கவேண்டும். தன் போஷணையி லிருப்பவர்களுக்காக பித்று கொடுக்க வேண்டுமாயின், அவர்களும் முஸ்லிமாயிருக்கவேண்டும்.

2. தான் அடிமையாக யிருக்கக் கூடாது

3. பெருநாள் இரவு வருவது அதாவது முதல் நாள் சூரியாஸ்த மனமாகுதல்.

4. கடன் இல்லாமலும் தனக்கும் தன்பராமரிப்பிலுள்ள மனைவி மக்கள் ஆகியவர்

களுக்கும் தேவையான இருப்பிடம் உடைமை, உடை முதலியவைகள், பெருநாளின் இரவு பகலில் தனக்கும் தன் குடும்பத்துச் செலவுகளுக்கும் தேவையானவைகள் போக அதிகப்படும்படியான சொத்துக்கள் இருக்க வேண்டும்.

இந்த நான்கு ஷரத்துகளிலே தேனுமொன்று இல்லாதிருந்தால், ஸதக்கா வாஜிபாக மாட்டாது. ஆகவே ஈதுப்பெருநாளைக்கு முந்திய தினத்தில், சூரியாஸ்மனமான பின்பு பிறக்கும் குழந்தைகள், விவாகஞ் செய்து கொள்ளப்பட்ட மனைவி ஆகியவர்களுக்காக பித்று கொடுக்கவேண்டியதில்லை. ஷை சூரியாஸ்மனத்திற்குப் பின் பணக்காரனானாலும் இஸ்லாம் மதத்தைத் தழுவினாலும் வாஜிபில்லை. ஷை சூரியாஸ்தமனத்திற்கு பின் ஸதக்காக் கொடுக்காமல் இறந்து விட்டாலும் தன் மனைவியை விவாக விலக்குச் செய்து விட்டாலும், தன் சொத்து தொலைந்து போனாலும், அவன் மீது வாஜிபான பித்று அவனை விட்டு நீங்காது. ரமலான் மாதத்தின் கடைசி நாளில் சூரியாஸ்தமன மானதிலிருந்து மறுநாள் அதாவது பெருநாளன்று சூரியாஸ்மனமாகும் வரை பித்று கொடுக்கலாம். ஆனால் பெருநாள் தொழுகைக்கு முன் பித்றுவைக் கொடுத்து விடுவது சுன்னத்து. இதற்கு மேல் காரணமில்லாமல் பிற்படுத்துவது மக்ரூஹ். ஆனால் தனக்கு பந்துவானவர்கள், தாயாதியாக வுள்ளவர்கள் ஆகியவர்களில் ஏழைகளை எதிர்பார்த்து ஸதக்காவைப் பிற்படுத்தி வைப்பது சுன்னத்து.

ஈதுப்பெருநாள் தொழுகை.

ஊரில் தரிபாடாயிருப்பதும், சுவாத்தியமாக யிருப்பதும், நாட்டான் மகனாகயிருப்பதும், சித்தசுவாதீனமாகயிருப்பதும், ஆண்பிள்ளையாக யிருப்பதும், கண், கால்கள் சுவாத்தியமாக யிருப்பதும், வயதை யுடையவனாக யிருப்பதும், முஸ்லிமாக யிருப்பதும் ஈதுத் தொழுகை வாஜிபாவதற்குள்ள ஷர்த்துகளாகும். எனவே பிரயாணி, வியாதிஸ்தன், அடிமை, பயித்தியகாரன், பெண்பிள்ளை, குருடன், நொண்டி, சிறுபிள்ளை இவர்கள்மீது ஈதுத் தொழுகை வாஜிபில்லை.

ஒரு ஊரில் பல இடங்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம் ஆனால் யாவரும் ஒன்றுகூடி ஒரே இடத்தில் தொழுவது மேலாகும். அத்தொழுகை யாவரும் ஒன்றுசேர்ந்து தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதால், ஜமாஅத்துத் தவறிவிட்டால் அதைக் கலாச்செய்யவேண்டியதில்லை. ஆனால் வேறு இடத்தில் அதை ஜமாஅத்தாகத் தொழலாம்.

சூரியோதயத்திற்கு ஒருமணிக்குப்பின்னிருந்து மத்தியானம்வரை பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போதே மத்தியான மாகிவிட்டால், அந்தத் தொழுகை நிறைவேறாது. மேற்குறித்த நேரத்தில் ஈதுல்பித்று பெருநாள் தொழுகையை தீவரமாக நிறைவேற்றுவது முஸ்தஹப்பு.

"இந்தப்பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகிறேன்" என நிய்யத்துச்செய்து 'அல்லாஹ் அக்பர்' என தக்பீர் கட்டவேண்டும் பின்பு 'தனா' ஓதிவிட்டு கையை உயர்த்தி தக்பீர் சொல்லிக் கையைத் தொங்கவிடவேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தொங்கவிட்டு, மூன்றும் முறையில் முன்போல் தக்பீர் கட்டிக்கொள்ள வேண்டும். இவ்விதமாக மூன்று முறை. தக்பீர் சொல்வதில், ஒவ்வொரு முறையின் இடை நேரத்திலும் மூன்று 'தஸ்பீஹ்' ஓதப் பிடிக்கும் அவ்வளவு நேரம் மௌனமாக யிருக்கவேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில், தக்பீர் தஹ்ரீமா (முந்திய தக்பீர்) வையுஞ் சேர்த்து நான்குமுறை தக்பீர் சொல்லவேண்டிய திருக்கும். பின்பு வழக்கம்போல் எல்லாத் தொழுகையிலும் ஓதுவதுபோல் அஊது, பிஸ்மில்லா, ஸூரத்துல் பாத்திஹா, கிரஅத் ஆகியவைகளை ஓதி ருக்கூஉ, ஸுஜூது செய்து இரண்டாவது

ரக்கத்தை வழக்கம்போல் சாதாரணமாக ஆரம்பித்துத் தொழவேண்டும். ஆனல் கிர அத் ஓதிமுடிந்தபின், முற்கூறிய பிரகாரம் மூன்று முறை தக்பீர் சொல்லிக் கையைத் தொங்கவிடவேண்டும். பின்பு நான்காம் முறை தக்பீர்சொல்லி ருக்கூஉ செய்யவேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்கஅத்தையும் தொழுது ஸலாம் கொடுத்தபின் குத்பா ஓத வேண்டும்.

இமாமைப் பின்பற்றித் தொழுவோர் "இந்தப் பெருநாளின் தொழுகையை இந்த இமாமைப் பின்பற்றி அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகிறேன்" என நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டவேண்டும். பிறகு எல்லாத் தொழுகையிலும் இமாமுக்கும் அவரைத் துயர்ந்து தொழுவோர்களுக்கும் எங்கெந்த விதி விலக்குகளிருக்கின்றனவோ அவைகளெல்லாம் இந்தத் தொழுகையிலுமுண்டு.

பெருநாளன்று பெருநாள் தொழுகைக்கு முன், நபில் தொழுவது மக்றூஹ். பெருநாள் தொழுகையை நிறைவேற்றியபின் வீட்டிற்கு வந்து நாலு ரக்கஅத்து நபில் தொழுவது நல்லது. ஈதுல் பித்று தொழுகைக்குச் செல்வோர் வழியில் மெதுவாகத் தக்பீர் சொல்லிக்கொண்டுபோக வேண்டும். ஈதுல் பித்று பெருநாளன்று தொழுகைக்கு முன் 1 அல்லது 3 அல்லது 5 பேரீச்சம் பழங்களையேனும், வேறு மதுரமான வஸ்துக்களையேனும் புசிப்பது முஸ்தஹப்பு. அன்று பஜருக்குப்பின் மிஸ்வாக்குச்செய்து (பல் துலக்கி) நீராடி தன்னிடமுள்ளவைகளில் சுத்தமானதும், அழகானதும் மார்க்க விலக்கில்லாததுமான, உடையை அணிந்து வாசனை திரவியங்களைப் பூசி, தக்பீர் சொல்லிக் கொண்டு தொழுகை நிறைவேற்றப்படும் இடத்திற்கு நடந்துசெல்வது முஸ்தஹப்பு. ஒரு ரஸ்தா வழியாகப் போய், வரும்போது வேறு ஒரு ரஸ்தா வழியாகத் திரும்புவது முஸ்தஹப்பு.

ஈதுத் தொழுகையில் இமாம், தக்பீர் சொன்னபின், ஒருவன் வந்து இமாமுடன் சேர்ந்தால், தானகவே மூன்றுமுறை கையை உயர்த்தி தக்பீர் சொல்லிக்கொள்ளவேண்டும். இமாம் ருகூவிலிருக்கும் போது வந்து சேர்ந்தால், இமாம் ருக்கூவை விட்டு நீங்குவதற்கு முன் தக்பீர் சொல்லி, அப்புறம் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்து கொள்ளலாமென்று தோன்றினல், அவ்விதம் செய்யலாம். இல்லையேல் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்துகொண்டு ருக்கூவிலேயே மூன்று முறை தக்பீர் சொல்லவேண்டும். ஆனல் ருக்கூவில் தக்பீர் சொல்லும்போது கையை உயர்த்தவேண்டியதில்லை. ருக்கூவில் தக்பீர் சொல்லி முடிவதற்குள் இமாம் ருக்கூவை விட்டு நீங்கிவிட்டால், தக்பீர் சொல்வதையும் விட்டுவிடவேண்டும். இமாம் ஒரு ரக்கஅத்துத் தொழுதபின்போ, அல்லது இமாம் இரண்டாவது ரக்கஅத்தில் ஸுஜூது, அல்லது இருப்பிலிருக்கும்போதோ வந்து சேர்ந்தால், இமாம் ஸலாம் கொடுத்தபின் எழுந்து தவறினவைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஆனல் தவறினவைகளை நிறைவேற்றும்போது கிரஅத்திற்குப் பின்புதான் தக்பீர் சொல்லவேண்டும். இமாமுடன் தொழுகை கிடைக்காவிட்டால், வேறு இடத்தில் ஜமாஅத்து நடந்தால் அங்கு சென்றேனும் இமாம் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றவேண்டும். இல்லாவிடில் நான்கு ரக்கஅத்து நபில் தொழவேண்டும்.

சிங்கை சந்தா நேயர்கட்கு!

அங்குள்ள நமது சந்தா நேயர்களில் 915, 916, 924, 925, 939, 942, 983, 984, 988, 1177, 2327 நெ. சந்தாதார்கள் தங்கள் சந்தாக்களை நமது ஏஜண்டு ஜனப் மு. முஹம்மது ஷரீப் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். இதர சந்தா நேயர்களும் அவர்களிடம் செலுத்திவிடும்படி கோருகிறோம்.

நஞ்சிறுர்கட்கு!

பாதுஷா அப்துற்றஹ்மானின் நீதிமுறை

குர்தபாவில் அப்துற்றஹ்மான் என்னும் பெயருடைய இராஜ ரொருவரிருந்தார். அவர் ஞாயமான வழியிற் செல்வதையே பிரதானமாகக் கொண்டிருந்தார். அவருக்கு அப்துல்லாஹ், அல்ஹிகம் என்னும் பெயருள்ள இரு புத்திரர்களிருந்தனர். அவ்விருவர்மீதும் பாதுஷா அதிகப் பிரீதி கொண்டிருந்தார். இந்நிலைமையில் அப்துல்லாஹ் என்பார் ஒரு குற்றம் புரிந்தற்காக பாதுஷாவின் தர்பாருக்குக் கொண்டு வரப்பட்டார்.

பாதுஷா, புத்திரரை நோக்கி:—நிச்சயமாக நீர் என் புத்திரர்தான் என்பதையும், எச்சந்தர்ப்பத்திலும் பொய் பேசாது உண்மையே பேசுவீர் என்பதையும் நானறிவேன். ஆதலின் நீர் உண்மையாகவே குற்றம் புரிந்தீரா இல்லையா? என்பதைத் தெரிவிப்பீராக.

அப்துல்லா:—அருமைத் தந்தை அவர்களே! நிச்சயமாக நான் குற்றத்திற்கு உடந்தையாகவேயிருந்தேன்; இது யான் சுயமாகச் செய்த வேலையல்ல; பலர் கூடி என்னை ஏமாற்றி அதில் சிக்க வைத்துவிட்டார்கள்; அதனுல்தான் நான் அக்குற்றம் புரியும்படி நேர்ந்துவிட்டது.

பாதுஷா:—மகனே! அது எவ்விதமாக நிகழ்ந்திருந்தபோதிலும் நீர் சதி புரிந்ததாய் ருசுவாய்விட்டது. சதி செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டியதே முறையாகும். ஆகவே என் அருமைப் புத்திரராகிய உம்மைக் கொலை வாங்குவதற்குள்ள நிர்ப்பந்தத்திற்காளாகி யிருக்கின்றேன்; நான் எவ்வகையிலும் ஞாயத்தை இழந்து விட முடியாது.

இது விஷயம் இளைய சகோதிரராகிய அல்ஹிகம் என்பவருக்குத் தெரிந்து, தமையனுர் கொல்லப்படப் போகிருரென்பதை அறிந்தவுடன் அவரது மனதில் தமையனின் பற்று மிகைத்திருந்ததால், அதனை சமாளித்துக் கொள்ள வகையற்று, அவர் தம் தந்தையிடஞ்சென்று மிகத் தாழ்மையோடு அருமைத்தந்தை அவர்களே! "ஆண்டவனுக்காக வேண்டி மன்னித்தருளுங்கள்; என் சகோதிரரின் குற்றத்தை மன்னித்துவிடுங்கள்; குறைந்த பக்ஷம் மரண தண்டனை விதிக்காமல் வேறு எவ்வாருன தண்டனையையாகிலும் அனுபவிக்கும்படி செய்யுங்கள்" என மன்ருடிக் கேட்டுக்கொண்டார்.

தந்தை:—'அருமைப் புதல்வரே! உம்முடைய சிபாரிஷ் போற்றத்தக்கதே; நீர் அப்துல்லாஹ்வின் சகோதிரராக யிருப்பதால் உமக்குப் பெரும் மனவருத்தந்தான் ஏற்படச்செய்யும்; நானும் சாதாரண மனிதனுக யிருந்தால் நீர் கூறுகிறபடிதான் செய்வேன்; நான் ஒரு அதிபதியாக இருக்கும் முறையில் தண்டனை கொடுக்காமல் விட்டுவிடுவேனுகில், "புத்திரன் இவ்வளவு பாரதூரமான குற்றம் புரிந்திருந்தும் புத்திரவாஞ்சையின் மேலீட்டால் அதற்குத் தக்க பரிகாரஞ் செய்யவில்லை" என உலகம் எள்ளி நகையாடாதா? ஒரு பிள்ளையின் வாஞ்சைக்காக என் ஆயுள் முழுதும் துக்கமனுபவிக்கும்படி நேரிட்டுவிடும். அவ்வாறு செய்தால் நான் ஒருக்காலும் நியாயம் வழங்கினவனுக ஆகமாட்டேன்; நம்மிருவர்களின் கண்களினின்று தண்ணீர் வடிவதைத் தடுப்பதற்காக உலக வாயில் அகப்பட என் மனம் இடங்கொடுக்கவில்லை, என அழுத்தமாய்க் கூறிவிட்டார். மறுநாள் சிறைச்சாலையிலேயே இராஜகுமாரராகிய அப்துல்லாஹ் கொல்லப்பட்டுவிட்டாரென்னும் செய்தி வெளி வந்துவிட்டது. பிறகு அவரது ஜனஸா பெரும் வைபவத்தோடு கபரஸ்தானில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

சிறுர்காள்! அப்துற்றஹ்மான் பாதுஷாவின் நீதிமுறையைப் பார்த்தீர்களா? நீதிபரிபாலனத்தில் அவர் பாரபக்ஷமின்றி நடந்து கொள்ள முற்பட்டதானது, புத்திர வாஞ்சையைக்கூட மறைத்து விட்டிருக்கிறது. அதனுல் பாதுஷா அவர்களின் நீதியை இன்றுவரை உலகம் போற்றிக் கொண்டிருக்கின்றது. அதன் ஞாபகார்த்தம் சரித்திரங்களில் பொன்மொழிகளே போன்று பொறிக்

கப்பட்டு மிளிர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே நீங்களும் ஒவ்வொரு காரியங்களிலும் அவ்வாறான நீதி முறையைக் கைகொள்ள முயற்சிப்பீர்களாக.

கோடீஸ்வரர்

தற்கால ஆஸ்டிரேலியாவில் ஜோசப் ராபர்ட்லிட்டன் என்னும் பெயருள்ள மிட்டாய் வியாபாரி யொருவர் மிகச் சிறந்து விளங்குகின்றான். அன்னாரின் ஆரம்பவரலாறுகளைக் கேழ்ப்பது கொண்டு மனதிற்கு பெரியதோர் ஆச்சரியத்தை அளிக்குமாதலின் அவைகளை இதன் கீழ் குறிப்பிடுகின்றேன்.

ராபர்ட் லிட்டன் என்பவரின் தாய் தந்தையர்கள் மிக ஏழ்மையானவர்களாயிருந்ததால், அவர் ஆறுமாத காலம் ஸ்கூலில் கல்விபயின் வந்ததுடன் கூலிவேலை செய்வதிலும், பத்திரிகை விற்பதிலும், குதிரை விட்டைகளைப் பொறுக்குவதிலும், வண்டி ஓட்டுவதிலும் ஈடுபட்டு காலங்கழித்து வந்தார். எனவே அதிகாலை மூன்று மணிக்கே அவர் எழுந்து பத்திரிகாலயங்களுக்குச் சென்று பத்திரிகைகளை எடுத்துக்கொண்டு தெருத்தெருவாய்ச் சுற்றி 7 மணிவரை விற்பனைசெய்வார்; பிறகு $8\frac{1}{2}$ மணிவரை ஒரு ரொட்டிக் கடையில் வேலை செய்துவிட்டு அதற்குப் பின் வேறு அலுவல்களை கவனிப்பார். இவ்வாறு பற்பல வேலைகளிலீடுபட்டு சம்பாத்தியஞ் செய்து வந்ததுடன் 9 மணி முதல் மாலை $4\frac{1}{2}$ வரை ஸ்கூலுக்குச் சென்று கல்வியும் பயின்று கொள்வார். பிறகு 6 மணி முதல் 10 மணி வரை ரொட்டிக் கடையில் வேலை செய்வார். அது பொழுது அவர் 10 வயதை யுடையவராக யிருந்தார்.

இந்நிலைமையில் ஒரு நாளன்று அவரது செயலால், தெருவில் பள்ளமேற்பட்டு விட்டதற்காக கெவர்ன்மெண்டார் அவர் வீட்டின் மீது 3 ஷிலிங் 6 பென்சு அபராதம் விதித்து விட்டார்கள். அதனால் அவரது தாயார் கோபமேலிட்டு நன்றாய்ப் புடைத்து விட்டாள். அவரது தாய் தந்தையர்கள் கஷ்டத்தோடு காலங்கழித்து வந்ததால், ராபர்லிட்டனை பட்டணத்திற்கு அழைத்து வந்து, ஒரு கறிக் கடையில் கூலி வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்து வைத்தார்கள். பிறகு 19 வயது வரை அவர் அங்கேயே வேலைசெய்து கொண்டிருந்ததில் மிச்சப் படுத்தி வைத்திருந்த 9 பென்சைச் கொண்டு ஒரு பாத்திரமும் ஒரு தகரக் குவளையும் வாங்கி அதில் மிட்டாய் செய்வதற்கு ஆரம்பித்தார். இவ்வாறு 2, 3 நாள் மிட்டாய் செய்வதும், பிறகு அதனைக் கூடையில் வைத்துக்கொண்டுபோய் விற்பதுமாக யிருந்து வந்தார். அது பொழுதே அவருக்கு "நல்ல சரக்காகத் தயாரித்து சொற்ப விலைக்கு விற்கவேண்டும்; சொற்ப லாபம் கிடைப்பதே போது" மென்னும் எண்ணம் மனதில் நல்ல விதமாக ஏற்பட்டிருந்தது. இதனைப் பார்த்தவுடன் அவரது தாய் தந்தையர்களும் அவ் வேலையில் அவருக்குத் துணை புரிய ஆரம்பித்தார்கள். இதன் மூலம் அவருக்குக் காரியம் கைகூடிய வரலாயிற்று. அதன் பின் ஒரு சைக்கில் வாங்கிக் கொண்டு அதிலேறி மிட்டாய் விற்கச்சென்று கொண்டிருந்தார். யாவரும் அவருடைய மிட்டாயின் மீது விருப்பங்கொண்டிருந்ததால் தயாராகும் சரக்குகள் முழுதும் உடனுக்குடன் செலவாய்க் கொண்டே யிருந்தது. அதற்கு பின் அவர் ஒரு கடையை ஏற்படுத்திக் கொண்டு, ஒரு குதிரைவண்டியையும் விலைக்கு வாங்கிக்கொண்டார். வியாபாரம் தக்க முறையில் நடக்க ஆரம்பிக்கவே, சிலகாலத்திற்கெல்லாம் மிட்டாய்செய்யும் ஓர் பெரும் தொழிற்சாலையை ஏற்படுத்திவிட்டார். பிறகு மோட்டார்வாகனம் ஏற்பட்டவுடன் பலவிதமான மோட்டார்களை வாங்கினர். 37 ஏக்கர் விஸ்தீரத்தில் "ராபர் லிட்டன்" என்னும் பெயரால் ஒரு ஊர் விளங்கிவருகிறது அதில் மிட்டாய்செய்யும் 19 தொழிற்சாலைகளிருக்கின்றது. இதுபொழுது அவர் 68 வயதினையுடைய ஒரு கோடீஸ்வர பிரபுவாய் விளங்கி வருகின்றார்.

சிறார்காள்! பார்த்தீர்களா? ஒரு ஏழையான குடும்பத்தில் பிறந்து கஷ்டதிசையில் காலங்கழித்துவந்த ஒருவர், தம் சுயப்பிரயாசையினால் ஒரு கோடீஸ்வரராய்த் திகழ்கின்றார். நீங்களும் மன ஊக்கத்தோடு கஷ்டப்பட்டு வேலையி லீடுபட்டுப் பிரயாசை எடுத்து வருவீர்களாயின் கூடியசிக்கிரம் ஜோசப்ராபர் லிட்டனைப்போல் கோடீஸ்வரராய்த் திகழ்வீர்களென்பது திண்ணம். "முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் வாக்கியத்திற்கேற்ப ஒவ்வொரு காரியத்திலும் குன்றா ஊக்கத்தோடு ஈடுபட்டுழைத்து ஜெயம்பெற்றுய்வீர்களாக.

கலப்பு விவாகப் பிரசாரத்தின் சூழ்ச்சி.

எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் சத்தியத்தைப் பிரகடனப்படுத்த முற்படவே, அதன் உண்மையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் பிரீதி ரோமச் சக்ரவர்த்தியாகிய ஹிர்கலுக் கேற்பட்டுவிட்டது. அதுகாலை இஸ்லாத்தின் பரம சத்துருவாகயிருந்த அபூஸூப்யானின் தலைமையின்கீழ் ஒருகூட்டம் மக்கமாநகரிலிருந்து வியாபார நிமித்தம் அங்கு வந்திருந்தது. எனவே ஹிர்கல் அரசர் அக்கூட்டத்தின் தலைவராகயிருந்த அபூஸூப்யானை தமதிருப்பிடமழைத்து "உங்களில் யாரும் இஸ்லாம்மதத்தைத் தழுவிக்கொண்ட பிறகுமறுபடியும் தங்கள் பழையமார்க்கத்தில் திரும்பிக்கொள்ளுகிறார்களா?" வெனக்கேட்டார். அதற்கு அபூஸூப்பான் "கிடையாது ஒருவன் இஸ்லாம் மதத்தைத் தழுவிவிடுவானாகில்,பிறகு ஒருபோதும் அதைவிட்டுத்திரும்புவதேகிடையாது" எனக் கூறினார். எனவே ஹிர்கல் அரசர் குறிப்பிட்டுக் கேட்ட விஷயமானது இஸ்லாத்தின் சிறந்ததோர் அற்புதமாகவே திகழ்கின்றது. ஒருவன் ஒருமுறை இஸ்லாத்தைத் தழுவிக் கொள்வானாகில், பிறகு எப்பொழுதும் அவன் அதனைவிட்டு விலகிக் கொள்வதற்கு நாடாதமுறையில் இஸ்லாத்தின் கட்டளைகளும், அதன் நிகரில்லாச் சீர்திருத்தங்களும் இலங்கிக்கொண் டிருக்கிறது ஒருக்கால் துர் அதிர்ஷ்டவசமாய் அன்னோன் இஸ்லாம் மதத்தை விட்டு விடக் கருதியபோதிலும், இஸ்லாம் அவனை ஒருக்காலும் விட்டுவிடா தென்பது திண்ணம். இஸ்லாம் மார்க்கத்தில் மிளிர்ந்து காணப்படும், தொழுகை, பாங்கு, ஜூம்ஆ, ஈதுப் பெருநாள், ரமலான், ஜகாத், ஹஜ்ஜூ, குர்பானி. பள்ளிவாசல், கத்னாச்செய்வது, விவாகமுறை முதலியயாவும் மனமகிழ்ச்சியை அளிக்கவல்ல கிரியைகளாகத் திகழ்கின்றது. எத்தனையோ ஹிருதயங்கள் இக்கிரியைகள்மீது மோகங்கொண்டு இஸ்லாத்தைப் பற்றிப் பூண்டு சிறப்புற்றிலங்கிக்கொண்டிருக்கிறது. சிலரின் ஹிருதயங்கள் இவைகளிலெதிலாகிலு மொன்றின்மீது அதிகப்பற்றுக் கொண்டு விடுவதால், மெள்ளமெள்ள அவையாவற்றுக் கிரியைகளையும் நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டுப் போகிறது.

ஓர்முஸ்லிமானவன் காபிரானவான, அல்லது முஷ்ரிக்காவாகிய பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள அனுமதி யளிக்காதிருக்கும் அனுஷ்டானமானது, மானிடர்களின் ஹிருதயங்கள் இஸ்லாத்தின்மீது ஸ்திரமாகயிருக்கும்படி செய்வதற்குள்ள ஓர் அரும் சாதனமாக யிலங்கிக்கொண்டிருக்கிறது. இஸ்லாத்தில் ஏற்பட்டுள்ள இவ்வாறான கட்டளையானது, தக்க ஒழுங்குரீதியை அடிப்படையாகக் கொண்டதா யிருக்கிறதென்பது திண்ணம். எனவே ஒரு காபிரானவனுக் கிடையிலும், ஒரு முஸ்லிம் மாதுக் கிடையிலும் சரியான மனோதிருப்தியை அளிக்கவல்ல சம்பந்தம் ஒருக்காலு மேற்படா தென்பது கண்கூடு. இது, தண்ணீரும் நெருப்பும் ஒன்று சேர்வதற் கொப்பாகும். தவிர, விவாகஞ் செய்து கொள்வது கொண்டு மானிடனின் நாட்டமானது, சந்தோஷத்தைஅனுபவிக்கவேண்டுமென்பதாகும். ஆகவே இவ்வாறான சந்தோஷத்தைக் காபிர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியா தாகையால், "அவர்களிடம் விவாக சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டா" மென அல்லாஹ் கட்டளையிட் டிருக்கின்றான்.

இதுகாலை ஆரிய ஜமாஜத்தாரின் தூண்டுதலினால், சுயநலங் கொண்ட ஹிந்து நண்பர்களிற் சிலருடைய மனதில் ஒருயோசனை ஊடாடிக்கொண் டிருக்கின்றது. அதாவது, ஏழ்மைத்தனத்தை யுடையவும், கல்வியறிவில்லாதவும், கடனாளியாகவுள்ளவும், மார்க்க ஏவல் விலக்கல்களை நன்கு தெரிந்திராதவுமாகிய முஸ்லிம்களை எவ்வகையிலும் மெஜார்ட்டியாகிய ஹிந்து சமூகத்தில் சேர்த்துவிட வேண்டுமென்பதே. இந்நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டுள்ள ஹிந்து சமூகத்தின் அறிவாளிகளான ஒரு கோஷ்டியினர், தங்கள்முழுப்பிரயாசையையும்உபயோகித்து எவ்வகையிலும் ஹிந்து முஸ்லிம்களுக் கிடையில் கலப்பு விவாகத்தை ஏற்படுத்திவிடவேண்டுமென்னும் நோக்கத்தோடு வேலைசெய்து வருவதாகத் தெரிகிறது. இந் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக இந்நோர் "சத்தியத்

திற்குக் கட்டுப்பட்டு நடக்குதல்" என்னும் பெயரால் ஒரு சங்கத்தை அமைத்திருக்கின்றனர். அதன்நோக்கம் "படைப்புகளுக்கிடையில் சம உரிமை பாராட்டுவது" என வெளிரங்கத்திலிருந்த போதிலும், அச்சங்கம்ஆற்றி வரும் வேலை முறையானது, ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே கலப்பு விவாகத்தின் பழக்கத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்பதே யாகும். இவ்வாறான கருத்துக்கொண்டிருப்போர் அபார தியாகத்தோடு இவ்வேலையிலீடுபட்டிருக்கின்றார்கள்.

மிக ஏழையாகிய ஒரு முஸ்லிம் மாது வாலிபப்பருவமுடைய ஒரு ஹிந்துவுடன் கூடி வாழ்வதற்குப் பிரியப் படுவாளா? இவ்வாறே ஒரு முஸ்லிமிடம் ஜாதிஹிந்து மாதொருத்தியை ஒப்புவிக்க சம்மதிப்பார்களா? ஆகவே இவ்வாறான முறையைக்கையாள வேண்டுமெனக் கூறித்திரியும் ஒரு சிலரின் கருத்தானது, ஹிந்து முஸ்லிம்களுக் கிடையில் விவாக ஒப்பந்தஞ் செய்து கொள்ளுவது கூடாதகாரியமென சன்மார்க்கத்தில் விலக்கப்பட்டிருப்பதை மாற்றி யமைத்துவிட்டால், எண்ணிக்கையில் மிகுதமாகயிருக்கக்கூடியவும், கல்வியும் செல்வாக்கும் பெற்றிருக்கக் கூடியனவுமாகிய ஒரு சமூகம், ஏழையாகவும் எண்ணிக்கையில் கம்மியாகவுமிருக்கக்கூடிய சிலரின் மார்க்கத்தில் தலையிட்டு அதனை அழித்துவிடுவதும், அதனை பலக்குறைவுடையதாகச் செய்து விடுவதும் வெகுசுளுவிலாக்கக்கூடிய காரியமாகுமென்பதே அன்னோரின் நோக்கமாகும். ஆகவே ஹிந்துக்களுடன்கலப்பு விவாகஞ்செய்து கொள்வதினால், முஸ்லிம்களின் மார்க்கத்திற்கே ஹானி ஏற்பட்டுவிடும்; அவர்களின் உறுதியான (அகீதா) மார்க்க நிர்ணயங்களுக்கு உலைவைக்கப்பட்டுப் போய்விடும்; அவர்கள்மார்க்க அனுஷ்டானம் புரிவதற்கு தடை ஏற்பட்டுவிடும்; அவர்களுக்கேற்படும் சந்ததிகள் மெஜாரிட்டி வகுப்பாரின் நடவடிக்கைகளைப் பின்பற்றி நடக்கமுற்பட்டு விடுவர். கடைசியாக முஸ்லிம்கள் சன்மார்க்கத்தை இழந்து பரிதபிக்கத்தக்க நிலைமைக்கன்றோ ஆளாய்விடும்படி நேர்ந்துவிடும். அந்தோபரிதாபம்?

அச்சங்கமானது ஹிந்து முஸ்லிம்கள் யாவரையும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டு ஒவ்வொருவரும் கலப்புவிவாகத்தைக் கைக்கொண்டு நடக்கவேண்டுமென்னும் உறுதிமொழியையும் வாங்கிக்கொண்டு விவாகத்திற்காகவேண்டிய பஹிரங்க அறிக்கையும் வெளியிடுகிறது. அவர்களுடைய இவ்வலையில் யாராகிலும் மூடாத் மாக்கள் சிக்கிக்கொண்டு கலப்பு விவாகம் (விபசாரம்) செய்து கொள்வார்களாயின் அக்கோஷ்டியினர் பெரும் பெருமையோடு, உலகோர்க்கு அதனை எடுத்துக்காட்டி, இதரர்களையும் அம்முறையைப்பபின்பற்றி நடக்கும்படி செய்வதற்கு முயற்சித்து, அடைபட்டிருக்கும் தலைவாயலை திறந்துவைத்து விடுகின்றனர். துர்அதிர்ஷ்டவசமாய் நம்தென்னாட்டிலுங்கூட அறியாத-சன்மார்க்கத்தின் வாடைகூட வீசாத ஒரு சில மூடமக்கள் இவ்வாபாஸ அனுஷ்டானம் புரிய முற்பட்டிருப்பதை காதியானிப் பத்திரிகை ஆதரித்து அதனைப்பிரகடனப்படுத்தி யிருப்பது இழிவுக்குறியதல்லவா? ஆகவேமுஸ்லிம்காள்! இந்த சூக்ஷியான மாயவலையில் சிக்கிகொள்ளாது ஜாக்கிரதையாகயிருங்கள். மாயவலையின் பக்கல் மனம்திரும்பாது சன்மார்க்கக் கட்டளையின்மீதே மனதை ஸ்திரமாக்கிவைக்கும்படி அல்லாஹ்விடம் இறைஞ்சிக்கேளுங்கள். பெண்ணாசையானது ஈமானை பலக்குறைவுடையதாகச் செய்யக்கூடிய சக்தியினையுடையதாகயிருக்கிறது. கிறிஸ்துவமாதுக்கள் நம்முடைய அமீர்கள், தலைவர்கள் சுல்த்தான்கள், இளைவாலிபர்களான மாணாக்கர்கள் முதலானோரைத் தங்கள் மாயவலைக்குள் சிக்கவைத்துக் கொண்டுள்ள காக்ஷி நம் கண்முன் இன்றும் நின்று சாக்ஷியங் கூறிக்கொண்டிருக்கிறது. இதேமுறையைத்தான் இந்தியாவின் கண்வதியும் ஒருசில ஹிந்துக்களும் கையாளப் பஹீரதப்பிரத்தினஞ் செய்துவருகின்றனர். இவ்வாறான நெருக்கடியான சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் அதில் சிக்கிக்கொள்ளாமல் அவர்களைக் காப்பாற்றக்கூடியவை அல்லாஹ்வின் கிருபையே யன்றி வேறில்லை என்பது திண்ணம்.

ஆகவேநாம் ஒவ்வொருவம் "யா அல்லாஹ்! வெளிரங்கத் தோற்றத்தில் முன்னேற்றத்தை அளிக்கவல்ல சீர்திருத்தமெனக் கூறப்பட்டு, அந்தரங்கத்தில் முஸ்லிம்களை பாதாளத்தில் தாழ்த்துவதற்குக் காரணமாக யிருக்கும் கலப்பு விவாகமென்னும் பெரும் வியாதியில் நாங்கள் சிக்குண்ழலாமல் காப்பாற்றி வைப்பா

யாக''வென இறைஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டியது நம்மீதுள்ள முக்கியக் கடமையாகுமென்பதை யாரே மறுக்கவல்லார். அல்லாஹ் (ஜல்) நம்மெல்லாருக்கும் மானிடனை நாசமாக்கி விடக்கூடிய அப்படு குழியில் விழாதிருக்கும்படி செய்வானாக.

புகழுரை.

(ஜனுப் த. சே. பா. முஹம்மது ஜமாலுத்தின் வரைவது.)

இஸ்லாத்தின் பாதுகாப்பே! இவ்வருட மனக்களிப்பே!! வருக, வருக. கண்ணியமோடு இக்காசினியில் நின்றிலங்கும் கதிரவனே வருக, வருக. கற்றறியாமாந்தரென்ன, கற்றறிந்தோர் யாவரும் கலக்கமற கண்ணியமோடு வாழ்வதற்கு வழிகாட்டியாயிலங்கும் கலங்கரை விளக்கே வருக, வருக. இத்தமிழ்நாடென்ன? இலங்கை பர்மா, மலாயா, ஜாவா, கொச்சின் சைனா முதலிய நாடுகளிலெல்லாம் உலவி, அஞ்ஞானமென்னுமிருளை அடியோடொழித்து மெய்ஞ்ஞானமென்னும் சுடர் ஓங்கி வளரச் செய்த உத்தம திலகமே வருக, வருக. கபட காதியானிகள் மறைவாக நின்று மாயவலை வீசி, என் போன்ற இளைஞர்களைத் தங்கள் தீயக்கொள்கையில் சிக்கவைக்க பஹீரதப் பிரயத்தினஞ் செய்து வருவதைக் கண்டு, அன்னோரின் விஷங்கலந்த துர்ப்பிரசாரம் தூய்மையான மனதில் ஊடுருவிப் போகாது, சத்தியத்தை எடுத்துரைக்கக் கிளம்பிய திலகமே வருக, வருக. மறைமுகமாக மாந்தரின் ஈமானைக் கெடுத்துக் கொண்டிருக்கும் வியாதியைப் போக்க முன்வந்த ஔஷதமே வருக, வருக. இஸ்லாத்தில் காணப்படும் அனாச்சாரங்களையும் ஷிர்க்கு பித்அத்துகளையும் ஒழிக்க முற்பட்டிருப்பதாகப் பாசாங்கு செய்து, உண்மையில் மறைமுகமாய் அவைகளுக்கு ஆதரவளித்துவந்த கபடவேஷத்தைக் கண்டுபிடித்த கதிரவனே வருக, வருக. தமக்கு யாரும் நிகரில்லை என பறைசாற்றி மமதை கொண்டிருந்ததை அடக்கித் திணற வைத்த திலகமே வருக, வருக.

சென்ற மூன்றாண்டுகளாய் நடுப்பகற் கதிரவனே போன்று தமிழ் முஸ்லிம்களுக்கிடையே ஜ்வலித்துத் தன்பணியை வெகு திறமையாக ஆற்றி வந்த பாதுகாவலனே வருக, வருக. ஆணித்தரமான கடாவுகளைக்கொண்டு போலிகளை அலறச் செய்துவிட்ட அரும் அமிர்தமேவருக, வருக. உமது வரவு நல்வரவாகுக.

தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் ஆகிய இம்மூன்றையும் அணிகலனாய்ப் பூண்டு தத்துவஞான ஜோதியை உத்தம முஸ்லிம்களுக்கு சுத்தமாய் அளித்துவரும் உம்மை கல்வி அறிவிற் சிறந்தோர் போற்றுவது ஒரு பக்கல் கிடக்க, கல்வி அறிவில்லா மாந்தருங்கூட கண்டு களிக்கும்விதமாய் நின்றிலங்கும் காக்ஷியை எவரே மறுக்கவல்லார்.

நண்பர்காள்! ஹிபாஜத்தென்னும் நறுமணம் வீசும் நண்பன், சென்ற 3 ஆண்டுகளாய் நம்மெதிரே தோன்றி ஆற்றிவரும் அரும் பெரும் பணிகளை எவர்தான் புகழாதிருக்க முடியும்? அதன் பிரசாரத்தால் என் போன்ற எத்தனையோ வாலிபர்கள் சன்மார்க்கத்தைப்பற்றிப் பூண்டுகொண்டிருக்கின்றார்களென்னும் உண்மை வெள்ளிடைமலைபோல் இலங்கா நிற்பது கண்கூடு தவிர காதியானிப் பிரசாரத்தில் மயங்கிக் கிடந்த எத்தனைபேர்கள் அதனை விட்டகன்று தௌபாச் செய்துள்ளார்களென்பது நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து நன்கு துலக்கமாகிறதல்லவா?

தவிர இஸ்லாத்தின் பாதுகாவலன் தோன்றி இச்சொற்ப காலத்திற்குள் ஆற்றிய அருந் தொண்டுகள் அனந்தமாகும். எத்தனையோ அனாச்சாரங்கள் ஒழிக்கப்பட்டுப் போயிற்று. மட்டில்லா மார்க்கமுரணான கூற்றுக்கள் மறுக்கப்பட்டுப் போயிற்று. எத்தனையோ உண்மைகள் வெளிப்படலாயிற்று. கடபவேஷத்தின் குட்டு வெளிப்பட்டுப் போயிற்று. போலிப் பிரசாரத்தின் சாயம் வெளுத்து மங்கிப்போயிற்று?

சோதரர்காள்! இத்தியாதி அரும் பெரும் தொண்டாற்றி வரும் அருஞ்சோதிக்கு நீங்கள் புரியும் பேருபகாரமென்ன? அதனை நன்கு வாசித்துப் பார்த்துப் பிரயோசன மடைவதேயாம். உங்களது ஊக்கந்தான் அதனை இன்னும் தக்க தொண்டாற்றும்படி செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இதுகாறும் ஹிபாஜத்தின்மீது அன்பு பூண்டு ஆதரித்து வந்ததைப்போல் இனியும் ஆதரித்து வரவேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள முக்கியக் கடமையாகும். அன்பர்காள்! முஸ்லிம்களின் ஆதரிப்பின்றி இஸ்லாமிய மாசிகை பத்திரிகைகள் நடைபெறுவது முடியாதென்பது திண்ணம். மேலும் தற்கால நிலைமையை நன்குணர்ந்து பார்ப்போமாகில் இஸ்லாமியப் பத்திரிகைகள் எவ்வளவு அவசியமென்பது நன்கு புலனாகும்.

சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவா! உனது கிருபாகடாக்ஷத்தால் ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் நான்காம் ஆண்டின் இதழ்கள் முஸ்லிம் நண்பர்களுக்கு நற்பயனை அளிக்க வல்ல சாதனமாகத் திகழும்படி செய்வாயாக.

ஆசிரியர் குறிப்புகள்.

அலஹபாத் ஒற்றுமை.—நமது தாய்நாட்டில் வாழும் மெஜாரிட்டி வகுப்பினர்களாகிய ஹிந்துக்களுடன் அரசியல் விஷயத்தில் எவ்வகையிலும் ஓர் சமரசஞ்செய்து கொண்டுவிட வேண்டுமென்னும் எண்ணம் நமது மாபெரும் தலைவர் மௌலானா ஷவ்கத் அலீ அவர்களுக்கு ஏற்பட்டு, முயற்சித்ததின் பலன் கடைசியாக அலஹாபாத்தில் இன்று வெளியாய்விட்டது. அம்மகாநாட்டில் கலந்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் எத்துணையோ விஷயங்களில் ஹிந்து - சீக்கியர்களுக்கு அபரிமிதமான சலுகைகாட்டி நடந்துகொண்டும் அம்மகாநாடு யாதொரு பிரயோஜனத்தையும் அளிக்காது போனது வருந்தத்தக்கதே யாகும். முஸ்லிம்கள் அம் மகாநாட்டைக் கூட்ட முயற்சித்து சமரசத்திற்காக வேண்டி தங்கள் உரிமைகளைத் தாராளமாக விட்டுக்கொடுத்தும் ஹிந்துக்களிலுள்ள ஒரு சில சுயநலமிகளால் மகாநாடு பலன்பெறாது முறிந்துவிட்டது விசனிக்கத்தக்கதேயாம். இனியாகிலும் சிதறுண்டு கிடக்கும் முஸ்லிம் சமுகம் ஒன்றுபட்டு தேச முன்னேற்றத்திற்காகவும் சமுகப் பாதுகாப்பிற்காகவும் உழைக்க முன் வருமென நம்புகிறோம்.

கமாலின் மடமை:—"அல்லாஹ்" வென்ற முபாரக்கான திருநாமத்தின் பதத்தை ஒழித்து அதற்குப் பதிலாய் துருக்கிய பாஷையில் அப்பதத்தின் பொருளைக் கொடுக்கும் "தான்ரீ" என்னும் பதத்தை உபயோகிக்க வேண்டுமென துருக்கி கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருக்கிறதாகத் தெரிகிறது. அது அவ்வாறு நிகழ்வுற்றிருக்குமாயின், அதனை நமது துர்அதிர்ஷ்டமென்றும், துருக்கியர்களின் நாசகாலத்தின் அறிகுறி யென்றும் கருத வேண்டியிருக்கிறது. முஸ்தபாகமால் அதிகாரப் பதவி வகிக்க ஆரம்பித்தது முதல் எத்துணையோ மார்க்க முரணான விஷயங்களில் தலையிட்டு வந்தது போதாமல் இதுபொழுது "அல்லாஹ்" விலேயே கைவைக்க முற்பட்டு விட்டார். ஆதலால்தான் இத்தலையீடானது அன்னவர்களின் நாசகாலத்திற்குள்ள செயலாகுமென தைரியமாய்க் கூறுகின்றோம்.

ஆள்வார் முஸ்லிம்களின் பரிதாபம்:—ஆள்வார் சமஸ்தானத்தில் நடைபெற்று வரும் குழப்பங்களால் நமது முஸ்லிம் சமுகம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பது யாவருக்கும் நன்கு தெரிந்தவையே. இன்னிமையில் ஹிந்துப் பத்திரிகைகளிற் சில, சமஸ்தானத்தின் கண் வாழ்ந்து வரும் முஸ்லிம்களை அடியோடு ஒழித்துவிட சமஸ்தானம் முயற்சிக்க வேண்டுமென தூண்டுதல் செய்து துர்ப் பிரசாரம் புரிந்து வருகின்றது. இது எவ்வளவு தூரம் பொருத்தமுடையதாகுமென்பது சாமான்யர்களுக்கும் நன்கு புலனாகும். இத்தகைய குரோத மனப்பான்மை கொண்ட ஒரு சில பத்திரிகையின் அடாத செயல்களினால்தான் பற்பல இடங்களில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு பங்கமேற்பட்டு வேற்றுமை தோன்றி கலகங்களேற்பட்டு விடுகின்றது.

காலண்டர்கள் வரவு.

R. E. முஹம்மது காஸிம் & Co.—சிங்கப்பூர், பினங், கிள்ளான், ரங்கூன், மதராஸ், கல்கத்தா முதலிய இடங்களில் பிரபல்ய வியாபாரம் நடத்திவரும் மெஸர்ஸ் R. E. முஹம்மது காஸிம் & Co. அவர்களது கம்பெனியாரின் காலண்டரொன்று, சென்னை பிராஞ் ஆபீஸிலிருந்து வரப்பெற்றோம். அது தக்கமுறையில் கண்கள் கவரத்தக்கவிதமாய் அமைந்து அட்டையில் கிள்ளான் ஹெட் ஆபீஸ் கட்டடம் வரையப்பட்டிருக்கிறது.

S. M. சுலைமான் சாஹிப் & Co. சென்னை பிரபல்ய கைலி வியாபாரியும், கமிஷன் எஜண்டுமாகிய மெஸர்ஸ் S. M. சுலைமான் சாஹிப் & Co. விடமிருந்து, இங்கிலீஷ், அரபி, தமிழ் ஆகிய மூன்று பாஷைகள் அமைந்ததாயும் தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும் உள்ள காலண்டரொன்று வரப்பெற்றோம். அதன் அட்டையில் வரையப்பெற்றிருக்கும் மஜ்ஜிதின் தோற்றமானது கண்களைக் கவரத்தக்கனவாகயிருக்கிறது.

M. M. முஹ்யித்தீன் தம்பி & Co.-சென்னை பிரபல்ய தோல் வியாபாரியும், கமிஷன் எஜண்டுமாகிய மெஸர்ஸ் M. M. முஹ்யித்தீன் தம்பி & Co. அவர்களிடமிருந்து அரபு இங்கிலீஷ், தமிழ் மூன்று தேதிகளும் 3-வர்ணங்களில் அச்சிடப்பட்டதாயும், மாதமொரு ஷீட் கிழிக்கக் கூடியதாயுமுள்ள நேர்த்தியான காலண்டரொன்று வரப்பெற்றோம்.

S. E. S. அப்துல்கரீம் & பிரதர்ஸ்.—சென்னை பிரபல்ய கைலி வியாபாரியாகிய மெஸர்ஸ் S. E. S. அப்துல் கரீம் & பிரதர்ஸிலிருந்து 3 தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பெற்ற மாதமொரு ஷீட்டுள்ள காலண்டரொன்று வரப்பெற்றோம். அதில் அவர்களின் வியாபாரக் குறியாகிய துருக்கித்தொப்பி தக்கமுறையில் பொறிக்கப்பட்டு பினங்பிராஞ்சின் விலாசமும், ஸோல் ஏஜெண்டின் பெயரும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

A. M. அப்துல்லா சாஹிப் & Co. சிங்கப்பூர் பிரபல்ய வர்த்தகரும், கமிஷன் எஜண்டுமாகிய மெஸர்ஸ் A. M. அப்துல்லாஹ் சாஹிப் கம்பெனியாரிடமிருந்து ஷீட் காலண்டரொன்று சென்னையிலுள்ள அவர்களது பிராஞ்சு ஆபீஸாகிய மெஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் ஸன்ஸிலிருந்து வரப்பெற்றோம்.

ஜெயரஸம் டிபோ.—அய்யம்பேட்டை பிரபல்ய ஒளஷதாலயமாகிய ஜெயரஸம் டிபோவின் புரோப்ரைட்டராகிய ஜனாப் A. K. முஹம்மது சுல்த்தான் சாஹிப் அவர்களிடமிருந்து அழகிய காலண்டரொன்று வரப்பெற்றோம். அது 3 தேதிகளையுடையதாகவும், தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும் அதன் அட்டையில் சுல்த்தானியா படைமருந்து, ஜெயரஸம், பற்தூள் ஆகிய ஒளஷதங்களின் குண சிலாக்கியங்களை நன்கெடுத்துக்காட்டும் விதத்தில் விளம்பரஞ் செய்யப்பட்டதாயுமிருக்கிறது. அதில் மிளிர்ந்துகொண்டிருக்கும் இளம்பிறையின் தோற்றமானது, மனக்கவர்ச்சியை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கிறது.

J. M. முஹம்மது இஸ்மாயீல் & பிரதர்ஸ்.-சைகோன் பிரபல்ய வியாபாரியும் லாண்டு ஓனருமாகிய மெஸர்ஸ் J. M. முஹம்மது இஸ்மாயீல் & பிரதர்ஸிலிருந்து அழகிய ஷீட் காலண்டரொன்று வரப்பெற்றோம். அது கிலிட்டைக்கொண்டு அலங்கரிக்கப்பட்டதாகவும் பார்ப்பவர்களின் மனதைக் கவரச்செய்யக் கூடியதாகவு மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

கமால் நைனா & Co.—கண்டி பிரபல்ய இரும்பு வியாபாரியாகிய மெஸர்ஸ் கமால் நைனா கம்பெனியாரிடமிருந்து ஷீட் காலண்டரொன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் அதன் அட்டையில் அக் கம்பனியில் கிடைக்கும் பலவாறான சாமான்களில் முக்கியமானதை நன்கு துலக்கப்பட்டதாகவுமிருக்கிறது.

S. M. K. ஷாஹுல் ஹமீது & Co.—சென்னை அங்கப்பன் தெருவு பிரபல ஜவ்ளி அண்டு தேயிலை வியாபாரியாகிய மெஸர்ஸ் S. M. K. ஷஹுல் ஹமீது கம்பெனியாரிடமிருந்து 3 தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பெற்ற மாதமொரு ஷீட்டுடைய காலண்டரொன்று வரப் பெற்றோம். அதில் அவர்களது வியாபாரக் குறியாகிய H. D. துருக்கித் தொப்பியின் அழகிய படம் தக்க முறையில் வரையப் பெற்றிருக்கிறது.

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப, ௸ கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனால் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைக் கண்ட, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசனமேற்படுமெனக் கருதியதாலும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில் நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும், அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர்பார்க்கின்றோம்.

கிரயம் ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

F. M. S.& S. S. ஏஜெண்டு,
மெஸர்ஸ். K. A. பகீர் முஹம்மது சாஹிப் & Co.,
27, ரம்பா ஸ்டீட், கிள்ளான்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.